


# அமைதியின் குரல்

ஜனசங்கதய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியின் குரல்

(சம்பவத் தொகுப்பு)

தமிழில்:
திக்குவல்லை கமால்

வெளியீடு:
ஜனசங்சதய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அமைதியின் குரல் | Amaithiyin Kural |
| முதற் பதிப்பு- 2010 | -First Print |
| மொழி பெயர்ப்பு: திக்குவல்லை கமால் | Translated By: Dikwelle Kamal |
| கணனி அச்சமைப்பு: எஸ்.எஸ்.குமாரி | Type Setting S.S.Kumari |
| அட்டையமைப்பு: மேமன்கவி | Cover Designed By: Memonkavi |
| அனுசரணை: ஆசிய மனித உரிமைக் கமிஷன் | By Courtesy of : Asian Human Rights Commision |
| வெளியீடு ஜனசங்சதய 81/2 ஆதர் வீதியெஸ்மாவத பாணந்துறை | Published By: Janasansathaya 81/2 Arthur V Dias Mawatha Panandura |
| பெக்ஸ்/தொ.பே.: | T.P/FAX |

0382235191

ஈமெயில் e.mail

manava@sltnet.lk

ISBN: 978-955-1687-27-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனத்திரை

இப்புத்தகத்தின் நோக்கம் சர்வசாதாரணமானது. பொது மக்களின் உண்மையான கதைகளை யாவரும் அறிய சந்தர்ப்பம் வழங்குகிறது. சில சம்பவங்களைப் பயம், வெட்கம், காரணமாக எல்லோரும் எல்லோரிடமும் சொல்வதில்லை.

இப்படிப்பட்டவர்களுக்கு ஜனசங்சதய நிழல் கொடுக்கிறது. அதனால் தான் அவர்கள் அங்கே வருகிறார்கள். மோசடி, இலஞ்சம், அச்சுறுத்தல், துஷ்பிரயோகம், அகங்காரம், பயமூட்டல் போன்றவற்றுக்கு ஆளானவர்கள், எந்தத் தடையுமில்லாமல் ஜனசங்சதயவுக்குத் தங்கள் கதையைச் சொல்கின்றனர். இப்படியானவர்கள் கிராமம், நகரம் என்ற வேறுபாடின்றி பலபக்கமிருந்தும் வருகின்றனர். வெளிநாடுகளிலிருந்தும் கூடத் தம்மைச் சார்ந்தவர்களின் பிரச்சினைகளைத் தொலைபேசி மூலமாக எம்மோடு கதைக்கின்றனர். சட்ட உதவி, மானசீக ஆலோசனை, சிலபோது நிதியுதவி மூலமாகவும் ஜனசங்சதய அவர்களுக்கு உதவுகிறது.

எமது தொண்டர்கள் அவர்களைத் தேடிக் கொண்டு பின்தங்கிய கிராமங்களுக்குக் கூடச் செல்வார்கள். அவர்களோடு கலந்துரையாடி, அவர்களுக்கு எவ்வாறு உதவ வேண்டுமென்பதைக் கண்டறிவார்கள். பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினை ஜனசங்சதயவின் பிரச்சினையாக மாறும்.

ஜனசங்சதய பல்வேறு கண்காட்சிகளை ஒழுங்கு செய்யும். மனித உரிமைகளை அறிமுகப்படுத்தல், இம்சையை இல்லாதொழித்தல், பாடசாலைகளில் சரீரத் தண்டனைகளைத் தவிர்த்தல், மோசடிகளை அகற்றல் போன்ற விடயங்கள் கண்காட்சிக்குக் கருப்பொருளாகும்.

பாதிக்கப்பட்டு ஜனசங்சதயவுக்கு வரும் பலர் பின்னர் அப்பகுதித் தலைவர்களாக மாறியுள்ளார்கள். அதிகாரமுள்ளவர்கள் அதனைத் தவறாகப் பிரயோகிக்கும் போது, அதற்கெதிரான செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதில் பங்களிப்புச் செய்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனசங்கதயவுடன் சம்பந்தப்பட்ட இந்தச் சம்பவங்களைப் பொதுமக்கள் கோணத்திலிருந்து முன் வைக்கிறோம். கதைப் பின்னணி, இடம், பெயர்களில் நன்மை கருதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

முதலில் Daily Mirror பத்திரிகையில் Voice of Voiceless என்ற பத்தியில் தொடராக வெளிவந்தது. பின்னர் அது ஆங்கிலத் தொகுப்பாகியது. தொடர்ந்து சிங்களத்திலும் வெளிவந்தது. இப்பொழுது தமிழில் வெளிவருகின்றது.

உங்கள் ஆதரவு எமது பணித் தொடரை மேலும் துரிதப்படுத்தும்.

***ஜனசங்சதய***

***2010-மார்ச். 20***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 01. எல்லையற்ற கண்ணீர்க் கதை- | 01- 03 |
| 02. யார் மன்னன்?- | 04- 06 |
| 03. அறிவைப் போஷிக்கும் பாடசாலை- | 07- 09 |
| 04. சீமாலியின் கவலை ததும்பும் கதை- | 10- 13 |
| 05. அழகிய கனவு நனவாகுமா?- | 14- 16 |
| 06. பொலீஸ் கெட்டித்தனம்- | 17- 19 |
| 07. வதைக்கதை இரண்டு- | 20- 23 |
| 08. தருவின் தலைவிதி- | 24- 26 |
| 09. திருடன் பிடிக்கும் முறை- | 27- 29 |
| 10. 'ஆதர்ஷ' ஆசிரியை- | 30- 33 |
| 11. மாதாந்த இலக்கு- | 34- 36 |
| 12. ஆசிரியர்களின் பொலிஸ்- | 37- 39 |
| 13. தூங்கிச் செத்த மீனவன்- | 40- 42 |
| 14. அந்த அதிபர் இன்னும் பாடசாலை செல்கிறார்- | 43- 45 |
| 15. காதல் கதைகள்- | 46- 47 |
| 16. சிந்துவின் சோகப் பாடல்- | 48- 50 |
| 17. புத்தரின் ஒளியும் பொலிஸ் ஒளியும்- | 51- 53 |
| 18. இப்படியும் ஒரு பாடசாலை- | 54- 56 |
| 19. ஆசிரியப் போர்வையின் செல்வாக்கு- | 57- 60 |
| 20. கண்களைக் குருடாக்கும் டாக்டர்- | 61- 63 |
| 21. அடி உதை வாங்கு; அமைதியாய் இரு- | 64- 66 |
| 22. அநீதிக்கெதிராய் எழுந்த குடும்பம்- | 67- 70 |
| 23. அவரது பெயர் தர்மகீர்த்தி- | 71- 73 |
| 24.பொலீஸ் நிலையத்தில் ஹிட்லர்- | 74- 76 |
| 25. வஞ்சப் பேயின் சீற்றம்- | 77- 78 |
| 26. எங்களிடம் மட்டுமே ரியூஷன் எடுங்கள்- | 79- 82 |
| 27.முதியோர் இல்லத்திலிருந்து நடுத்தெருவுக்கு- | 83- 85 |
| 28. கலைந்து போன நடிகைக் கனவு- | 86- 88 |
| 29. 'தமிழன்' என்ற அவலம்- | 89- 92 |
| 30. திடீர் விபத்தும் வைத்திய சிகிச்சையும்- | 93- 96 |
| 31. குடியும் அடியும் | 97- 99 |
| 32. ஊனமுற்றவனுக்குச் செய்த உதவி- | 100-102 |
| 33. புத்தாண்டு பூத்தது- | 103- 104 |
| 34. தலையைக் கருங்கல்லில் அடித்தல்- | 105- 107 |
| 35. மாடுகளை விடுதலை செய்த புண்ணியம் பொலீஸாருக்கு- | 108- 109 |
| 36. சிறுமியை வல்லுறவு செய்த பாடசாலை- | 110- 112 |
| 37. தவறு........?- | 113- 115 |
| 38. காணாமல் போன பென்சில்- | 116- 118 |
| 39. சட்டம் யாருக்கு?- | 119- 121 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. எல்லையற்ற கண்ணீர்க் கதை

இருபத்தேழு வயதான லாலனீ வரிச்சுச் சுவர் கொண்ட குடிசையொன்றில் வாழ்ந்து வந்தாள். அவளது கணவன் கொழும்பில் மேசன் தொழில் செய்தான். மூன்று பிள்ளைகள் கொண்ட குடும்ப வாழ்வுக்கு அந்த வருமானம் எந்தவகையிலும் போதுமானதாக இல்லாததால் அவள் ஊரில் வீட்டு வேலைக்குச் சென்றாள்.

அன்று இரவு கடும் மழையால் வீடு நனையத் தொடங்கியது. அதனால் மூத்த பிள்ளைகள் இருவரையும் அயல் வீட்டில் தூங்கச் செய்துவிட்டு அவள் இளைய பிள்ளையை அணைத்தபடி நித்திரைக்குச் சென்றாள்.

வெளியே கேட்ட ஏதோ சத்தத்தின் காரணமாக, கடும் தூக்கத்திலிருந்த லாலனி திடுக்கிட்டு விழித்தாள். கறள் பிடித்துப் போன சுவர் மணிக்கூடு நள்ளிரவு ஒரு மணியென்பதைக் காட்டியது.

வீட்டின் முன்னே இரண்டு முச்சக்கர வண்டிகள் நின்றன. பலகைக் கதவைத் தள்ளி விழுத்திக் கொண்டு வீட்டினுள் புகுந்த ஏழு ஆண்களும் லாலனீயைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். பயந்து கத்திக் கொண்டு அவள் வெளியே பாய எத்தனித்த போதும் அவர்கள் விடவில்லை. தூசணம் பேசி அவளைக் கட்டிலில் தள்ளிக் கதவை மூடினர். “சத்தம் போட்டாயோ உன்னையும் உன் பிள்ளையையும் கொன்று விடுவோம்” என்று அவர்கள் எச்சரித்தார்கள். அழுத பிள்ளைக்கு ஒருவன் அடித்துப் பயம் காட்டினான். பிள்ளையின் ஓலம் லாலனீக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கெட்டவர்கள் அவளது உடையைக் கலைவதற்கு எடுத்த முயற்சி அவர்களது நோக்கம் என்னவென்பதை அவளுக்குத் தெளிவுபடுத்தியது. அவர்களுக்கு மத்தியில் அப்பகுதியைச் சேர்ந்த இரண்டு பிரபல கேடிகளை அவளால் இனம் கண்டு கொள்ள முடிந்தது. அப்பாவியான அவளால் அவர்களின் மிருக்கத்தனமான ஆசைக்கு இரையாகவே நேர்ந்தது.

ஐந்து பேர் லாலனீயைக் கெடுத்தனர். ஒருவன் இரண்டு தடவை கெடுத்ததோடு, இருவர் அந்தக் காட்சியை கெமராபோன் மூலமாகப் படம் பிடித்தனர். அவளது காயப்பட்ட நிர்வாணம் கூட கெமராவுக்குள் சிக்கியது. இந்த மிலேச்சத்தனமான காரியம் அதிகாலை மூன்று மணிவரை தொடர்ந்தது. அவள் அதிகாலையில் பொலீஸுக்குச் செல்ல யோசித்தாள். பாதையில் தடைகள் போடப்பட்டிருந்தன. இருபக்கமாகவும் வெற்றுச் சாராயப் போதல்களை அவள் கண்ணுற்றாள். அவள் கொழும்புக்குச் சென்று கணவனிடம் நடந்த விடயங்களை விபரித்தாள். தான் அவசரமான கொந்தராத்து வேலையொன்றில் ஈடுபட்டிருப்பதாகவும் அதைக் கைவிட்டால் வருமானம் இல்லாமல் போய்விடுமென்றும் கூறி பொலீஸில் சென்று முறையிடுமாறு ஆலோசனை கூறினான்.

முறைப்பாட்டைப் பதிவு செய்த பொலீஸார், அவளை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தினர். உள்ளூர்க் கேடிகள் இருவரையும் பற்றியும் அவள் அந்த முறைப்பாட்டிலே தெரிவித்தாள். ஒருவன் இராணுவத்தில் வேலை செய்யும் சிவில் அதிகாரி, அடுத்தவன் முச்சக்கர வண்டிச் சாரதி. அவ்விருவரும் 'ஆமிபெடோ', 'நட்டா' எனும் குழுப் பெயர்களால் ஊரில் பிரபலமாகியிருந்தனர்.

முறைப்பாட்டுக்கமைய குறிப்பிட்ட இடத்தைப் பொலீஸார் வந்து பார்க்கவேயில்லை.

அவ்விடத்தைக் கழுவித் துப்புரவு செய்யும்படி அவர்கள் தெரிவித் தனர். திரவ நிலைச் சாட்சி வீட்டில் காணப்பட்ட போதும், அவற்றைப் பெற்றுக் கொள்ள பொலீஸார் அக்கறை கொள்ளவில்லை. அவள் ஏழையென்பதால் பொலீஸார் அலட்சியம் செய்தனர். சட்டத்தரணியொ ருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ள அவளால் முடியாதென்பதை அவர்களறிவர். உதவி ஒத்தாசை செய்ய அரசியல்வாதிகளோ, நண்பர் களோ, உறவினர்களோ இருக்கவில்லை.

இந்தச் சம்பவத்தை நாம் அறிக்கைப்படுத்தும் போது, ஐம்பத்தைந்து நாட்கள் நகர்ந்திருந்தன. குற்றவாளிகளிடம் கேள்வி எழுப்பப்பட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கவில்லை. அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கவுமில்லை. தமது கெட்டித்தனத்தைப் பற்றிப் பிதற்றியபடி, ஊரவர்களையும் எச்சரித்துக் கொண்டு கேடிகள் சுதந்திரமாக நடமாடினர். சண்டியர்களைப் பற்றிய பயம் காரணமாகக் கிராமவாசிகள் எவரும் சாட்சி சொல்ல முன்வரவில்லை. பொலீஸ் பாதுகாப்புத் தங்களுக்கு கிடைக்குமென்று அவர்கள் நம்பவில்லை. கேடிகளின் உறவினர்களும் நண்பர்களும் முறைப்பாட்டை வாபஸ் வாங்குமாறு லாலனீயையும் அவளது கணவனையும வற்புறுத்தி வந்தனர்.

நகரத்திற்குச் செல்லும் போது இடைநடுவில் லாலனீயைக் கண்ட முச்சக்கர வண்டிச் சாரதி அவளைத் தாக்கியதோடு, முறைப்பாட்டை மீளப் பெறாவிட்டால் நிலைமை மோசமாகுமென்று அபாய அறிவித்தல் கொடுத்திருந்தான். லாலனீயையும் கணவரையும் காண வந்திருந்த பொலீஸ்காரனும் முறைப்பாட்டை மீளப் பெறும்படியே தெரிவித்தி ருந்தான்.

லாலனீயும் அவளது குடும்பமும் பயத்தோடு வாழ்ந்தனர். மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு இல்லாததால் கணவன் வேலைக்குப் போகாமல் வீட்டிலிருந்தான். முறைப்பாடு தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ளாததையிட்டு அவர்கள் கவலைப்பட்டனர். லாலனீ மீண்டும் வீட்டு வேலைக்குப் போனாள். இளைய பையன் அதிர்ச்சிக்குள்ளாகியிருந்தமையை அவனது தோற்றம் காட்டியது. வீட்டில் உணவு பானங்கள் இல்லை. பணம் கூட இல்லை.

**இலங்கைத் தண்டனைச் சட்டக்கோவை 364ம் அத்தியாயம் 1995 இல: 22ம் திருத்தத்தின் 13(d) சரத்துப்படி, கூட்டான பெண் வல்லுறவு குறைந்தபட்சம் பத்து வருடக் கடுழியச் சிறைத் தண்டனை வழங்கக் கூடிய குற்றமாகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. யார் மன்னன்?

நெ ன்ஸிலின் நோனாவுக்கு அறுபத்தைந்து வயது. அவள் நோயாளி மகனோடு வாழ்ந்து வந்தாள். மற்றப் பிள்ளைகள் நகரத்தில் வாழ்ந்தனர். தென்னந் தோட்டமொன்றில் காவல்காரனாக வேலை பார்க்கும் அவளது கணவனுக்கு வீட்டுக்கு வர அபூர்வமாகவே விடுமுறை கிடைக்கும்.

திருமணத்தின் பின்பு நென்ஸிலின் நோனா கணவனின் கிராமத்தில் வாழ்ந்து வந்தாள். கிராம வாழ்வுக்கு ஆசைப்பட்ட அவள் விவசாயம் செய்து கொண்டு, ஆறுபிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கக் கடும் முயற்சி செய்தாள்.

அயலவரான கிராமவாசியொருவர் கசிப்பு மன்னனாக உருவாகியமை நென்ஸிலின் நோனாவின் பிரச்சினைகளுக்குத் தொடக்கமாகியது. அவளது வீட்டுக்கு அருகால் செல்லும் பாதையினூடாகவே சட்டவிரோத மாக மதுபானம் கொண்டு செல்லப்பட்டது. அது பற்றி பலதடவை பொலீஸில் முறைப்பாடு செய்தாள்.

அன்று அவள் மிளகாய் நாற்று மேடைக்கு ஒத்தாசை செய்து கொண்டிருந்தாள். நோனாவின் பிள்ளையும் அவளருகே நின்றான். அங்கு வந்த இரண்டு பேர் அவளது சட்டையை இழுத்துத் தூசணம் பேச ஆரம்பித்தனர். பின்னர் அவளை வெறுமையான இடமொன்றுக்கு இழுத் துச் சென்று எச்சரிக்கத் தொடங்கினர். “உன்னால் பெட்டிசன் அடிக்க மட்டும் தான் முடியும்” கசிப்பு மன்னனும் அவனது உதவியாளர்களும் அங்கிருந்த வெறுமையான கசிப்புக் கொள்கலன் இரண்டில் அவளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல் அடையாளத்தைப் பதிக்க முயன்றனர். அவள் அப்பாத்திரங்களில் கைவைக்க மறுத்தாள்.

அதன் பின்னர் அவர்கள், அவளை சந்திக்கருகே நிறுத்தப்பட்டிருந்த ஜீப் வண்டியொன்றின் அருகே இழுத்துச் சென்றனர்.

அந்த நபர்கள் மதுவரித் திணைக்களத்தின் அதிகாரிகளென்பது நென்ஸிலின் நோனாவுக்கு விளங்கியது. வெற்றுத் தாளொன்றில் கையொப்பமிடுமாறு அவளுக்கு அவர்கள் கட்டளையிட்டனர். அதற்கு அவள் இணங்கவில்லை. கடுங்கோபத்துக்காளாகிய அவர்கள் மோசமான வார்த்தைகளால் ஏசத் தொடங்கினர். தனது நோயாளிக் குழந்தை மீது அனுதாபம் காட்டித் தனக்கு வீடு செல்ல இடமளிக்குமாறு அவள் வேண்டுகோள் விடுத்தாள். ஆசனத்தில் அமர்ந்திருந்த அதிகாரியிடமும் தனது வயோதிப வயதுக்காக அனுதாபம் காட்டுமாறு கேட்டாள். "மிகவும் கவலைதான். உதவி செய்ய நான் விரும்பிறன். ஆனால, ஒன்றும் செய்ய முடியாத நிலை" என்று அவர் கைவிட்டு விட்டார்.

மாலை மூன்று மணிமுதல் ஆறு மணிவரை ஜீப்பில் இருத்திக் கொண்டு, வெற்றுக் கடதாசியில் கையொப்பமிடும் வரை போகவிடுவதில்லையென்று அவர்கள் எச்சரித்தனர். இறுதியாக அவள் வெள்ளைத் தாளில்'கையொப்பமிட்டாள். அதன்பின் பெரிய கொள்கலன் இரண்டில் அவளது விரலடையாளத்தைப் பதிக்கச் செய்தனர். உடனடியாகவே வீட்டுக்குக் கூட்டிச் சென்று விட்டனர். மிகவும் சோர்ந்து போய் வீட்டுக்கு வந்த தாயை மகன் பயந்து போய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். பின்னர் ஜீப் வண்டிக்கு முன்னே அவன் வந்தபோது, அதிகாரிகளின் தாக்குதலுக்கு ஆளாக நேர்ந்தது.

விடயத்தைக் கேள்வியுற்று வீட்டுக்கு வந்த அயலவர்கள், அந்த ஜீப் வண்டி கசிப்பு மன்னனின் வீட்டு முற்றத்தில் நின்றதாகத் தெரிவித்தனர். சிறிது நேரம் தான் நகர்ந்திருக்கும். மீண்டும் நென்ஸிலின் நோனாவின் வீட்டுக்கு முன்னே ஜீப் வந்து நின்றது. உயர்ந்த தொனியில் பேசிய அதிகாரியொருவர் இருபத்தெட்டாம் திகதி ஐயாயிரம் ரூபாவோடு நீதிமன்றத்திற்கு வருமாறு அறிவித்தார்.

தான் மிகவும் பத்திரப்படுத்தி வைத்திருந்த இரண்டாயிரம் ரூபாவையும் எடுத்துக் கொண்டு தன்னந்தனியே நீதிமன்றத்திற்குச் சென்றாள். அவள் கணவனுக்கோ பிள்ளைகளுக்கோ விடயத்தைச் சொல்ல அவளால் முடியவில்லை. நீதிமன்ற வளாகத்தில் நடக்கும் போது தனிமை அவளை வெகுவாக வாட்டியது. 'எங்கே போக வேண்டு? என்ன செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்று அவளுக்கு விளங்கவில்லை. கறுப்புக் கோட்டும் கழுத்துப் பட்டியும் அணிந்த ஒருவர் "அம்மா என்ன?" என்று கேட்டார். அது இறைவனால் அவளிடம் அனுப்பப்பட்ட சட்டத்தரணியென்ற உணர்வு அவளுக்கேற்பட்டது. அவள் நன்றி மிகுந்த பார்வையுடன் அவரிடம் விடயத்தை எடுத்துக் கூறினாள். "ஆயிரம் ரூபா தந்தால் உங்களுக்காக முன் வர முடியும்"- என்ற அவர் தெரிவித்தார். அவள் மிகவும் கவனமாகக் கைக்குட்டையில் முடிந்திருந்த இரண்டு ஆயிரம் ரூபாத் தாள்களில் ஒன்றை வெளியெடுத்து அவருக்குக் கொடுத்தாள்.

நீதிமன்றத்தில் பெயர் அழைத்த போது, அவள் அங்குமிங்கும் பார்த்தாள். சட்டத்தரணி பார்வைக்கெட்டிய தூரத்திலில்லை. சட்டவிரோத மாக மதுபானம் வடித்த குற்றத்துக்காக அவள் மீது வழக்குத் தொட ரப்பட்டிருந்தது. பிணை நின்று விடுவிக்க எவருமில்லாத காரணத்தால், அவள் மூன்று நாட்களை விளக்கமறியலில் கழிக்க நேர்ந்தது.

ஊருக்கு வந்த நென்ஸிலின் கசிப்பு மன்னனதும் அவனது சகபாடிகளதும் தொல்லைகளுக்கு நிரந்தரமாகவே ஆளானாள். அரச அதிகாரிகளும் சட்டமும் அவனது பக்கம் தான். "எனது வியாபாரத்தைத் தடுக்கப் பார்ப்பவர்களை நான் இல்லாமல் செய்து விடுவேன்" கசிப்பு மன்னன் எச்சரித்தான்.

ஒரு நாள் நென்ஸிலின் நோனா வீதியில் சென்று கொண்டிருக்கும் போது, கசிப்பு மன்னன் தனது லொரியை அவள் பக்கமாக வெட்டினான். அவள் பாதையிலிருந்து அப்பால் வீசப்பட்டாள். அவனோ அவனது சக பாடிகளோ அவளது வீட்டருகால் செல்லும் போது "பத்தினி அம்மா" என்று கிண்டல் செய்து கொண்டே போவார்கள். இந்த நிகழ்வுகள் கார ணமாக அவளது நோயாளிப் பிள்ளை ஆபத்தான நிலைக்கு ஆளானதோடு, சிபார்சு செய்யப்பட்டிருந்த மருந்தின் அளவையும் அதிகரிக்க நேர்ந்தது.

அரச அதிகாரிகளுக்கும் கள்ள மதுபான வியாபாரிகளுக்கு மிடையிலான உறவை எடுத்துக் காட்டும் ஒரு உண்மைக் கதை இது. அரச அதிகாரிகளுக்கும் விசேடமாகப் பொலீஸ் மற்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கும் கசிப்பு இலாபம் தரும் வியாபாரமாகும். இலஞ்சம் வாங்குதல், முறைப்பாடுகளைப் பதிவு செய்யாமல் விலகி நிற்றல், முறைப்பாடுகளை விசாரிக்காமலிருத்தல் போன்றவற்றால் மேலதிக வருமானம் கிடைக்கும். இப்படியான தொடர்புகள் காரணமாக மோசடிகள் நடைபெற வசதியேற்படுவதோடு, மோசடிகளை மூடிமறைப்ப தற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. அறிவைப் போஷிக்கும் பாடசாலை

பாடசாலை செல்லும் சமீரவின் வயது பதினைந்து. அது அவளது வாழ்வில் மிகவும் துரதிர்ஷ்டமான நாள். இரு கன்னங்களிலும் தொடர்ச்சியாக விழுந்த அடியால் நடுநடுங்கிப் போனான். முடியைப் பிடித்திழுத்து கழுத்துக்குக் கீழே அடி மழையாகப் பொழிந்தது. பிரம்பொன்றைத் தருவித்துக் கொண்ட ஆசிரியர், அவனது கைகால்களுக்கு மூர்க்கத்தனமாக அடித்தார்; பிரம்பு உடையும் வரையில். அதனால் கூடத் திருப்தியடையவில்லை. முட்டுக்காலில் நிற்குமாறு சொல்லி மார்புக்குக் காலால் உதைத்தார். "அம்மா அப்பாமாருக்கு வந்தென்னைச் சந்திக்கும்படி சொல்லு"- என்று சத்தமிட்டபடி வெளியேறினார். ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அந்த கடெட் ஆசிரியர், குறித்த மாணவனுக்கு அடித்த விதத்தை ஒரு மாணவர் குழுவினர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சமீர கஷ்டத்தோடு வீட்டுக்குச் சென்றான். வீட்டில் வாந்தியெடுத்த அவன், கடும் தலைவலியால் துன்புற்றான். நடந்ததைத் தாயிடம் கூறியதைத் தொடர்ந்து அவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். மூன்று நாட்கள் அங்கே தங்கியிருந்தான். வைத்தியசாலையில் அவன் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டதோடு, வைத்தியசாலைப் பொலீஸாரும் அவனிடம் வாக்கு மூலம் பெற்றனர். கோபத்துக்குள்ளாகியிருந்த சமீரவின் தகப்பன் இந்த மோசமான தாக்குதலையிட்டு, பொலீஸ் நிலையம், மனித உரிமைக் கமிஷன், பெண்கள் மற்றும் சிறுவர் செயலணி போன்றவற்றுக்கு முறைப்பாடு செய்தார். அந்த துரதிர்ஷ்டகரமான தினத்தில் நடைபெற்ற தாக்குதலே சமீரவின் சகல பிரச்சினைகளுக்கும் ஆரம்பமாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைப் பார்ப்பதற்காக மருத்துவமனைக்கு வருகை தந்த அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அனைவருமே நிகழ்வு பற்றித் தகவல் களைக் கேட்டனர். அவன் எதையுமே மறைக்காமல் சொன்னான்.

"உனது அப்பா வழக்குத் தாக்கல் செய்ய முயன்றால் பிழையாகி விடும்" ஒரு ஆசிரியர் சுமீரவை எச்சரித்தார்.

சுமீரவின் வீட்டுக்கு வந்த அதிபரும் ஆசிரியர்களும், முறைப்பாட்டை மீளப் பெற்று சிக்கலைச் சமாதானமான முறையில் தீர்த்துக் கொள்ளு மாறு வேண்டினர். வைத்தியச் செலவை ஏற்கவும் அவர்கள் சம்மதித்தனர்.

அநியாயமாகவும், பிழையான வகையிலும் மாணவனைத் தாக்கிய, தமது தொழில் சார் தோழனைப் பாதுகாக்க அதிபரும் ஆசிரியர்களும் முனைவது தெட்டத் தெளிவானதே. பாடசாலைக்குச் சென்ற சுமீர அதிபர் முன் அழைக்கப்பட்டான்.

ஒழுக்கப் பொறுப்பாசிரியருக்கு எதிராக வழக்கு முன்வைக்கப்பட்டால் பயங்கர விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டென்று அவர் சுமீரவுக்கு அபாய அறிவிப்புச் செய்தார். மோசமான நடத்தை பற்றிய குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணையொன்று இருப்பதாகவும், அதற்குப் பெற்றார் வரவேண்டுமென்று தெரிவிக்கும் கடிதமொன்று வகுப்பாசிரியர் மூலமாக சுமீரவுக்குக் கையளிக்கப்பட்டது. சில நாட்களின் பின் ஆசிரியர் குழுவின் வற்புறுத்தலின் பேரில் இரண்டு மாணவர்களால் பொலிஸில் முறைப் பாடொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது. சுமீர தங்களைத் தாக்கியதாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சுமீர பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற போது அங்கே அதிபரும் ஆசிரியர் குழுவில் பாதிப் பேரும் காணப்பட்டனர். பாடசாலைக் கடமையை தவிர்த்துவிட்டு, தமது நண்பனுக்கு ஆதரவு வழங்கவும், சமீர வின் பெற்றாரைப் பயங்காட்டவுமே அவர்கள் அங்கே குழுமியிருந்தனர்.

பாடசாலை நடவடிக்கையோடு தொடர்பானதொரு பிரச்சினையை, பாடசாலையிலேயே தீர்த்துக் கொள்ளாமல், அதுவும் நான்கு நாட்களின் பின்பு பொலிஸில் முறைப்பாடு செய்வது சந்தேகத்துக்குரிய விடயமாகும். பொலிஸார் முறைப்பாட்டை சமாதான சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

சமாதான சபைக் கூட்டத்தின் போது, ஆசிரியர் குழுவினர் அவர்களது சகபாடியின் பக்கம் சார்ந்து நின்றனர். சுமீர தனது பெற்றோருடன் சென்றிருந்தான். சுமுக நிலையை ஏற்படுத்துவதற்காக எழுத்துப் பிரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் சுமீரவின் கையொப்பம் பெறப்பட்டது. "எந்த மோதலிலும் சம்பந்தப்படுவதில்லை என்றும், இதன்பின்பு பாடசாலையில் ஒழுங்காக நடந்து கொள்வேன் என்றும் உறுதியளிக்கிறேன்" என்றும் அந்தப் பத்திரத்தில் காணப்பட்டது.

ஆசிரியர் ஒருவர் மாணவர் ஒருவரை மிருகத்தனமாகத் தாக்கிய மோசமான செயல், சமாதான சபையில், குறித்த மாணவன் ஒழுங்கைக் கெடுத்துத் தவறான முறையில் நடந்து கொண்டமைக்காக மன்னிப்புக் கேட்பதாக மாற்றியமைக்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த நிகழ்வு தொடர்பாக பின்வருவனவற்றைக் கவனிக்கவும்.

**1. உடல்ரீதியான தண்டனை மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு அடிப்பதைத் தடைசெய்யும் கல்வி அமைச்சின் 2005.05.11 திகதியிட்ட ED/01/12/01/04/24 இலக்கச் சுற்று நிருபம்.**

**2. "பொருத்தமற்ற விதமான கவனிப்பு மற்றும் தண்டனை எந்தச் சிறுவருக்கும் வழங்கப்படக் கூடாது" இலங்கையும் கையெழுத்திட்டுள்ள சிறுவர் உரிமைச் சாசனம்: 37(a) பிரிவு.**

**3. துன்புறுத்தல் உள்ளிட்ட கடுமையான அல்லது எந்தவகையிலாயினும் சிறுவர்களை வேதனைக்குட்படுத்தும் குரூரமான நடவடிக்கைகள் கடும் தவறானதாகும். தண்டனை சட்டக்கோவை (திருத்தியது) 308 A பிரிவு.**

இந்த வகையில் பார்க்கும் போது, ஆசிரியரின் நடவடிக்கை எவ்வளவு பிழையானதென்பது தெட்டத் தெளிவாகிறது. இங்கு நியாயம் கேட்ட, பாதிக்கப்பட்ட அந்த மாணவனும் அவனது குடும்பத்தினரும் அப்பாவிகள்.

கொழும்புக்கருகாமையிலுள்ள முன்னணிப் பாடசாலையொன்றில் படிக்கக்கிடைத்தமையை சுமீர அதிர்ஷ்டமாகக் கருதினான். அந்தப் பாடசாலை அறிவைப் போஷிக்கின்ற உயர்ந்த சம்பிரதாயத்தை மேலாக மதிப்பதாக எங்கும் பிரசித்தம். சுமீரவுக்கு அந்த 'அறிவாலயம்' அபூர்வமானதொரு கவனிப்பை வழங்கியிருந்தது. ஆசிரியர் அந்த உத்தம தொழிலின் ஆதர்ஷ புருஷராக அமையவில்லை. பணிவும் பக்குவமும் காணப்படவில்லை. அதிகாரம் வைத்திருப்போரால் நியாயம் நிறைவேறுமா? அந்த அதிகாரத்தின் முன் நியாயம் நிலைக்கவில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. சீமாலியின் கவலை ததும்பும் கதை

சோகம் ததும்பும் தனது கதையைச் சொல்வதற்காக அறுபத்தைந்து வயதான தனது தந்தையுடன் 'ஜனசங்சதய'வுக்கு வருகை தந்த சீமாலிக்கு ஆகப் பதினைந்தே வயது தான். டெனிம் ஆடையும் சப்பாத்தும் அணிந்திருந்த அவள் தலைமுடியை போனிடெல் பாணியில் அலங்கரித்திருந்தாள். அவள் தனது கதையைச் சொல்ல ஆரம்பித்தபோது, தச்சுத் தொழிலாளியான அவளது அப்பாவால் ஆவேசமாக வெளிப்பட்ட அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

சீமாலி வீதியில் சென்று கொண்டிருந்தாள். முச்சக்கர வண்டியொன்று அவளருகே வந்து நின்றது. "வீட்டுக்குக் கூட்டிச் சென்று விடுகின்றோம். ஏறுங்கள்" என்று அதிலிருந்த இருவரும் கூறினர். அதில் ஒருவன் புகையிரத நிலையம் அருகே வாழ்பவரென்பதை அவள் இனம் கண்டாள். அதில் ஏறுவதற்கு அவள் விரும்பாதபோது, அடுத்தவன் பலாத்காரமாக அவளைத் தூக்கி உள்ளே தள்ளினான். சட்டென்று அவளது வாயை இறுக்கமாக மூடி, "சத்தமிட்டால் நிலைமை மோசமாகும்" என்று எச்சரித்தான். அதன் பிறகு முச்சக்கர வண்டி வெளிப்பட்டது.

பாழடைந்த பகுதியொன்றில் அமைந்திருந்த கெஸ்ட் ஹவுஸ் முன்னால் வாகனம் நின்றது. அவர்கள் அவளை அறையொன்றுக்குத் தூக்கிச் சென்றனர். அவளை அறையில் வைத்துக் கதவை மூடிய அவர்கள் வெளியே தாழ்ந்த குரலில் குசுகுசுப்பது அவளுக்குக் கேட்டது. அவள் உள்ளேயிருந்து காது கொடுத்துக் கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த இளைஞன் (அவனது பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமன் என்பது பின்னர் தெரிய வந்தது) உடைகளைக் கழற்றுமாறு அவளுக்கு கட்டளையிட்டான். தன்மீது அனுதாபம் கொண்டு வீடு செல்ல அனுமதிக்குமாறு எவ்வளவோ அழுது புலம்பியும் அவன் அதனைக் கிஞ்சித்தும் கணக்கெடுக்கவில்லை. அவளது ஆடையைக் கிழித்தெறிந்துவிட்டு அவன் வல்லுறவு செய்தான். தனதுடலைக் கழுவிக் கொண்ட அவன், அடுத்து வரவிருக்கும் தனது நண்பனுக்காக, குளித்துத் தயாராகும்படி அவளை வேண்டினான்.

அதிர்வினால் ஏற்பட்ட விறைப்பும் நடுக்கமும் காரணமாக, கண்களை மூடியபடி அவள் தண்ணீர்க் குழாயின் கீழ் நின்றாள். என்ன செய்ய வேண்டுமென்று அவளால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. குளியலறையிலிருந்து வெளியே வரும்போது அங்கே சமன் காணப்படவில்லை. அவள் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டாள்.

“இப்பொழுது எனது சந்தர்ப்பம்” என்று கூறிக் கொண்டு நாமல் அறையினுள் வந்தான். சீமாலி முழுச் சக்தியையும் பிரயோகித்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தாள். அவனது வாயிலிருந்து மதுபான நெடி வீசியது. அவள் அவனைக் கடித்தாள்; அடித்தாள்; காலுதையொன்றும் கொடுத்தாள். அவளை எப்படியாவது புரட்ட எடுத்த முயற்சி வீண் போகவே, தனது நண்பனின் உதவியை நாட வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கேற்பட்டது.

அதன் பின்னர் இருவரதும் துன்புறுத்தலுக்கு சித்திரவதைக்கு அவள் ஆளாக நேர்ந்தது. புன்னகை பூக்குமாறு ஆணையிட்ட அவர்கள், அவளது அரை நிர்வாணத் தோற்றத்தை தங்களது கெமராத் தொலைபேசி மூலம் பதிவு செய்தனர். அவள் எதிர்ப்புத் தெரிவித்த போது அவளது கன்னத்தை நோக்கிக்க கத்தி நீட்டப்பட்டது. உயிர் மேலிருந்த ஆசை காரணமாக அவர்களது விருப்பத்திற்கு இணங்க வேண்டி நேர்ந்தது. மீண்டும் அவளைத் திரீவீலரில் ஏற்றி வந்து நகரத்தில் இறக்கிவிட்டுச் சென்றனர்.

சீமாலி மெல்ல மெல்ல வீட்டை நோக்கிக் காலடி வைத்தாள். அவளது உடல் வேதனையால் தகித்தது. நிகழ்ந்ததைச் சொல்லும் அளவுக்கு நம்பிக்கையான எவரும் இருக்கவில்லை. அவளுக்கு ஆதரவு காட்ட சகோதரர் ஒருவரோ, எரியும் வேதனையைப் பகிர்ந்து கொள்ளச் சகோதரி ஒருவரோ அவளுக்கில்லை. தாய் ஒரு மனநோயாளி. சொல்வதற்கிருந்த ஒரேயொருவர் தகப்பன் மாத்திரமே.

சீமாலியின் நிர்வாணத் தோற்றம் அயலவர் பார்வைக்கும் எட்டியிருந்ததால், நடந்த விடயம் பரவிச் செல்ல அதிக காலமெடுக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொலைபேசியில் பதிவாகியிருந்த உருவம் நோயாளித் தாய்க்கும் காட்டப்பட்டிருந்தது. பயமும் வெட்கமும் ஒன்று கலந்த நிலையில் சீமாலி அறையிலிருந்து வெளிவரவேயில்லை.

சீமாலியின் நிகழ்வு பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. செயலொழுங்கிற்கேற்ப பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் நிகழ்ச்சி நடைபெற்ற இடத்திற்கு சீமாலியும் அவளது அப்பாவும் செல்ல நேர்ந்தது. அங்கு வரவுப் பதிவேட்டைப் பரிசீலித்துப் பார்த்தபோது, சமன் ஒன்பது தடவை அங்கு தங்கியது தெரியவந்தது. பொறுப்பதிகாரி ஆரோக்கியமான சிந்தனையோடு கேள்வி எழுப்பவில்லை. "சமனுடன் நீ ஒன்பது முறை இங்கு வந்தாயா?" என்றே கேள்வி கேட்டார். இப்படியான நிகழ்வின் போது, மேற்கொள்ளப்படும் செயலொழுங்கிற்கேற்ப பாதிக்கப்பட்ட பெண்ணை மருத்துவமனையில் அனுமதித்து, சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

மருத்துசாலையில் சீமாலி சமூகநோய்ப் பிரிவிலும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டாள். பொலிஸ் நிலையம் சென்ற சந்தேகநபர்கள் இருவரும், பிணையில் விடுவிக்கப்பட்டனர். சீமாலி அவர்களைப் பற்றிய பயத்தாலும் சந்தேகத்தாலும் பின்னடைந்தாள்.

பாடசாலைக்குச் சென்றபோது அப்பாவி சீமாலியின் நெருப்புக்கு பெற்றோல் வார்க்கப்பட்டது. அவளால் பாடசாலைக்கே வெட்கம், ஏனைய மாணவிகளுக்கு ஒரு மோசமான எடுத்துக் காட்டென்பதால் இனிமேல் பாடசாலைக்கு வரவேண்டாமென்று அநுலா வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வு அறிக்கைப்படுத்தப்பட்ட காலப் பகுதியில் சீமாலி பாடசாலைக்குச் செல்வதில்லை. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற இன்னும் சில மாதங்களே இருந்த நிலையில், அவளது கல்வி பற்றிய எதிர்பார்ப்பு சூன்யமாகிவிட்டது. நண்பிகளோடு பழகவும் வாய்ப்பில்லாததால் அவர்களைச் சந்திக்கவும் அவாவி நின்றாள்.

பெண் வல்லுறவு சந்தேக நபர்களுக்கெதிராக, வெற்றிகரமான வகையில் வழக்குத் தாக்கல் செய்கையில், இலங்கைச் சமூகத்தின் மத்தியில், பாதகமாகத் தடைமிகுந்த நிலையே காணப்படுகிறது. இதனால் அநியாயக்காரர்கள் சட்டத்தின் கையில் சிக்காமல், முறைப்பாட்டாளரைப் பழிவாங்கும் நிலைமையே காணப்படுகிறது. சீமாலியின் நிகழ்வில் பொலீஸார் நடந்து கொண்ட முறை, சட்டத்தை நடைமுறைப் படுத்துபவர்களின் மோசமான சிந்தனையைத் தெளிவுபடுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீமாலியின் கல்விக்கான உரிமை, இத்தகையதொரு சமூக கலாசாரப் பின்னணியிலேயே அதிபரால் மறுதலிக்கப்பட்டது.

பாடசாலை அதிபரின் நடவடிக்கை தெட்டத் தெளிவாக, இலங்கை அரசியல் யாப்பினை உறுதிப்படுத்தப்பட்டுள்ள, கல்வி கற்கும் உரிமையையும், இலங்கையும் பங்காளியாகவுள்ள சிறுவர் உரிமைச் சாசனத்தையும் மீறுவதாகும். **அரசியல் யாப்பின் 27(2) H சரத்தில் "எழுத்தறிவின்மையை முற்றுமுழுதாக ஒழிப்பது அரசின் நோக்கமாகும். சகல பிரஜைகளுக்கும் எல்லா மட்டங்களிலும் முழுமையான கல்வியைப் பெறுவதற்கு சமமான உரிமையுண்டு"** என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"இன, மொழி, மற்றும் சமூகக் குழு உள்ளிட்ட இலங்கையின் சகல மக்கள் பிரிவினரிடையேயும் ஒத்துழைப்பையும் பரஸ்பர நம்பிக்கையையும் விருத்தி செய்து, தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்தவும், கல்வி........ கற்பித்தல் தொடர்பாடல் துறையில் வேறுபாடு காட்டல் மற்றும் அநீதியை இல்லாமல் செய்யவும் அரசு பயனுள்ள நடவடிக்கை மேற்கொள்ளும்" என்று 27 (5) சரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைச் சாசனம் 28ம் சரத்தில் "கல்வி தொடர்பாக சிறுவர்களுக்குள்ள உரிமை அரச தரப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. முன்னேற்றகரமான வகையிலும் சம சந்தர்ப்ப அடிப்படையிலும் இந்த உரிமை ஏற்கப்பட்டுள்ளது." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.**

**1995ல் மறுசீரமைக்கப்பட்ட இலங்கைத் தண்டனை சட்டக் கோவை 363 ம் சரத்தில் பெண் வல்லுறவு மோசடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோடு, 364ம் சரத்தின்படி பெண் வல்லுறவு குற்றவாளியாகும் நபருக்கு சிறைத்தண்டனை விதிக்கும் முறையும், முறைப்பாட்டாளருக்கு நட்டஈடு வழங்கும் ஒழுங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்ட சிறுமி சீமாலி, ஏமாற்றுக்கார தார்மீக சமுதாயத்தால் மீண்டுமொரு தடவை வல்லுறவுக்கு ஆளாக்கப்பட மாட்டாளா என்ன? தீர்ப்பு உங்கள் கையில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. அழகிய கனவு நனவாகுமா?

தனது தோழிகள் படிக்கும் பாடசாலையில் மீண்டும் கல்விகற்க ஆசைப்படுவதாகவும், சிங்கள மொழி தனது விருப்பத்திற்குரிய பாடமென்றும் நாட்டியக்கலையில் ஆர்வம் கொள்வதாகவும் பதினைந்து வயதான லக்சானி கருணாரத்ன மிகுந்த எதிர்பார்ப்போடு எங்களிடம் சொன்னாள்.

ஆனால் லக்சானிக்குப் பாடசாலைக்குச் செல்ல முடியாது. ஏனென்றால் அவளது பிறப்புச்சாட்சிப் பத்திரமும் விடுகைப் பத்திரமும் பாடசாலையிலிருந்து எடுக்கப்பட்டிருந்தன. குடிகாரத் தகப்பனின் பொறுப்பற்ற தன்மையைப் பயன்படுத்தி துசார என்ற நபர் அவற்றை எடுத்திருந்தான்.

ஸிஸிலின் ஆரச்சி தந்தை வழி உறவுப் பெண். அவள் நகரத்திலுள்ள பெரிய பங்காளவொன்றில் வீட்டுச் சேவதியாகவிருந்தாள். வீட்டுக்காரர் விடுமுறைக்கு வெளியே சென்றுள்ளதாகவும், இரவை இங்கே கழிக்க முடியுமென்றும், லக்சானியையும் அழைத்து வருமாறும் ஒருநாள் அவள் லக்சானியின் தாயிடம் சொன்னாள்.

அன்று இரவு துசார என்ற நடுவயதுக்காரர் அந்த வீட்டுக்கு வந்தான். "நல்ல ஐயா" என்றும் தனக்கு வீடு கட்ட உதவி செய்தார் என்றும் லக்சானிக்கும் அவளது அம்மாவுக்கும் அறிமுகம் செய்து வைத்தாள். அவன் மீண்டும் போகும் போது லக்சானியைப் பார்த்து இச்சைமிகுந்த பார்வையை வீசினான். லக்சானி அவன் மீது எந்தச் சந்தேகமும் கொள்ளவில்லை.

அடுத்த நாள் துசார மோட்டார் சைக்கிளில் அங்கு வந்தான். சைக்கிளின் பின்னால் முச்சக்கர வண்டியொன்றும் வந்தது. அதில் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் காணப்பட்டனர். அவர்கள் அவளைப் பிடித்து மோட்டார் சைக்கிளில் அமர்த்தினர்.

துசார சைக்கிளை ஸ்டாட் செய்து கொண்டு, ஸிஸிலினுக்கும் லக்சானியின் அம்மாவுக்கும் திரீவீலரில் வருமாறு பணித்தான். அவர்கள் விவாகப் பதிவாளரான ஒரு சகோதரியின் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மகளதும் துஷாரா ஐயாவினதும் திருமணத்திற்கு விருப்பம் தெரிவிக்க வேண்டுமென்று ஸிஸிலின் வற்புறுத்தினாள்.

துசாரவும் விவாகப் பதிவாளரான பெண்ணும் நெருக்கமானவர்க ளென்பது தெளிவாகியது. லக்சானியின் வயது பதினெட்டிலும் குறை வென்பதால், விசேட படிவமொன்றில் கையெழுத்திட வேண்டுமென்று தெரிவித்தார். அவர்கள் தாயும் மகளும் கையெழுத்திட வேண்டுமென்று வற்புறுத்தினர். அது விவாகம் என்ற பெயரில் அவர்கள் செய்யு மொரு ஏமாற்று வேலை.

துசாரவுடன் செல்வதற்கு லக்சானி விரும்பவில்லை. இருந்தும் அவன் பலாத்காரமாக சைக்கிளில் இருத்தி ஹோட்டலொன்றுக்கு கூட்டிச் சென்றான். அந்தக் ஹோட்டல் தனது மாமாவுடையதென்று துசார தெரிவித்தான். பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்த சிறுமியை மேல்மாடி அறையொன்றுக்கு அழைத்துச் சென்றான். அன்று இரவு இருதடவை அவள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாள். தன்னை அம்மாவிடம் அழைத் துச் செல்லுமாறு அவள் அழுதழுது வேண்டினாள். அடுத்த நாள் அவள் வேறொரு வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டாள்.

அதன் பிறகு துசார அவளை நேரே தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அங்கு அவனது அம்மா, சகோதரி, பாட்டி, ஆகியோர் காணப்பட் டனர். அப்பகுதியில் இன்னும் சிலரைக் காட்டி.... அவர்களது பெயர், ஊர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் பிரபலமானவர்களென்றும், பலம் வாய்ந்த அரசியல் தொடர்புள்ளவர்களென்றும் சொன்னான். அவர்களது பாதுகாப்பு அதிகாரிகளைக் கூடக் காட்டினான். பிரபலமானவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அடிக்கடி கைத்தொலைபேசியில் உரையா டுவதையும் லக்சானி அவதானித்தாள். துசார தானொரு சமாதான நீதவான் என்றும் தெரிவித்தான்.

துசார அந்தச் சிறுமியை பலவந்தமாகத் தன்வசம் வைத்திருந்தான். அவள் நிரந்தரமாகவே பாலியலுக்கு பயன்படுத்தப்பட்டாள். எப்போதாவது ஒருநாள் தனது தாயோடு தொலைபேசியில் கதைக்க அவளுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

பாட்டி இறந்தது பற்றி அவள் கேள்வியுற்றாள். தனக்கு மரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குப் போக இடமளிக்குமாறு அவள் தொடர்ச்சியாக அழுது வேண்டினாள். அதனால் கோபமுற்ற துசார அவளைச் சந்தியில் கொண்டு போய்விட்டான். போக வேண்டிய பாதை தெரியாத அவள், துசாரவின் உறவினர் வீடொன்றுக்குச் சென்று தன்னைத் தனது வீட்டுக்குக் கொண்டு போய் விடுமாறு வேண்டினாள். அவர்கள் மீண்டும் துசாரவின் வீட்டுக்கே கொண்டு போய் விட்டனர்.

அடுத்த நாள் லக்சானியை அவளது வீட்டுக்கு அழைத்துச் சென்ற துசார அங்கு கடும் தூசண வார்த்தைகள் பொழிந்தான். அதன் பின்னர் லக்சானி மீண்டும் துசாரவுடன் போக முடியாதென்று தெரிவித்தாள். தனக்குப் பெரும் அரசியல் பலம் உண்டென்றும் முழுக் குடும்பத்தையும் ஒழிக்கத் தன்னால் முடியுமென்றும் துசார எச்சரிக்கத் தொடங்கினான்.

சில தினங்களின் பின்பு லக்சானியின் உறவினர்கள் அவளை தூர இடமொன்றில் நெருக்கமானவர் வீட்டில் நிற்பாட்டினர். லக்சானியைத் தேடி வரும் துசார, தொடர்ச்சியாக அவளது குடும்பத்தினர்க்கு எச்சரிக்கை விடுக்கத் தொடங்கினான்.

இப்பொழுது லக்சானி தன்னைக் கடத்திச் சென்று மோசப்படுத்திய நபருக்கு பயந்தபடியே வாழ்கிறாள். பெண்கள் மற்றும் சிறுவர் செயலணிக்கு இரண்டு தடவை முறைப்பாடு செய்தும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென லக்சானியின் தாயும் உறவினர்களும் கூறுகின்றனர். பொலீஸில் செய்த முறைப்பாட்டைய டுத்து பொலீஸார் வாய்மொழி எடுத்ததோடு அவளை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

இக்கதையைப் பதிவு செய்து கொண்டிருக்கும் இவ்வேளையில், பொலீஸில் முறைப்பாடு செய்து மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இருந்தும் துசாரவுக்கெதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. லக்சானியின் குடும்பத்தினர்க்கு பல்வேறு தொல்லைகள் செய்தபடி, தனக்கு அரசியல் பாதுகாப்புண்டென்று அகங்காரம் காட்டிக் கொண்டு சுதந்திரமாக இருக்கிறான் துசார.

ஜூன் 15ல் லக்சானிக்குப் பதினாறு வயது பூர்த்தியாகிறது. துசார கபடத்தனமாக அவளது பிறப்புச் சாட்சிப் பத்திரத்தையும் விடுகைப் பத்திரத்தையும் கைப்பற்றியுள்ளதால், அவளுக்குப் பாடசாலை செல்ல முடியவில்லை.

**சமவயதிலுள்ளோர் கல்வி பெற்று அனுபவிக்கும் போது, லக்சானி வெட்கத்தால் சுருண்டு போயிருக்கிறாள். அவளால் கடந்த காலத்தை மறக்க முடியுமா? அவளது ஒரே இனிய கனவான, பாடசாலை சென்று க. பொ. த. சித்தியடைவது சாத்தியமாகுமா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. பொலீஸ் கெட்டித்தனம்

சுற்றுலா வழிகாட்டியான நிலான் பொலீஸ் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தான். அவனது இரண்டரை வயதான நிலேஷுக்குத் தந்தையின் அடுத்த பிறந்த தினமாகிய ஆகஸ்டில் தான் சம்பிரதாயபூர்வமாக எழுத்த றிவிக்க ஏற்பாடாகியிருந்தது. "அப்பாவை அப்படியே உரித்து வைத்தது போல" என்றவாறு குழப்படி செய்து கொண்டிருந்த பிள்ளையைத் தூக்கி யணைத்து முத்தமிட்டபடி நிமாலி சொன்னாள்.

நிமாலிக்கு இருபத்தொரு வயது. துரதிர்ஷ்டவசமான அந்த ஞாயிறு நிகழ்வை நினைக்கும் போது அவள் பெருமூச்சு விட்டாள். நிலான் தனது அண்ணியான கமலினியின் மோட்டார் சைக்கிளைக் கொடுப்பதற்காக அவளது வீட்டுக்குச் சென்றான். ஆறுமாத கால கர்ப்பிணியான கமலினி தனது சகோதரனுக்கும் அயலவரான சரத்திற்குமிடையிலான தர்க்கம் பற்றி விபரித்தாள். அதன் பின்னர் அந்த சைக்கிளிலேயே கமலினியையும் அழைத்துக் கொண்டு பிரச்சினைக்கான காரணத்தை அறிந்து கொள் வதற்காக சரத்தின் வீட்டுக்குச் சென்றான். அருகிலிருந்த பற்றைக் காட் டுக்குள்ளிருந்து திடீரென்று ஏழெட்டுப் பேர் வீட்டுக்குள் வந்து பாயந்தனர். மூவரின் கையில் துப்பாக்கி இருந்ததோடு, அவர்கள் நிலானைச் சுட ஆரம்பித்தனர். மூன்று வெடிச் சத்தம் கேட்டது. நிலான் வேதனையில் முனுகியபடி கீழே விழுந்தான். அவனை வைத்தியசாலைக்குக் கொண்டு போக வேண்டுமென்று கமலினி கத்தினாள். வேட்டு வைத்த மூவரும் நிலானை வைத்தியசாலைக்குக் கொண்டு போவதற்கு ஆட்டோவொன்று ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

நிலானுக்கு வெடி வைத்தது பிரதேச பொலிஸ் உதவிப் பரிசோதகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரிய என்பதைக் கமலினி இனம் கண்டாள். அடுத்தவர்களும் பொலீஸ் அலுவலர்களென்பதை அவள் அறிந்து கொண்டதோடு, அவர்கள் மத்தியில் சரத்தையும் கண்ணுற்றாள். அவர்கள் சாதாரண உடையி லேயே காணப்பட்டாள்.

அன்றைய தினமே எல்லாவற்றையும் நேரடியாகக் கண்ட கமலினி யுடன் நிலானின் பெற்றோர் பொலிஸுக்குச் சென்றனர். நிலானினதும் நிலானியினதும் பெற்றோரின் வாக்குமூலங்களைப் பொலீஸார் பதிவு செய் ததோடு, எல்லாமே நேரடியாகக் கண்ட கமலினியின் வாக்குமூலத்தை பதிவு செய்ய மறுத்தனர்.

"பொலிஸுடன் முட்டி விஷயத்தைப் பிழையாக்கிக் கொள்ள வேண் டாம். உனக்கும் குடும்பத்தவர்களுக்கும் நல்ல வேலை செய்வோம்" முறைப்பாடு செய்ய வேண்டாமென்று கமலினிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

கொலை நிகழ்வைப் பதிவு செய்து ஒளிபரப்ப ஸிரஸ தொலைக்காட் சியினர் வந்துள்ளதாக அடுத்தநாள் ஊரில் செய்தி பரவியது. மோட்டர் சைக்கிள் இருந்த இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு மாற்றப்பட்டி ருந்தது. சைக்கிள் இருந்த இடத்தில் கல்கடஸ் துப்பாக்கியொன்று காணப்பட்டது. நீதிபதி இடத்தைப் பார்த்து மதிப்பீடு செய்தார்.

நேரில் கண்ட சாட்சியின் வாய்மொழியை நீதிபதி பதிவு செய்து கொண்டதோடு, பின்னர் பொலிஸிலும் அது பதிவாகியது.

மரணப் பரிசோதனைக்கு வருமாறு நிலானின் குடும்பத்தினர்க்குப் பொலீஸார் அறிவித்தனர்.

ஆனால், குறித்த தினத்தில் மரணப் பரிசோதனை நடைபெறவில்லை. சாட்சி சொன்னால் கமலினியையம் அவளது குடும்பத்தவர்களையும் கொன்று விடுவதாகப் பொலீஸார் எச்சரித்தனர்.

அடுத்த மரணப் பரிசோதனைத் தினத்தன்றும் பொலீஸாரால் கமலினி பயமூட்டப்பட்டாள். இம்முறை ஒரு பெண் சட்டத்தரணி மூலமாகவே நடந் தது. பொலீஸாரோடு கலந்துரையாடிய அவர், கர்ப்பிணி என்பதால் கவன மாகவிருக்க வேண்டுமென்றும் பொலீஸார் பலமானவர்களென்பதால், எந்த ஆபத்தையும் விளைவித்து விடலாம் என்றார். துப்பாக்கியொன்றை வைத்திருந்ததாகக் கதைகட்டி சிறையில் தள்ளுவதற்குக் கூட பொலீ ஸார் முனையக்கூடுமென்று அவர் மேலும் அபாய அறிவிப்புச் செய்தார்.

நிமாலியோடும் கதைத்த அந்தச் சட்டத்தரணி சமாதானமாக முடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கொள்ளுமாறே கேட்டுக் கொண்டார். அவர்கள் அவளுக்குத் தொழில் பெற்றுத் தருவதாகவும், குழந்தையின் எதிர்காலத்திற்கு உத்தரவாதமளிப்பதாகவும் அரைகுறையாகக் கட்டப்பட்டுள்ள வீட்டை முழுமையாக்கித் தரவும் தயாராகவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பயத்தினால் பின்வாங்கினாலும் கூடக் காலம் சென்ற தனது கணவனுக்காக உண்மையை நிலைநாட்ட நிமாலி உறுதி பூண்டாள்.

இந்நிகழ்வை அறிக்கைப்படுத்தும் இவ்வேளையில் சம்பவம் நிகழ்ந்து இருபத்தெட்டு நாட்கள் கடந்திருந்தன. கொலையாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை. அவர்கள் இன்னும் தான் பொலீஸ் உத்தியோகத் தர்களாகச் செயற்படுகின்றனர். சுதந்திரப் பிறவிகளாக வாழ்கின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசியமற்ற தொல்லைகளையும் செலவையும், காலவிரயத்தையும் ஏற்படுத்திய வண்ணம், மரணப் பரிசோதனை ஏழு தடவை பிற்போடப்பட்டது.

பொலீஸாரின் அச்சுறுத்தல், எச்சரிக்கை காரணமாகக் கமலினி சாட்சி சொல்ல முன்வரவில்லை. பொலீஸார் நிறைந்த ஜீப் வண்டியில் வந்து, சாட்சி சொல்ல வேண்டாமென்று தன்னையும் தனது குடும்பத்தையும் எச்சரித்ததாகக் கமலினி சொன்னாள்.

மூத்தவர்களின் கதைகள் எதுவும் சிறியவனான நிலேஷ்"க்குச் சரியாக விளங்கவில்லை. இருந்தும் முன்பு 'பொலிஸ் மாமா' என்று சொல்லி வந்தவன், 'பொலிஸ்காரரைக் கொன்றுவிடுவேன்' என்று சொல்லுமளவுக்கு அவன் பிஞ்சு மனதிலும் வைரம் புகுந்துள்ளதாக நிமாலி சொன்னாள். இறந்துவிட்டார் என்று சொல்லும் தனது அப்பா மீண்டும் வரமாட்டாரென்று அவனுக்குத் தெரியவில்லை. அப்பா இங்கிலாந்து சென்றுவரும் போது தனக்கும் அம்மாவுக்கும் பை நியைத் துணிமணிகள், விளையாட்டுப் பொருட்கள், பரிசுகள் கொண்டு வந்ததை அவன் இன்னும் மறந்து விடவில்லை. அப்பா அவ்வாறு மீண்டும் வீட்டுக்கு வருவாரென்று அவன் அடிக்கடி சொல்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. வதைக் கதை இரண்டு

நாற்பத்தி மூன்று வயதான அமரபால ஐந்து பிள்ளைகளின் தந்தை. ஒருநாள் இரவு எட்டு மணியளவில் வேலை விட்டு வரும்போது, ஜீப் வண்டியொன்றில் நின்ற சில பொலிஸ்காரர்களால் இடைநிறுத்தப்பட்டான். தூசணம் பேசியபடி அதில் வந்த நால்வரும் அவனை அடிக்கத் தொடங்கினர். கால்கள், உடல் என்று கைத்தடியினால் தாக்கினர். ஒரு பொலீஸ்காரான் அமரபாலவின் கையிலிருந்த டோர்ச்லைட்டையைப் பறித்து அதனாலும் அடித்தான். தாங்க முடியாது அவன் சரிந்து விழுந்த போது காலால் உதைத்தனர். சப்பாத்தினால் மிதித்தனர்.

அதில் ஒருவன் உள்ளுப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சமரே என்பது அமரபாலவுக்குத் தெரிந்தது. அடுத்தவர்கள் யார்? எவரென்று தெரியவில்லை. எல்லோரும் சீருடையிலேயே காணப்பட்டனர்.

அமரபாலவை ஜீப்பில் ஏற்றிப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். உடனனே கூட்டிலிட்டு அதன் கதவில் கைகளைப் வைத்து விலங்கிட்டனர். அவர்களால் கொடுக்கப்பட்ட பாண் துண்டொன்றைச் சாப்பிடுவதற்காகவே அந்த விலங்கு அவிழ்க்கப்பட்டது, அவ்வாறே முழு இரவும் மட்டுமன்றி, அடுத்தநாள் மாலை வரை விலங்கிடப்பட்ட நிலையிலேயே காலம் கழிந்தது. முழு இரவும் தூக்கம் போகாததோடு ஒருவித சித்தப்பிரமைக்கு அமரபால ஆளானான்.

அடுத்தநாள் மாலை நீதிபதியிடம் கொண்டு செல்லப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டான். மனிதத் தன்மையற்ற முறையில் தன்னைப் பொலிஸார் தாக்கியதாக அமரபால நீதிபதியிடம் தெரிவித்தான். பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக் கப்பட்டது.

மிலேச்சத்தனமான பொலிஸ் தாக்குதலால் அவனது கால்கள் வீங்கின. தடியடிப் பிரயோகத்தால் அவனது முழங்காலின் கீழ் காயமேற்பட்டிருந்தது. அமரபாலாவால் நடக்க முடியவில்லை. மனைவி தன் மீது பழிவாங்கும் நோக்கில் பொலீஸில் செய்திருந்த முறைப்பாட்டை ஒட்டியே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக அமரபால தெரிவித்தான்.

*****

எண்பது வயது டிங்கிரால ஒரு விவசாயி. அடுத்த நாள் நடைபெறும் விசாரணைக்கு வருமாறு பொலிஸாரிடமிருந்த ஒரு கடிதத் துண்டு அவனுக்குக் கிடைத்தது. அதை ஓர் உறவினர் வீட்டுக்கே அனுப்பியிருந் தனர். பல மாதங்களுக்கு முன்பு தான் செய்த முறைப்பாட்டை பொலி ஸார் விசாரணைக்கு எடுத்துள்ளதாகவே அவன் நினைத்தான். இவ்வளவு காலமும் முற்று முழுதாக அது கவனிக்கப்படவே இல்லை.

தனது முறைப்பாட்டை விசாரிப்பதற்காகவல்ல, தானும் பங்குதாரராக சம்பந்தப்பட்ட காணிப் பிரச்சினை தொடர்பான விசாரணைக்கே தான் அழைக்கப்பட்டுள்ளதை பொலீஸ் நிலையம் சென்ற டிங்கிரால தெரிந்து கொண்டான்.

உதவிப் பொலீஸ் பரீட்சகரின் அலுவலகத்திற்குள் நுழைந்ததும், பொலீஸ் அதிகாரி உயர்ந்த தொனியில் மோசமான வார்த்தைகளால் திட்டித் தீர்த்ததாக டிங்கிரால கூறினான். பின்னர் அவன் காணிப் பிரச் சினை தொடர்பான அடியாரம்பத்தை வினவினான். பிரச்சினை ஏற்பட்டுள்ள காணியை விவசாயம் செய்தவற்காகத் தனது மருமகனான மாடின் சில்வாவுக்குக் கொடுத்துள்ளதாகச் சொன்னதும் பரீட்சகர் பாம்புபோல் கோபம் கொண்டார். அவர் மேசை மேலிருந்த பாரிய புத்தகமொன்றால் டிங்கிராலவின் மார்புக்கு வீசியடித்தார். மருமகனையும் பிடித்துவருமாறு சத்தமிட்டார்.

அப்பொழுது வேறேதோ தேவைக்காக பொலீஸுக்கு வந்த மாடின் சில்வா, தனது மாமனாருக்கு பொலீஸார் அடிப்பதைக் கண்டார். "என்ன பிரச்சினை?" என்று கேட்டபடி அவன் அவ்விடத்திற்கு வந்தான்.

எந்தக் காரணமுமில்லாமல் பொலீஸ் பரிசோதகர் மார்டின் சில்வா வுக்கு குண்டாந்தடியால் அடித்தார். காது, தோள், தலையென்று மனிதத் தன்மையற்ற வகையில் தாக்கி சேட்டைப் பிடித்திழுத்துத் தள்ளி விட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான். அடுத்த பக்கமிருந்து மேசையை நோக்கி மார்டின் சில்வா வீசப்பட்டான்.

மிருகத்தனமாக என்னைத் தாக்குவதேன் என்று மார்டின் சில்வா திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டேயிருந்தான். பொலிஸ் அதிகாரி அது பற்றிக் காவனம் கொள்ளாமல் உடலில் எந்த இடத்தையும் விட்டு வைக்காமல் மேலும் அடித்தார். பின்னர் அருகேயிருந்த கதிரையில் அமருமாறு மார்டினுக்குக் கட்டளையிட்டார். அப்போது நிலையத்திலிருந்த சகலருமே இதனை அவதானித்தபடியிருந்தனர். அவ்வேளை உதவிப் பொலிஸ் பரிட்சகர் மதுபானம் அருந்தியிருந்ததாக மார்டின் சொன்னான்.

உதவிப் பொலிஸ் பரிட்சகருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மாமாவும் மருமகனும் அரச நிறுவனங்கள் பலவற்றுக்கு எழுத்து மூலம் முறைப்பாடு தெரிவித்தனர். மனித உரிமை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் கவுன்ஸில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அதிகாரி எனப்பல அவற்றுள் அடங்கும்.

மேற்குறித்த நிகழ்வின் மூலம் பொலிஸ் நிலையங்களில் துன்புறுத்தல் தவிர்க்க முடியாததொரு அம்சமாக மாறியுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. 1994 இல: 22ம் துன்புறுத்தல் மற்றும் மனிதத் தன்மையற்ற தாக்குதல் தொடர்பான சட்டத்தின் மூலம் (AT), துன்புறுத்தல் தடை செய்யப்பட்டிருந்த போதும், இலங்கைப் பொலீஸார் விசாரணை நடாத்தும் போது துன்புறுத்தலை மிகவும் சாதாரணமாகப் பயன்படுத்து வது தெளிவான விடயமாகும்.

துன்புறுத்தல், கொடூரமான மிருகத்தனமான செயல்கள், தண்டனை முதலானவற்றுக்கெதிரான சாசனத்தை இலங்கை 1944ல் (CAT) ஏற்றுக் கொண்டுள்ளதோடு, அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்களைத் தவிர்ப்பதற்கும், அவற்றுக்குத் தண்டனை வழங்கவும் அவசியமான விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளது. CAT சட்டத்தின் மூலம் உயர் நீதிமன்றமொன்றில் குற்றவாளிகளாகக் காணப்படும் நபருக்கு ஒரு வருடத்திற்குக் குறையாததும், பத்து வருடங்களுக்கு மேற்படாததுமான சிறைத் தண்டனையும், 10,000/= ரூபாவுக்குக் குறையாததும் 50,000/.ஸ்ரீ மேற்படாததுமான தண்டப் பணமும் நியமிக்க முடியும். 1979 இல 15ம் மோசடிச் சட்டத் தொகுப்பின் விதிமுறைகளுக்கமைவாக CAT சட்டத்தின் கீழ் நடைபெறும் குற்றங்களுக்குப் பிணை வழங்கவும் முடியாது.

அதற்கு மேலதிகமாக, சித்திரவதைக்கு இடமளிக்காத கொள்கை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மனித உரிமைக் கமிஷன் அனுமதித்துள்ளதோடு, தேசிய பொலிஸ் கவுன்ஸிலும் பொலிஸ் அதிகாரிகளின் மோசடி தொடர்பான விடயங்களை துரிதமாக விசாரிக்கும் செயலொழுங்கை ஏற்பாடு செய்துள்ளது. அது 2007 (மக்கள் முறைப்பாடு) சட்டங்களுக்கமை வாகவே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அந்தச் சட்டங்களுக்கமையவாக முறைப்பாடு கிடைத்து ஒரு மாதத்திற்குள் தேசிய பொலிஸ் கமிஷன் மூலம் விசாரணை பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**அப்படியிருந்தும் இலங்கை அரசால் இந்த ஒழுங்கு முறை சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டாததால் துன்புறுத்தலை பொலீஸ் நிலையங்களில் மென்மேலும் தொடர்கிறது. இது துன்புறுத்தல் தொடர்பான முறைப்பாடுகளிலிருந்து தப்பி நிற்கும் கலாச்சாரம் உருவாவதற்கு ஊக்கமளிக்கும். அதேவேளை, தமது கடமைக்காக துன்புறுத்தலை முறையற்ற விதமாக பிரயோகிக்கும் சுதந்திரம் உண்டென்ற கருத்தும் அரச கூட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்களில் வேரூன்றியிருப்பதற்கு காரணமாகியுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. தருவின் தலைவிதி

கற்பனாலோகக் கதாபாத்திரமொன்றை ஞாபகமூட்டுவது போல் பதினொரு வயதான தரு கவுனுக்கு மேலால் நீண்ட சீத்தைச் சட்டை அணிந்திருந்தாள். எங்களோடு வெட்கம் கலந்த சிரிப்புதிர்த்த அவளது சின்னக் கண்கள் நட்சத்திரம் போல பிரகாசித்தன. வெளிறிப் போன கன்னங்கள். மெலிந்த பலவீனமடைந்த உடல் மந்த போசனத்தின் விளைவைக் காட்டியது. வீட்டினதும் சுற்றாடலதும் தரித்திரத் தன்மையும் அதனூடாக வெளிப்பட்டது.

ஒருநாள் தனது தாயார் கபேட்டின் மீது பளபளக்கும் இரண்டு ரூபா நாணயமொன்றை வைப்பதைத் தரு கண்டாள். பிரத்தியேக வகுப் பொன்றுக்குச் சென்றிருந்த தனது ஏழு வயதுத் தங்கையை அழைத்து வர அவளது அம்மா சென்றிருந்தாள். பதினான்கு வயதான மூத்த சகோதரி தேநீர் தயாரிப்பதற்காகத் தண்ணீர் கொதிக்க வைத்துக் கொண்டிருந்தாள். முற்றத்தைப் பெருக்குவதே அவளுக்கு வழங்கப்பட்டி ருந்த வேலை. இருந்தும் அந்த இரண்டு ரூபாவையும் எடுத்துச் சென்று டொஃபி வாங்கி வந்து அக்கா, தங்கைமாரோடு பகிர்ந்து சாப்பிட வேண்டுமென்ற அவளது ஆசையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

பத்தொன்பது வயதான சமத் அருகே சிறுகடையொன்று செய்து கொண்டிருந்தான். "அண்ணா டொஃபி தாருங்கோ " என்று தரு இரண்டு ரூபா நாணயத்தைக் கொடுத்தாள். பணத்தைக் கையிலெடுத்த சமத் பின் கதவால் உள்ளே வருமாறு வேண்டினான். பயம், சந்தேகம் எதுவுமற்ற தரு உள்ளே சென்றாள். கடையோடிணைந்த அந்த வீட்டில் அப்போது எவரும் இருக்கவில்லை. தன்னோடு சில்மிஷம் புரியும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வியப்புக்கும் பயத்துக்கும் ஆளானாள். அவளுடைய வாயை ஒரு கையால் பொத்தியபடியே சமத் அவளைக் கெடுத்தான். அதனால் தரூ சத்தமிட எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. உயர்ந்த பருத்த அந்த இளைஞனோடு போராட அந்தச் சிறுமிக்கு பலமிருக்கவில்லை.

நான்கு டொ∴பி கொடுத்த சமத் நடந்த விடயத்தை யாருக்கும் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொண்டதோடு நாளைக்கும் வரும்படி சொன்னான். தரூ வீட்டுக்கு ஓடோடிச் சென்றாள். அம்மா இன்னும் வந்திரு க்கவில்லை. அவள் மேலும் பயந்தாள். வயிற்றுப் பகுதி விறைத்து உடல் வலித்ததால் அவள் அழத் தொடங்கினாள். உடையில் இரத்தப் படிவைக் கண்டதாய் அவள் பூப்படைந்திருப்பதாகவே நினைத்தாள். மேலும் அவள் மகளின் உடலை அவதானித்துப் பார்த்தபோதே உண்மை விளங்கியது.

கூலி வேலைக்காரனான தரூவின் தகப்பனுக்கு அன்று எந்த வேலையும் தேடிக் கொள்ள முடியவில்லை. தனது மகளை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல அவனிடம் இருபது ரூபா மாத்திரமே காணப்பட்டது. அடுத்தநாள் விமலாவதி தனது பிள்ளையை அழைத்துக் கொண்டு ஊர் வைத்தியசாலைக்குச் சென்று பரிசோதனைக்கு உட்படுத்தினாள். அவளது பயம், சந்தேகம் அனைத்தும் உறுதியாகியது. எம்பியுலன்ஸ் மூலம் தாயும் மகளும் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டனர். சமத் கைது செய்யப்பட்டதோடு அவனுக்கெதிராகப் பெண் வல்லுறவு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சிகிச்சை பெற்றதன் பின்தரூ பாடசாலைக்குச் சென்றாள். ஆசிரியர்கள் அவளை ஒரு பக்கமாக அழைத்துச் சென்று நடந்த விடயத்தைச் சொல்லுமாறு கேட்டனர். அது அவளுக்குப் பெரியதோர் தொல்லையாக மாறியது. கதையைக் கேட்டிருந்துவிட்டு உதவி கேட்டு ஏன் சத்தமிட வில்லையென்று ஆசிரியர்கள் கேள்வி எழுப்பினர். சிறுமியைக் குற்றவாளியாக்கும் தோரணையில் இன்னும் பல கேள்விகள் கேட்டனர்.

பெரும்பாலான துர்ச் செயல்களைப் போலவே நிரபராதிக்கும் அவளது குடும்பத்தினர்க்கும் இங்கும் பெரும் அதிர்வே ஏற்பட்டது. அதற்கு மேலாக குற்றாவளியின் உறவினர் தரப்பால் கடும் எச்சரிக்கைகள், பயமுறுத்தல்கள் முன்வைக்கப்பட்டன. பணம் பெற்றுக் கொள்வதற்காக எடுத்த பொய்யான முயற்சியென்றும் குற்றம் சுமத்தினர். தனது கணவனுக்கும் மகளுக்கும் தொல்லைகள் தொடருமென்று விமலாவதி பயந்து பின்வாங்கினாள். "நாங்கள் ஏழை எளிய மனிதர்களானாலும் பிள்ளைக்கு அகௌரவம் ஏற்படுத்த நாம் விரும்பவில்லை. நடந்ததென்னவென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை சொல்கிறாள்" சொட்டும் கண்ணீரைத் துடைத்தபடி அவள் புலம்பினாள்.

"கிரக சாஸ்திரியார் சாதகக் குறிப்பைப் பார்த்துவிட்டுப் பிள்ளைக்குக் கெட்ட காலம் என்றார். போதி பூஜைக்கும் தாயத்துக் கட்டவும் பெரும் தொகைப் பணம் செலவிட்டோம். ஒவ்வொரு நாள் மாலையிலும் சாந்தி கீதம் சொல்கிறோம். நானும் எனது கணவனும் பிள்ளைகள் மூவரும் தேவைப்படும் அனைத்தையும் கொடுக்கவே முயற்சிக்கிறோம். கொடுக்க முடியாமல் போகும் போது எங்களுக்குக் கவலை. தரு நடனமாட மிகவும் விருப்பம். அதனால் நடன வகுப்புக்கும் அனுப்பினோம். பாடசாலை வேளையின் பின்பு ஆசிரியர்களால் நடாத்தப்படும் வகுப்புகளுக்கு மூவரும் செல்கின்றனர்." விமலாவதி மென்மேலும் பெருமூச்சுவிட்டாள்.

தரித்திரத் தன்மைக்கு ஆளாகும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் விமலாவதிக்கு உண்டு. அன்றைய நாள் செலவைத் தேடிக் கடத்தும் அவர்கள் அடுத்தநாள் நன்றாக அமைய வேண்டுமென துதிப்பர். இத்தகைய குறைபாடுகளைக் கவனிக்கும் சுற்றுச் சமூகம் அந்தப் பலவீனங்களைத் தமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ளவே பார்த்திருப்பர்.

துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்படுவர்கள் இலங்கைச் சமூகம் அபகீர்த்தியுடனேயே அவதானிக்கின்றது. இது மிகவும் அநீதியானது. இதனால் தவறு செய்தவர்களுக்கெதிராக தகுந்த வகையில் வழக்குத் தாக்கல் செய்யவும் தடையேற்படுகிறது. சரியான விசாரணையோ டீஎன்ஏ போன்ற நவீன விஞ்ஞான வசதிகளை சாட்சியாக முன்னெடுக்கும் வாயப்பும் குறைகிறது. அநியாயம் செய்தவனைச் சுட்டிக் காட்டுவதற்குப் பதிலாக பதிக்கப்பட்டவனையே அவனது 'தலைவிதி' மீது குற்றம் சுமந்தும் தவறான எண்ணப் போக்கே இன்று இலங்கையில் நிலவுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியோ நஷ்டஈடோ பெற முடியாமல் போவதற்கும் இதுவும் காரணமாகிறது.

**இலங்கைத் தண்டனை சட்டக் கோவை 363 சரத்து 1995 திருத்தத்திற் கமைய பெண் பாலியல் வல்லுறவு மிக மோசமான செயலாக அறிவிப்ப தோடு 364ம் சரத்தில் அதற்கான தண்டனை. நஷ்டஈடு பற்றி விரிவாகத் தரப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. திருடன் பிடிக்கும் முறை

ரவி ஒரு சிறு வியாபாரி. ஒரு நாளிரவு வீட்டுக்கு வந்த பொலீஸ்காரர் இருவர், வாய்மொழியொன்று எடுப்பதற்காகத் தங்களோடு பொலீஸ் நிலையத்திற்கு வருமாறு கேட்டுக் கொண்டனர். பொலிஸ்"க்குச் சென்ற ரவி அதன்பிறகு வரவேயில்லை.

அடுத்த நாள் காலை பொலீஸ் நிலையம் சென்ற அவனது மனைவி, கணவன் கைது செய்யப்பட்டுள்ள விடயத்தை அறிந்து கொண்டாள். கணவனின் இரண்டு கால்களும் வீங்கி இரத்தம் வழிந்து கொண்டிருந்ததோடு, உடல் முழுவதும் கடும் சித்திரவதையால் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்தது. தன்னை நிர்வாணமாக்கி முகட்டு வளையில் தூக்கப்பட்டமை பற்றி ரவி தனது மனைவிக்குச் சொன்னான்.

மதுப்போத்தல், ரூபவாஹினி மற்றும் கெஸட் ரேடியோக்கள் உள்ளிட்ட பல பொருட்களைக் காட்டி அது விடயமாகத் தெரிந்ததைக் கூறுமாறு கட்டளையிடப்பட்டது. அதன் பின்னர் அப்பொருட்களின் சொந்தக்காரர் முன் மீண்டும் தாக்கப்பட்டான்.

ஏழு நாட்களின் பின்பு நீதிபதியொருவர் முன்கொண்டு செல்லப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டான். நாட்பத்தெட்டு மணி நேரத்திற்கு மேல் பொலிஸ் காவலில் வைத்திருப்பது சட்ட விரோதமானாலும் கூட, ரவி ஏழு நாட்கள் பொலிஸில் வைத்திருக்கப்பட்டான்.

ரவிக்கு எதிராக எந்த முறைப்பாடும் முன்வைக்கப்படாததால் ஒரு வாரத்தின் பின் அவன் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டான். ஏதோ களவு காரணமாகவே ரவி கைது செய்யப்பட்டதாகப் பின்னர் அறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்தது. அவனுக்கெதிராக எந்தச் சாட்சியையும் தேடிக் கொள்ள முடியாததால், அடித்துத் துன்புறுத்தி களவெடுத்ததாக ஒப்புக் கொள்ள வைப்பதே அவர்களது எதிர்பார்ப்பாகும். பின்னர், ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை செய்வதற்காக வைத்தியசாலையில் ரவி அனுமதிக்கப்பட்டான்.

ரவியின் மனைவி இந்நிகழ்வை மனித உரிமைக் கமிஷனில் முறைப்பாடு செய்தாள். அந்த முறைப்பாடு சரியான முறையில் பதிவாகியது. அது தொடர்பாக விசாரணை நடத்திய கமிஷன், பொலிஸ் தாக்குதல் நடாத்தியுள்ளதாகவும் இலங்கை அரசியல் யாப்பின் 11மற்றும் 13 (1) சரத்தின் கீழ், ரவியின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர்கள் குற்றவாளிகளென தெரிவித்தது. அதற்கு இரண்டரை வருடங்களுக்குப் பின், அதாவ 2007.03.28 ல் மனித உரிமைக் கமிஷன், ரவிக்கு ரூபா 12500/= நட்டஈடு வழங்குமாறு பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெரிவித்தது. ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் முன் வைத்த மேன்முறையீடு கமிஷனால் நிராகரிக்கப்பட்டது.

இதனை அறிக்கைப் படுத்தும் போது கமிஷனின் சிபார்சை பொலிஸ் அதிகாரிகள் நிறைவேற்ற நடவடிக்கை மேற் கொண்டிருக்கவில்லை. அது மட்டுமன்றி, முறைப்பாட்டை வாபஸ் பெறுமாறு தன்னை அடிக்கடி பயமுறுத்தித் தொல்லை தருவதாக ரவி தெரிவிக்கிறான்.

பொலீஸார் தனக்கெதிராக பொய்யான இரண்டு முறைப்பாடுகள் செய்துள்ளதாக ரவி மேலும் சொல்கிறான். ஒரு முறைப்பாட்டை ஒட்டி பிடி விறாந்துக்கமைய ரவி பொலிஸாரால் கைது செய்யப்பட்டான். 2007.07.02ல் நான்காவது முறையாக கேட்கப்பட்ட அவ்வழக்கு மீண்டும் பின்போடப்பட்டுள்ளது.

முதல்முறைப்பாடு தொடர்பான வழக்கு பிற்போடப்பட்டபின் ரூபா 12,000/= பெறுமதியான தங்க நகைக் களவு பற்றிய இன்னொரு முறைப்பாடு இருப்பதாக பொலிஸார் நீதிபதிக்குத் தெரிவித்தனர். தனக்கு இன்னொரு முறைப்பாடிருப்பதை ரவி அப்போது தான் தெரிந்து கொண்டான்.

ரவி நீதிமன்றத்தில் அமர்ந்திருக்கும் போது அவ்விடத்திற்கு வந்த பொலீஸ் குழுவினர், மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்து இந்தத் தொல்லையை ஏற்படுத்தியது ரவியின் மனைவியே என்றனர். அதனால் மீண்டும் கைது செய்வதாக எச்சரித்தனர். "எங்களுக்குத் தொல்லை தரும் போது அதைவிட அதிக தொல்லை நாம் தருவோம்"- என்றனர். "மனித உரிமைக் கமிஷன் ரூபா 12500/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துமாறு சிபார்சு செய்துள்ளது. அதற்குப் பதிலாக 12000/= களவு வழக்கை நாங்கள் தயார் படுத்தியுள்ளோம்" என்று மேலும் தெரிவித்தனர்.

சட்ட விரோதமாகக் கைது செய்தல், தடுத்து வைத்திருத்தல், துன்புறுத்தலுக்கு உள்ளாக்குதல், பொய்க் குற்றச் சாட்டுக்களைச் சோடித்தல் என்பன பொலிஸ் விசாரணையின் போது எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்படுகிறதென்பதற்கு தெளிவானதொரு எடுத்துக்காட்டாக இச்சம்பவம் அமைகிறது.

துன்புறுத்தல் செய்த பொலீஸார் குற்றவாளிகளென மனித உரிமை ஆணைக்குழு தீர்ப்பளித்த போதும், 1994 இல 22ம் துன்புறுத்தல் சட்டத்திற்கமைய இந்த அதிகாரிகளுக்கெதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஒழுக்காற்று செயற்பாடு கூட முன்னெடுக்கப்பட வில்லை. தொடர்ச்சியாக ரவிக்கு தொல்லை, எச்சரிக்கை, பயமுறுத்தல், பொய்க் குற்றச்சாட்டு செய்து கொண்டு, பொலிஸ் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தபடி அவர்கள் பொலீஸில் சேவையாற்றுகிறார்கள்.

**சட்ட விரோதமாகவும், தான் தோன்றித்தனமாகவும் கைது செய்தல், பிரஜைகளைச் சித்திரவதை செய்தல், மற்றும் அவ்வாறான மோசடி செய்து விட்டு பொலீஸார் தப்பி நிற்றலை, சிவில் மற்றும் அரசியலுரிமை தொடர்பான சர்வதேச ஒப்பந்தம் (ICCPR) முற்றாகத் தடை செய்கிறது. வதை துன்புறுத்தலுக் கெதிரான சாசனத்திலும் (CAT) இலங்கை உறுப்புரிமை பெற்றுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. 'ஆதர்ஷ' ஆசிரியை

**ப**தினான்கு வயதான சவினி ஜீவத்துடிப்பு மிகுந்ததொரு சிறுமி. மிகுந்த மகிழ்ச்சியோடு தனது பொழுது போக்குகள் பற்றிக் கதைத்தாள். ஆனாலும் தனக்கு மீண்டும் வலைப்பந்தாடவோ, பாடசாலை விளையாட்டுக்களில் ஈடுபடவோ, இல்ல விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றவோ வாய்ப்பில்லையென்று சோகம் கலந்த தொனியில் கூறினாள். நூறு மீற்றர் ஓட்டம், நீளம் பாய்தல், உயரப் பாய்தல், போன்ற நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியதன் மூலம் சென்ற ஆண்டில் அவள் பதினான்கு வயதின் கீழ் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டாள்.

ஒரு நாள் வகுப்பாசிரியையான அமரா பெரேராவுக்கு அவளது புத்தகப் பையினுள்ளிருந்து ஒரு டயறி கிடைத்தது. அதிலிருந்த ஒரு குறிப்பை அவர் சத்தமிட்டு வாசித்தார். ஓர் ஆண்பிள்ளையின் பெயருக்கு நேரே 'அவன் என் சகோதரன் போன்றவன்' என்று குறிக்கப்பட்டிருந்தது. வகுப்பு மாணவர்கள் முன்னிலையில் அது தொடர்பாக சவினியிடம் கேள்வியெழுப்பிய வகுப்பாசிரியை, அவள் ரகசியமான காதல் தொடர்பு வைத்திருப்பதாகத் தெரிவித்தார். சவனி அதை மறுத்த போதும், அப்படி மறுத்தமைக்காகத் தன்னிடம் மன்னிப்புக் கோருமாறு கட்டளையிட்டார். மன்னிப்புக் கேட்குமளவுக்குத் தன்னால் குற்றம் எதுவும் நடைபெறவில்லையென்று அவள் உறுதியாகத் தெரிவித்தாள். கோபமடைந்த ஆசிரியை அவளது கன்னங்களுக்கு மாறிமாறி அறைந்தார். பதினான்கே வயதான அச்சிறுமியால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆவேசப்பட்டு அழுத அவள், பாடசாலைக் கட்டிடத்தின் மூன்றாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடியிலிருந்து கீழே குதித்தாள். அதிர்ஷ்டவசமாக அவளது உயிருக்கு ஆபத்தேற்படவில்லை. ஒருகால் உடைந்து விட்டது.

இந்த நிகழ்வு பற்றி சவினியின் அப்பா பொலீஸில் புகார் செய்தார். மனித உரிமை ஆணைக்குழு, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம், பொலிஸ் மா அதிபர் அலுவலகம் போன்றவற்றுக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டை விசாரித்த பொலீஸார் அதனைப் பிரதேச சமாதான சபைக்கு பொறுப்பளித்தனர். சமாதான சபையின் அழைப்புக்கேற்ற சவினி யும் அவளது பெற்றோரும் சென்றனர். அங்கே ஆசிரியையின் தேவைக் கேற்ற விதமான செயற்பாடுகள் நிலவுவது அவர்களுக்குத் தெரிய வந்தது. சவினியின் இந்நடவடிக்கை பாடசாலையின் நற்பெயருக்கு களங் கம் ஏற்படுத்துவதாக அமைவதால், வைத்திய சிகிச்சைக்காக ஆசிரியை யிடம் பண உதவி பெற்றுக் கொண்டு நடந்ததை மறந்து விடுமாறு கேட்டுக் கொண்டனர்.

அதைத் தொடர்ந்து அதிபரோடு இன்னும் சில ஆசிரியர்களும் வீட்டுக்கு வந்து நிகழ்ந்ததை மறந்துவிடுமாறு கேட்டுக் கொண்டனர். அவர்களும் தவறு செய்த ஆசிரியையைக் காப்பாற்ற முனைவது தெளி வாகத் தெரிந்தது. அப்பகுதி தலைமைத் தேரரும் ஒருநாள் சவினியின் வீட்டுக்கு வந்து சமாதானமாக முடித்துக் கொள்ளுமாறு வேண்டினார். ஆனால், சவினி குடும்பத்தினர்க்கு உண்மையை நிலை நாட்டுவதே தேவையாகவிருந்தது.

நிகழ்ச்சிக்குப் பிறகு சவினி பாடசாலைக்குச் செல்லவில்லை. கால் முறிவு சீராகிக் கொண்டிருந்தது. சவினியின் வகுப்புத் தோழிகள் விடுபட்டுப் போன, பாடத்திட்ட வேலைகள், குறிப்பு வகையாறாக்களைக் கொண்டு வந்து தர விருப்பம் தெரிவித்தனர். இருந்தும் அது வகுப்பா சிரியையால் தடுக்கப்பட்டது. அவளது வீட்டுக்கு மாணவிகள் போகக் கூடாதென்று தடையும் விதிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட நிலைமையின் கீழ் தனது பிள்ளையை அப்பாடசாலை க்கு அனுப்ப விரும்பவில்லையென அவளது பெற்றார் தெரிவித்தனர். ஆசிரியர் குழுவினரால் சவினியின் நடத்தைக்கு பாடசாலைச் சூழலிலும், கிராமத்திலும் சேறுபூசும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கள் முறையிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த வருடம் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதி சவினிக்கிருந்தது. இருந்தும் எட்டுமாத காலக் கல்வி அவளுக்கு அற்றுப் போனதால் திருப்திகாரமாகப் பரீட்சைக்குத் தோற்றுவது சந்தேகத்துக் கிடமானதே.

தனது பிள்ளையின் கல்வியைத் தொடர்வதற்காக பாடசாலையொன் றில் அனுமதி பெற்றுத் தருமாறு கேட்டு, சவினியின் தகப்பன் கல்வி அதிகாரிகளுக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதினார். பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் சவினியைப் பாடசாலையொன்றுக்கு அனுப்பிய போதும், அந்தப் பாடசாலை அதிபர் அந்த மாணவியை அனுமதிக்க இணங்கவில்லை. அதிகாரம் கொண்டவர்கள் சவினிக்கு பாடசாலை பெற்றுக் கொடுக்க பயனுள்ள வேறு நடவடிக்கை எடுக்கவுமில்லை.

இந்நிகழ்வு கல்வி கற்பதற்கான சவினியின் உரிமையை மீறுவதாகும். 1991.07.21ந் திகதி சிறுவர் உரிமைச் சாசனத்தில் இலங்கையும் பங்கேற்புடையது. "பிள்ளைக்கான கல்வி பெறும் உரிமையை அரச தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அது முற்போக்கானதும், சம சந்தர்ப்பம் அளிப்பதுமாகும்" என்று அந்த சாசனத்தில் குறிக்கப்பட்டுள் ளது. இலங்கை அரசியல் யாப்பிலும் கல்வி பெறும் உரிமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. "எழுத்தறிவின்மையை முழுமையாக இல்லாமல் செய்து எல்லா மட்டங்களிலும் கல்வியை முழுமையாக்கி, சம அடிப்படை யில் எல்லாப் பிரஜைகளுக்கும் கிடைப்பதற்கு உறுதி செய்தல்"- என்று அரசின் குறிக்கோளாக 27(2)H சரத்தில் காணப்படுகிறது.

**சவினியின் சம்பவம் நிகழ்ந்து எட்டு மாதம் கழிந்தும் வகுப்பாசிரி யையான அமரா இன்னும் அதே பாடசாலையில் கற்பிக்கிறார். அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.**

**பின்வருவனவற்றை அந்த ஆசிரியை மீறியுள்ளார்.**

**1. இலங்கைப் பாடசாலை மாணவர்களுக்கு உடல்ரீதியான தண்டனை வழங்குவதை தடைசெய்து சகல பாடசாலைகளுக்கும் கல்வி அமைச்சு அனுப்பியுள்ள 2005.05.11. திகதியிட்ட ED/01/12/01/04/24 இலக்க சுற்று நிருபம்.**

**2. துன்புறுத்தல், மனிதத் தன்மையற்ற அல்லது இழிவாக**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்துவதிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையை ஏற்கும் அரசியல் யாப்பின் 10ம் விதிமுறை.

3. இலங்கையின் பங்கேற்புடன் கூடிய சிறுவர் உரிமைச் சாசனம் 37ம் விதப்புரை.

4. சிறுவர்களுக்குத் துரோகம் செய்வதை தெளிவாகத் தடுக்கும் தண்டனைச் சட்டக் கோவை 308A (1) ம் சரத்து.

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு குற்றவாளியாகக் காணப்படும் எந்தவொரு நபருக்கும் இரண்டு வருடத்திற்குக் குறையாததும் பத்து வருடத்திற்கு மேற்படாததுமான சிறைத் தண்டனையுடன் தண்டப் பணமும் நியமிக்கப்படலாம். நீதிமன்றம் தெரிவிக்கும் நட்டஈடும் வழங்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. மாதாந்த இலக்கு

சித்ரசேன ஜனசங்சதய காரியாலயத்திற்கு முச்சக்கர வண்டியில் வந்தான். அவனுக்கு உதவியாக ஒரு கிராமத்தவனும் வந்திருந்தான். நடப்பது கூட அவருக்குக் கஷ்டமாகவிருந்தது. அவனது உடலில் கறுப்பாகத் தழும்புகள் காணப்பட்டன. தலையை நேரே வைத்திருக்கவும் கஷ்டப்பட்டான்.

அவனுடைய வாழ்க்கையே சோகம் நிரம்பிய கதை. மூன்று வயதிலேயே அவன் அனாதையானான். அவனைப் பராமரித்த பாட்டி அவனது ஏழுவயதில் இறந்து போனார். அன்று முதல் உறவினர்களோ நிரந்தர வசிப்பிடமோ அவனுக்கு இல்லாமல் போய்விட்டது. பிறந்த தினம் கூட அவனுக்குத் தெரியாது. எழுதவோ வாசிக்கவோ தெரியவில்லை. சம வயதுப் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும் போது சித்ரசேன ஒரு வாய்ச் சோற்றுக்காகக் கூலி வேலை செய்தான்.

அப்படியிருந்த போதும், அவனுக்குப் பொறமையுணர்வு ஏற்படவில்லை. கிடைப்பதைக் கொண்டு திருப்தியடைந்து அவன் வாழ்வைக் கடத்தினான். இள வயதிலேயே அவன் கசிப்புக் குடிக்கப் பழகினான். மாலையாகும் வரை செலவிட்டு எஞ்சிய சிறுதொகையைக் கொண்டே அவன் குடித்தான்.

ஒரு நாள் கிராமத்தில் ஒரு மரணம் நிகழ்ந்தது. சித்ரசேன அங்கு போகும் போது இடையில் நான்கு பொலீஸார் அவனை நிற்குமாறு பணித்தனர். அவர்கள் சாதாரண உடையில் காணப்பட்டனர். "கசிப்பு எங்கே உள்ளது?" என்று அதில் ஒருவன் கேட்டான். தன்னிடம் கசிப்பு இல்லையென்று சித்ரசேன தெரிவித்தான். அதன் பின்னர் அவர்கள் பாதையோர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவிருந்த கரப்பந்தாட்ட மைதானத்திற்கு அவனை இழுத்துச் சென்றனர். கரப்பந்தாட்டத் தூணைப் பிடித்துக் கொள்ளுமாறு சொன்ன அவர்கள், வேலிக் கதியலொன்றை முறித்தெடுத்து அதனால் மிருக்கத் தனமாக அடிக்கத் தொடங்கினர். கை, கால், தொடை, பின் பகுதி மட்டுமல்ல, தலைக்குக் கூட அடிகள் விழுந்தன. "நான் என்ன தவறு செய்ததற்காக அடிக்கிறீர்கள்?"- என்றபடி சித்ரசேன வேதனையால் துடித்தழுதான். எதையுமே கவனிக்காத பொலீஸ்காரர்கள் "நாங்கள் பொலீஸ்" என்றபடி தொடர்ந்தும் தாக்கினர். அப்போது பிரதேசவாசிகள் இதனைப் பார்க்க மெல்ல மெல்ல ஒன்று கூடினர்.

பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட சித்ரசேன பொலிஸ் கூட்டில் போடப்பட்டான். பொலிஸ் தாக்குதலுக்கு ஆளான இன்னும் மூன்று பேர் அந்தக் கூட்டில் காணப்பட்டனர். அங்கு ஒரு கோப்பைத் தண்ணீர்ப் கூடத் தரப்படவில்லையென்று சித்ரசேன தெரிவித்தான். பொலீஸ் தாக்குதலால் ஏற்பட்ட காயங்களுக்கு மருந்து கூடப் போடப் படவில்லை.

சித்ரசேன கடுமையான நோய்க்காளானான். கடுமையான தலை வலியேற்பட்டது. பல தடவை வாந்தியெடுத்தான். தன்னை வைத்திய சாலையில் சேர்க்குமாறு மீண்டும் மீண்டும் வேண்டினான். வைத்தியசாலை யில் பொலீஸார் தாக்கியது பற்றி எதுவும் சொல்லக் கூடாதென்றும், வழுக்கி விழுந்ததால் ஏற்பட்ட காயமென்றும் சொல்லுமாறு கட்ட ளையிடப்பட்டதோடு, அதற்கு மாறாக எதுவும் சொன்னால், கஞ்சா அல் லது தூள் வைத்திருந்ததாக முறைப்பாடு செய்து சிறைக்கனுப்புவதாகக் கடும் எச்சரிக்கை விடுத்தனர்.

அன்று இரவு பொலிஸுக்கு வந்த கிராமத்தவர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்த சித்ரசேனவை விடுவித்தார். கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டு சித்ரசேனவுக்கெதிராக இருப்பதாகவும், இருபத்தொன்பதாம் திகதி நீதிமன்றத்திற்கு வருமாறும் கட்டளையிட்டனர். என்னிடம் கசிப்பு இருக்கவில்லையே என்று சொன்னபோது, எங்களிடம் 'சாமான்' உண்டு, எங்களுக்கு பலிக்கடாக்கள் தான் தேவையென்று பொலீஸ்காரர்கள் சிரித்தபடி கூறினர். அவர்களது மாதாந்த இலக்கைப் பூர்த்தி செய்ய மாட்டிக் கொண்டவர்களில் சித்ரசேனவும் ஒருவன்.

ஊருக்கு வந்த சித்ரசேன கடுமையான வேதனைக்கு ஆளானான். நோய்வாய்ப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்ட அவன் சாப்பிடுவதெல்லாம் வாந்தியாக வெளிப்பட்ட போதும், பொலீஸாரின் எச்சரிக்கைக்குப் பயந்து வைத்திய சிகிச்சைக்குச் செல்லவும் தயங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குத் தினத்தன்று சித்ரசேன நீதிமன்றம் சென்றான். அவனுக் கெதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் பாரதூரமானதென அவனது சட்டத்தரணி தெரிந்து கொண்டார். கசிப்பு வைத்திருந்தது, மாத்திரமன்றி, கசிப்பு வடிக்கத் தேவையான 'கோடா பெர்'லொன்றும் காணப்பட்டதாக அவனுக்கெதிராகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. தான் நிரபராதியென்று அவன் நீதிமன்றத்தில் தெரிவித்தான். தனது கட்சிக்காரருக்கு பொலீஸார் அடித்துத் துன்புறுத்தியது மாத்திரமன்றி, அவனுக்கெதிரான குற்றச்சாட்டு பொலீஸாரால் சோடிக்கப்பட்டதென்றும் சட்டத்தரணி எடுத்து விளக்கினார். காயங்களுண்டா? என்று நீதிபதி கேட்டபோது சித்ரசேன காயங்களைக் காட்டினான். இருந்தும் அவனை சட்ட மருத்துவரிடம் பரிசோதனைக்கு நீதிபதி அனுப்பவில்லை. மோசமான நடவடிக்கைகளை நீதிமன்றத்தில் எடுத்துக் கூறிய போதும் பாதிக்கப்பட்டவர் தனது உடற்காயங்களைக் காட்டியபோதும் நீதிபதி பொறுப்பற்ற விதமாக எல்லாம் அலட்சியம் செய்து நின்றார்.

நிகழ்வுக்கு இரு வாரங்களின் பின்பே சித்ரசேனவின் நண்பரொருவர் அவனை ஜனசங்சதயவுக்கு அழைத்து வந்தான். அவனுடலில் தாக்குதலால் ஏற்பட்ட காயங்களும் தழும்புகளும் காணப்பட்டன. அவன் உடனடியாக சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். விசேட வைத்தியர் ஒருவர் பார்வையிட்டு விட்டு, கடுமையான தாக்குதலால் தகர்தலும் காயமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். சித்ரசேன இன்னும் வேதனையால் வாடுகிறான். முழு உடலும் நோய்வாய்ப்பட்டுள்ளது. வலது கையும் தோளும் அரைகுறையாகவே செயற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. ஆசிரியர்களின் பொலீஸ்

கடுகுருந்து கஹலந்தையில் வாழும் எட்டு வயது சதுன் பாடசாலையை விட்டு வீட்க்கு வந்தான். அவனது உடலில் நீல, கறுப்பு தகர்ந்த தழும்புகள் காணப்பட்டன.

வகுப்பாசிரியை அன்று வரவில்லையென்றும் மேல் வகுப்பு மாணவர் ஒருவர் வகுப்பைக் கவனித்ததாகவும் சதுன் தனது தாயிடம் சொன்னான். தனக்கும் ஏனைய பிள்ளைகளுக்கும், அந்த மேல் வகுப்பு மாணவன் பிரம்பினால் அடித்ததாக சதுன் விபரித்தான்.

சதுனின் தாயார் இவ்விடயத்தை அதிபரிடம் எடுத்துச் சொன்னாள். சதுனின் அடையாளங்களைப் பரீட்சித்த அதிபர், வகுப்பாசிரியர் வராமையால் வகுப்பை பார்த்துக் கொள்ள மாணவர் தலைவர் ஒருவரை நியமித்ததாக தெரிவித்தார். அவன் சதுனிற்கு அடித்திருந்தால், அவனை மாணவர் தலைவர் பதவியிலிருந்து நீக்குவதாக அதிபர் கூறினார். அந்த மாணவர் தலைவர் இன்று பாடசாலைக்குச் சமூகமளிக்கவில்லையென்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

வகுப்பாசிரியையிடமும் சதுனின் தாயார் இந்த விபரத்தைச் சொன்னபோது, வகுப்பு வேலைகளை சதுன் சரியாகச் செய்யாததால், அவன் இவ்வாறு பொய் சொல்வதாக அவர் தெரிவித்தார். பாடசாலைப் பொறுப்பாளர்கள் இவ்விடயமாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத தால் சதுனின் தாயார் இதனையிட்டு பொலீஸில் முறைப்பாடு செய்தாள். தனது பிள்ளைக்கு அடித்த மாணவன், மாணவர் தலைவரல்ல என்றும் அவன் வகுப்பாசிரியையயின் மகன் என்பதும் சதுனின் தாயாருக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிய வந்தது. மேல் வகுப்பு மாணவன் பாடசாலைக்கு வரவில்லையென்று அதிபர் சொன்னதும் பொய்யென்பது சதுனின் அம்மாவுக்கு விளங்கிவிட்டது.

சதுன் தொடர்ந்து பாடசாலைக்குச் சென்றான். 2007.07.10 ல் பாடசாலைக்கு வருமாறு சதுனின் தாயாருக்கு பொலீஸார் அறிவித்தனர். அதிபர் காரியாலயத்தில் வைத்து, சதுனுக்குத் தொல்லை தந்தவனை மேல் வகுப்பு மாணவர் மத்தியில் சதுன் இனம் காட்டினான். அப்போது "இம் மாணவன் மிகவும் பணிவானவன். இளம் மாணவர்களைத் தாக்கும் தன்மை அவனிடமில்லை. சதுன் சொல்வது பொய்" என்று அதிபர் பொலீஸாரிடம் கூறினார்.

"கடுகுருந்து கஹலந்த மிகவும் கீழ்த்தரமான கிராமம். அடுத்த வருடம் இந்தக் கிராமத்திலிருந்து ஒருவரைக் கூட இப்பாடசாலையில் சேர்ப்பதில்லை" என்று அதிபர் சதுனின் தாயாரைத் திட்டியபடி சொன்னார். ஆயிரம் மாணவர்களைக் கொண்ட பாடசாலையைப் பொறுப்பெடுத்த அதிபராக நிர்வாகம் செய்வது எவ்வளவு சிரமமாதெனப் புரிந்து கொள்ளுமாறு வேண்டினார். பின்னர் ஒரு கடிதம் எழுதித் தந்துவிட்டு மகனைப் பாடசாலையிலிருந்து விலக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

அடுத்த நாள் சதுன் பாடசாலைக்குச் சென்றான். "பொலீஸுக்குப் போய்விட்டு பாடசாலைக்கு வர வெட்கமில்லையா?" என்று கேள்வி எழுப்பினார் பிரதி அதிபர். பாடசாலையிலிருந்து விலகிக் கொள்வதற்கான கடிதம் கொண்டு வந்தாயா? என்று வகுப்பாசிரியை கேட்டார். சதுனுக்கு அவர் எதுவுமே கற்பிக்கவுமில்லை. அவனைப் புறக்கணித்து நடந்து கொண்டாள். வகுப்புப் பயிற்சிகளை செய்து காட்டும் போது, "அதைப் பார்க்க எனக்கு நேரமில்லை" என்றார்.

இந்தக் கெடுபிடிகளைப் பற்றி சதுனின் அம்மா மீண்டும் பொலீஸில் முறையிட்டாள். மாகாணக் கல்விப் பணிப்பாளரை சந்திக்கச் சென்றபோது அவர் காணப்படாததால், பிரதிப் பணிப்பாளரிடம் முறைப்பாடு கையளிக்கப்பட்டது. இப்படியான சந்தர்ப்பங்களில் எல்லா ஆசிரியர்களும் பக்கச் சார்பாக நடப்பது சாதாரண விடயமென்பதால், இதற்கு ஒரே தீர்வு பிள்ளையை வேறு பாடசாலையில் சேர்ப்பது தான் என்றார்.

பாடசாலைக்குச் சென்ற பொலீஸார் பிள்ளையை 3C வகுப்பிலிருந்து 3B வகுப்புக்கு மாற்றுமாறு சொன்னார்கள். அப்பாவி சதுனுக்கு அந்த வகுப்பாசிரியையும் தொல்லை கொடுக்கத் தொடங்கினார். போதாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைக்கு முறைப்பாட்டை வாபஸ் வாங்குமாறு பொலிஸார் சதுனின் தாயாரை நெருக்குதல் செய்தனர். இதனால் மனத்தாக்கத்துக்குள்ளான சதுன் தனது கல்வியை நிறுத்திவிட்டதாக அவனது தாய் கூறினாள். இதனை நாம் பதிவு செய்யும் போது நிகழ்வு இடம்பெற்று ஒரு மாதம் கடந்திருந்தது. சதுனைத் தாக்கிய மாணவனின் பக்கமாக அதிபர்-ஆசிரியர்கள் அனைவரும் சார்ந்து நின்றனர். அது மாத்திரமன்றி சதுனை அவமதித்துக் கொண்டு, தொல்லை செய்து கொண்டு, எச்சரித்துக் கொண்டு..... சதுன் பாடசாலையிலிருந்து விலகிவிட வேண்டுமென்றும் கோரி நின்றனர்.

அநீதிக்கெதிராக பணிவோடு எழுந்த சதுனும் அவனது குடும்பத்தினரும் அதன் பிரதிபலனை அனுபவிக்கின்றனர். ஆறு பிள்ளைகளைக் கொண்ட அக்குடும்பத்தில் அவனே இளையவன். அவனது தந்தை ஒரு கள்ளிறக்கும் தொழிலாளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. தூங்கிச் செத்த மீனவன்

நிமல் இருபத்தொன்பது வயதான மீனவன். 2007.07.21 ல் அதிகாலை ஐந்து மணியளவில் அவன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவனது வீட்டுக்குத் தொலைபேசிச் செய்தியொன்று கிடைத்தது. நிமலின் தாயார் அலிஸ் நோனா, தொலைபேசித் தகவல் தந்தது யாரென்பதை அறிந்து கொள்வதற்காக அந்த இலக்கத்தைச் சுழற்றிய போதும் பதில் கிடைக்கவில்லை.

அடுத்த நாள் காலை எட்டுமணியளவில் அலிஸ்நோனா பொலீஸ் நிலையம் சென்றாள். தனது மகன் பொலீஸ் கூட்டில் நிற்பதை அவள் கண்ணுற்றாள். அவனருகே செல்ல அவள் முனைந்த போது பொலீஸார் அவளை விரட்டிவிட்டனர். தனக்குச் சேட்டொன்று தேவையென்று நிமல் தனதம்மாவுக்கு செய்கை மூலம் காட்டினான்.

வீட்டுக்குச் சென்ற அலிஸ் நோனா சாரன், சேட், சாப்பாட்டுப் பார்சல் என்பனவற்றை ஒழுங்கு பண்ணி நிமலின் மனைவி குமாரியிடம் அனுப்பினாள். இருந்தும் சாரனை மாத்திரம் கொடுக்கவே பொலீஸ் அனுமதி கொடுத்தது. பொலீஸ் தனக்கு மோசமான முறையில் அடித்ததாக மனைவியிடம் தெரிவித்தான். காயப்பட்டுள்ள அடையாளங்களைக் கூடக் காட்டினான். நிமலின் அண்ணன் சமரே பிற்பகல் இரண்டு மணிக்கும் நான்கு மணிக்கும் இரு தடவை சென்றும் கூட நிமலைப் பார்க்க அனுமதி வழங்கப்படவில்லை.

அன்று இரவு பதினொன்றரை மணியளவில் ஜீப் வண்டியில் வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீஸ்காரர் இருவர் நிமலின் தந்தையான டிரோனையும் பொலீஸ"க்கு அழைத்துச் சென்றனர். சற்று நேரத்தின் பின்னர் நிமலின் தம்பி ஜகத் வீட்டுக்கு வந்து, கைது செய்யப்பட்டிருந்த நிமல் இறந்திருப்பதாகச் சொன்னான். தனது மூத்த மகனுடன் பொலிஸ"க்குச் சென்ற அலிஸ் நோனாவுக்கு கூட்டுக்குள்ளிருந்த சவத்தைத் தான் காண முடிந்தது. காலையில் அவளனுப்பிய சாரத்தினால் உடல் மூடப்பட்டிருந்தது. நிமிர்ந்த நிலையில் அவனது உடல் கூட்டால் கட்டப்பட்டிருந்தது. நிமல் தூங்கிச் செத்ததாக பொலீஸ் கூறியது. அடுத்த நாள் காலையில் பொலீஸ"க்குச் சென்றோருக்கு நிமலின் காற்சட்டை மற்றைய நாட்களை விட மேலாக முடிச்சிடப்பட்டுள்ளமை தெரிந்தது. மேலதிக நீதிபதி வந்தபோது, தனது மகனை துன்புறுத்தி பொலீஸார் கொன்று விட்டதாகத் தெரிவித்தாள். பொலீஸ் நிலையத்திலும் வைத்தியசாலைச் சவ அறையிலும் சடலத் தைப் பார்த்தபோது மார்பு, முகமெல்லாம் அடிக்காயம் காணப்பட்ட தாகவும் தலையிலும் சிறைக்கூட்டிலும் இரத்தக்கறை இருந்ததாகவும் அவள் தெரிவித்தாள்.

விடயம் இப்படியிருந்த போதும் மேலதிக நீதிபதி கையொப்பமிட்ட ஆவணங்களில் நிமல் தூங்கித் தற்கொலை செய்து கொண்டதாகவே காணப்பட்டது. அந்த முடிவைத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாதென அலிஸ் நோனா கூறினாள். போதைத் தூள் தன்வசம் வைத்திருந்தமை தொடர்பான வழக்கு நிமலுக்கு எதிராகத் தொடங்கப்பட்டிருந்தது. இறுதி விசாரணையன்று நீதிமன்றத்திற்குச் செல்லாததால் பிடிவிறாந்தை விடுவிக்கப்பட்டிருந்தது. பொலீஸ் நிமலைத் தேடி நான்கு முறை வீட்டுக்கு வந்தனர்.

மேலதிக நீதிபதி நிமலின் தாய் தந்தையரிடம் வாக்குமூலம் பெற்றனர். பொலீஸாரின் மேலாதிக்கம் இல்லாத இடத்தில் விசாரணை மேற்கொள்ளுமாறு அலிஸ் நோனா கேட்டுக் கொண்டார். குமாரி, சமரே, ஜகத் போன்றவர்கள் சாட்சியமளிக்கத் தயாராகவிருந்த போதும், நேரில் கண்டவர்களின் சாட்சியத்தை முன் வைக்க பொலீஸார் எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை. நீதியானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணை மேற் கொள்ளப்பட வேண்டுமென்பதே அலிஸ் நோனாவின் ஒரே வேண்டு கோளாகும்.

மரணம் வரை செல்லும் பொலீஸ் துன்புறுத்தல் தொடர்பான அறிக்கை கள் சர்வ சாதாரணமாகிவிட்டது. இலங்கைப் பொலீஸ் நிலையங்களில் அதிகரிக்கும் கொடுமைகளும், மரணச் செய்திகளும் பொலீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தில் வகை கூறல், பொறுப்புணர்ச்சியென்பன காணப்படவில்லையென்பதையே காட்டுகின்றது.

பொலீஸாரினால் மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல், மரண நிகழ்வுகளின் போது, அவற்றோடு தொடர்பான சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் கைது செய்யப்படுதோ, அவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதோ நடப்பதில்லை. கீழ்மட்ட அலுவலர்களாயின் அவர்கள் மீது விசாரணை நடைபெறும். கைது செய்யப்படுவார்கள்.

எந்தவொரு நிறுவனமாயினும் அதன் பயனுறுதியுள்ள செயற்பாட்டுக்கு அடிப்படை அம்சங்களும் பொறுப்புணர்வும் தேவை. பொலீஸ் நிலையங்களில் நடைபெறும் சகல செயற்பாடுகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் நிலையப் பொறுப்பதிகாரி, தலைமைப் பொலீஸ் பரிசோதகர், பிரதி பொலிஸ் அதிபர், பொலிஸ் மா அதிபர் போன்ற அனைவருமே பொறுப்புக் கூறுவதிலிருந்து விலகிச் செல்வதற்கான வாய்ப்புள்ளது. இத்தகைய வகை கூறும் பொறுப்பு அற்றுப் போகும் போது, பொலீஸ் செயற்பாடுகள் பலவீனமடைவது மாத்திரமன்றி, சட்டத்தை முன்னெடுத்துச் செல்வதும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. அந்த அதிபர் இன்னும் பாடசாலை செல்கிறார்

"ஆசிரியர்கள் உலகிலேயே உன்னதமான கலைஞர்கள். அவர்கள் வெறும் சலவைக் கற்களுடனல்ல, மனித ஆத்மாக்களோடு உறவாடுகின்றனர்"

இந்தக் கூற்றுடன் உடன்படுகிறீர்களா? எவ்வாறாயினும் பிள்ளைகளின் ஒழுக்கத்தைப் பாதுகாத்தலென்ற போர்வையில் அவர்கள் பிள்ளைகளைத் துன்புறுத்தும் போது அதற்கெதிராகக் குரல் கொடுப்போர் எத்தனை பேர்?

அரச பாடசாலைகளைப் போலவே தனியார் பாடசாலைகளிலும் நிலைமை நாளுக்கு நாள் மோசமான பக்கமாகத் திரும்பிக் கொண்டிருக்கிறது. அதிபரும் ஆசிரியர்களும் மாணவர்களுக்கு மாத்திரமன்றி, பெற்றாருக்கும் கூட, வக்கிரமான அதிகாரத்தை பிழையான முறையில் பயன்படுத்துகின்றனர். இதற்கெதிராக முறைப்பாடு செய்யும் பட்சத்தில் மேலும் துன்புறுத்தல், வெட்கமடையச் செய்தல், தண்டனை வழங்கல், பாடசாலை நடவடிக்கைகளை பலவீனப்படுத்தல் போன்றவை இடம் பெறலாமென்ற காரணத்தால் பெற்றாரும் பிள்ளைகளும் வாய் மூடியிருக்கின்றனர். இந்நடவடிக்கைகள் பிள்ளைகளின் எதிர்காலத்தில் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

தமது சட்டபூர்வ உரிமைக்காக குரல் கொடுத்த பதினைந்து வயது மாணவனதும் அவனது பெற்றாரதும் கதையை இனிப் பார்ப்போம்.

இடக்காலில் ஏற்பட்ட புண் காரணமாக லக்ஷான் செருப்புடன் பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைக்குச் சென்றான். காலில் உள்ள புண்ணை விஜேமான்ன ஸேருக்கு காட்டிய லக்ஷான் உடற்பயிற்சி வகுப்புக்கு செல்லாதிருக்க அனுமதி பெற்றுக் கொண்டான். பின்னர் தனது வகுப்பறைக்குச் சென்று கொண்டி ருந்தான். இதனைக் கண்ணுற்ற அதிபர் அவனை அழைத்து "எங்கே போகிறாய்?" என்று கேட்டார். தனது காலை விஜேமான்ன ஸேருக்குக் காட்டிவிட்டுத் தான் வகுப்பறைக்குச் செல்வதாகச் சொன்னான்.

வகுப்பாசிரியரிடம் தான் அனுமதி கேட்க வேண்டுமென்று சொன்ன அதிபர், மாணவனின் காதை மூடி அடி கொடுத்தார். காதில் ஏற்பட்ட வலி பொறுக்க முடியாமல் அவன் இரு கைகளாலும் காதுகளை மூடிக் கொண்ட போது, மேலும் கோபமுற்ற அதிபர், கன்னங்களுக்கு வேகமாக அறைந் தார். இதனைக் கவனித்த சில ஆசிரியர்கள், அப்பாவிச் சிறுவ னுக்கு அடிக்க வேண்டாமெனக் கேட்டுக் கொண்டபோது, இன்னுமொரு அடி கொடு த்து, மைதானத்திற்குப் போகுமாறு அம்மாணவனைத் தள்ளிவிட்டார்.

லக்ஷான் மைதானத்திற்குச் சென்றபோது அவனால் வலி பொறுக்க முடியவில்லை. அதனால் நண்பர்களோடு சொல்லி அவன் வகுப்ப றைக்கே சென்றான்.

லக்ஷானின் காதால் இரத்தம் வழியத் தொடங்கியது. அதைக் கண்ட நண்பர்கள் அது பற்றி ஆசிரியை ஒருவருக்குத் தெரிவித்தனர். அதிபர் தான் அறைந்தார் என்பது தெரிய வந்தபோது அவர் அவ்வளவாகக் கவனமெடுக்கவில்லை.

லக்ஷான் அழுது கொண்டிருப்பதைக் கண்ட வகுப்பாசிரியையும் தெரியாததுபோல் இருந்து விட்டார். லக்ஷானது நண்பர்கள் அவனை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முடிவெடுத்து, ஆசிரியர் ஒருவர் வரும் வரை பாடசாலை முற்றத்தில் ஒன்றரை மணி நேரத்திற்கு மேல் காத்திருந்தனர். அதன் பின்னர் அருகிலிருந்த லக்ஷானின் மாமாவின் வேலைத்தலத்திற்கு அவனை ஆட்டா வண்டியில் அழைத்துச் சென்றனர்.

இரத்தக் காயத்தைக் கண்ட மாமா உடனடியாகவே பொலீஸுக்குச் சென்று முறைப்பாடு செய்தார். பின்னர் பிள்ளை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். லக்ஷானை பரிசோதனைக்குள்ளாக்கிய மாவட்ட வைத்திய அதிகாரி, காயத்தின் பாரதூரம் கண்டு உடனடியாக எம்புலன்ஸ் மூலம் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்.

லக்ஷான் வைத்தியசாலையிலிருக்கும் போது, மாவட்ட கல்வி அதிகாரியென்று அறிமுகப்படுத்திக் கொண்டு வந்த இருவர் லக்ஷானிடம் வாக்கு மூலம் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் லக்ஷானின் காயத்தைப் பரீட்சித்த டாக்டர், விசேட சிகிச்சை வழங்க வேண்டுமென முடிவு செய்து நோயாளியை பெரிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார். அங்கு தொடர்ச்சியாக ஐந்து நாள் சிகிச்சையளிக்கப்பட்டது.

அதிபரைக் கைது செய்து, மோசடி வழக்குத் தாக்கல் செய்து, பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டதாக லக்ஷானின் அப்பா கூறினார். இருந்தும் அதிபர் தனது பதவியில் கடமையாற்றுகிறார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆசிரியர்களின் மூர்க்கத்தனத்திற்கு மாணவர்கள் உள்ளாகக் கூடாதென்பதற்கு எடுத்துக் காட்டக் கூடியதொரு நிகழ்வு இது. இலங்கையில் நிலவும் சட்டமுறைகளின் படி மாணவர் உரிமைகள் பாதுகாக்கப்படுவது எவ்வாறாயினும், ஆசிரியர்க ளின் கீழ்த்தர நடத்தைகளால் அந்த உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தெளிவானது.

இலங்கை நிர்வாகப் பிரமாணக் குறிப்பின் படி, மோசடிக் குற்றச்சாட்டு க்கு ஆளாகும் அரச ஊழியரொருவர், நீதிமன்றத் தீர்ப்பு வழங்கும் வரை இடைநிறுத்தம் செய்யப்பட வேண்டும். ஆனால், இந்நிகழ்வில் சம்பந்தப்படும் அதிபர் தனது கடமையில் ஈடுபட்டுள்ளார். அதன் மூலம் அவர் எந்தக் குற்றமும் செய்யவில்லையென்றே கருதப்பட இடமுண்டு. அது மீண்டும் லக்ஷானை மோசமாகத் தொல்லை கொடுப்பதற்கு அதிபருக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது போலாகும்.

அதிபருக்கு தான் செய்த தவறிலிருந்து விடுபட்டிருக்க வாய்ப்பளிக் கக் கூடாது. அவருக்கெதிராக சட்டபூர்வமாகவும் ஒழுக்காற்று ரீதியாக வும் நடவடிக்கையெடுக்க வேண்டும். அவருக்கெதிரான முறைப்பாடு ஒப்புவிக்கப்படும் பட்சத்தில் அவருக்குத் திணைக்களம் வழங்கும் தண்டனையை அவர் முகம் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. காதல் கதைகள்

உயரமும் பருமனுமான கிகான் கொழும்புக் கண்மையில் பெயர் பெற்ற பாடசாலையொன்றில் தரம் பத்தில் படிப்பவன். அவன் இரண்டு வாரங்களாகப் பாடசாலை செல்லவில்லை. பிறகு தனது அப்பாவுடன் பாடசாலைக்குச் சென்றபோது, வகுப்பாசிரியையான சமன்தி ரீச்சர், அம்மாவுடன் வந்து அதிபரைச் சந்திக்கும் வரை வகுப்புக்கு எடுக்க முடியாதென்று தெரிவித்தார்.

அன்றைய தினமே கிகானின் அம்மாவும் அப்பாவும் அவனோடு அதிப ரின் காரியாலயம் சென்றனர். அங்கு பிரதி அதிபரும் வகுப்பாசிரியையும் காணப்பட்டனர். கிகான் பாடசாலை மாணவியொருத்தியுடன் காதல் தொடர்பு வைத்திருப்பதாகவும் அவனது நடத்தை மோசமானதும் பொருத்தமற்றதுமாகும் என்று பிரதி அதிபர் தெரிவித்தார். கிகான் கையொப்பமிட்டுள்ள கடிதமொன்றையும் பிரதியதிபர் முன் வைத்தார். அக்கடிதத்தை தன்னை வற்புறுத்தி அவ்விதமாக எழுதிக் கையொப்பமிடச் செய்தவர் பிரதியதிபர் தானென்று கிகான் பெற்றோரிடம் கூறினான்.

கிகானைப் பாடசாலையிலிருந்து விலக்கிக் கொண்டு செல்லுமாறு பிரதியதிபரும் வகுப்பாசிரியையும் கடுமையாக வேண்டி நின்றனர். அவ்வாறு விலக்கிக் கொள்ளாவிட்டால், ஆசிரியர் குழு வேலை நிறுத்தம் செய்து பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்வதாக மென்மேலும் எச்சரிக்கை செய்தனர். இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பெண் பிள்ளையின் பெற்றோரும் விடயத்தை விளங்கப்படுத்திய பின் தமது பிள்ளையை விலக்கிக் கொண்டதாக ஆசிரியை தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்தோடு சம்பந்தப்பட்ட அதிபர் அது பற்றி எதுவும் பேசாமல் பாடசாலை விடுகைப் பத்திரத்தை எழுதினார். ஆனாலும் விலக்குவதற்கு எக்காரணமுமில்லையென்று கிகானின் அப்பா தர்க்கம் செய்தார்.

என்னதான் செய்வது? கிகான் இப்பொழுது வீட்டில்தானிருக்கிறான். அடுத்த வருடம் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இந்த நிகழ்வு மிகப் பயங்கரமான வகையில் அவனது பாடசாலை வாழ்வைப் பாதித்தது.

இப்படியான நிகழ்வுகள் எங்கள் பாடசாலைகளில் அதிகம். பிள்ளைகளைப் பண்பானவர்களாக கட்டுப்பாடானவர்களாக மாற்றிக் கொள்ள முடியாத போது அவர்கள் தம்மை அவமதிப்பதாகச் சில ஆசிரியர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்கள் இறுதியில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையிலான குழப்பமாக மாறுகின்றது. எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டென்பதை அவ்வாறான வேலைகளில் அதிபர்மார்களும் ஆசிரியர்களும் மறந்து விடுவதுண்டு. அந்த உரிமை சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் அரசியல் யாப்பால் உள் வாங்கப்பட்டதுமாகும். பிழையான பிரிவினரை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக, பிள்ளையைப் பாடசாலையிலிருந்து விடுவிக்குமாறு பெற்றோரைக் கோருவது உரிமையை மீறும் செயலாகும்.

**1991. 07. 21 தினத்தில் இலங்கை சிறுவர் உரிமைச் சமவாயத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. அதில் "பிள்ளைக்கு கல்வி பெறும் உரிமை அரச தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அது முழுமையாகவும், சமமாகவும் கிடைக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. "எழுத்தறிவின்மையை முற்று முழுதாக இல்லாமல் செய்து சகல மட்டங்களிலும் பரிபூரணமாகவும் சம அடிப்படையிலும் சகல பிரஜைகளுக்கும் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்துகிறது" என்று எமது அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. சிந்துவின் சோகப் பாடல்

வழமை போல் அன்றும் சிந்துவின் பாட்டனார் ரோனால்ட் சிந்துவை வீட்டுக்கழைத்து வர பாடசாலைக்குச் சென்றார். மற்ற நாட்களைப் போல் அன்று அவள் கேற்றடியில் நிற்கவில்லை. நேரத்தைப் பார்த்த ரோனால்ட், ஒரு வேளை நேரம் பிழையாக இருக்குமோவென்று கருதி வழியில் சென்ற ஒருவரிடமும் நேரத்தைக் கேட்டுச் சரிதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். ஏனைய நாட்களைப் போலவே அன்றும் உரிய நேரத்திற் குத்தான் வந்திருந்தார். சாதாரண தரப் பரீட்சையை முன்னிட்டு அன்றைய தினம் பாடசாலையின் பின்பு ரியூஷன் வகுப்புக்குச் செல்வதாக அவள் சொன்னது ஞாபகம். அன்று ரியூஷன் ஆசிரியர் வரவில்லையென்றும் சிந்து ஒரு வாலிபனோடு வீட்டுக்குச் சென்றதாகவும் ஒரு மாணவி மூலம் தெரிந்து கொள்ள முடிந்தது.

ரோனால்ட் சிந்துவின் ஒரேயொரு பொறுப்பாளர். சிறிய அழகிய பிள்ளையொன்று எடுத்து வளர்க்க ஆவலோடிருந்த தனக்கு பச்சைக் குழந்தையான சிந்துவை தன் பொறுப்பில் கையளித்த நாள் அவருக்கு இன்றும் ஞாபகம். அதே போன்று இன்றுவரை அவளுக்குத் தேவையா னவற்றை முடிந்தவகையில் வழங்கிய விதமும் அவள் போய் வரும் இடங்களுக்கெல்லாம் கூடவே சென்றதும் அவருக்கு ஞாபகம் வந்தது. அவள் பாடசாலை வேலைகளைச் சிறப்பாகச் செய்தாள். அவளது தாயை போன்றே அவளும் அழகானவள். கெட்டிக்காரியும் கூட.

வீட்டுக்கு வந்த ரொனால்டுக்கு, அந்த இளைஞன், சிந்து தன்னோடு தனது வீட்டுக்கு வந்துள்ளதாகத் தொலைபேசி மூலம் அறிவித்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியே கிடைத்தது. இருவரையும் சுதந்திரமாகவிருக்க இடமளிக்குமாறும், எங்கள் பின்னால் வந்து தொல்லை தரவேண்டாமென்றும் அந்த இளைஞன் மேலும் கூறியிருந்தான். அடுத்த ஊரில் வாழும் அவனது பெயர் பிரவீன் என்றும் குறிப்பிட்டிருந்தான். தகவல் கிட்டியதும் சிந்துவின் மாமா இன்னும் சிலரோடு பிரவீனை தேடி அடுத்த ஊருக்குச் சென்றுள்ளார். அவர்கள் பிரவீன் வீட்டுக்குச் செல்லும் போது இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். பிரவீனின் தகப்பன் முன்னே வந்து மகளை அழைத்துச் செல்ல இடமளிக்கப் போவதில்லையென்று தெரிவித்துள்ளார். பின்னர் மாமா பொலீஸுக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளார். பொலீஸார் அவ்வீட்டுக்கு வந்து பிரவீனையும் சிந்துவையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

பொலிஸ் முறைப்பாட்டுக்கமைய சிந்துவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பொலீஸார் நடவடிக்கை எடுத்ததோடு, விடயத்தை நன்நடத்தை அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு செல்ல முடிவானது. குழப்பத்துக்காளாகாமல் முயற்சியோடு கற்றல் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, அடுத்த நாள் முதல் பாடசாலைக்குப் போகுமாறு நீதிபதி சிந்துவை எச்சரித்தார்.

அடுத்தநாள் ரொனால்ட் தனது பேத்தியை பாடசாலைக்கு அழைத்துச் சென்றபோதும், அதிபர் அம்மாணவியைப் பொறுப்பேற்க மறுத்துவிட்டார். ரொனால்ட் அடுத்த கட்ட நடவடிக்கையாக இவ்விடயத்தை நன்னடத்தை அதிகாரிக்கு அறிவித்தார். அவர் பிரதிக் கல்விப் பணிப்பாளரோடு தொடர்பு கொண்டு சிந்துவை வேறொரு பாடசாலையில் சேர்க்கக் கூடியதாகக் கடிதமொன்று கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அதன் படி குறிக்கப்பட்ட பாடசாலைக்கு ரொனால்ட் பேத்தியுடன் சென்றார். தனிப்பட்ட பிரச்சினை காரணமாக முன்னைய பாடசாலையில் படிக்க முடியாத தால், அவளது கல்வியைத் தொல்லையில்லாமல் தொடர இப்பாடசாலையில் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டினார். அப்போது மாவட்டக் கல்விப் பணிப்பாளரைச் சென்று சந்திக்குமாறும் தானும் அங்கு வருவதாகவும் அப்பாடசாலை அதிபர் கூறினார். குறிப்பிட்ட தினத்தில் ரொனால்ட் கல்விக் கந்தோருக்குச் சென்றார். ஆனால் அதிபர் அங்கே வருகை தந்திருக்கவில்லை. ரொனால்ட் மீண்டும் முன்னைய பாடசாலைக்கே சென்று, பிள்ளை இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற இருப்பதால், பாடசாலையில் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டினார். எந்தத் தராதரத்திலுள்ளவர்கள் வேண்டிக் கொண்ட போதும் சிந்துவை மீண்டும் பாடசாலையில் சேர்த்துக் கொள்வதிலை யென்பதே அதிபரின் நிலைப்பாடாகவிருந்தது. பிள்ளை புத்திசாலி என்பதாலும் பாடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் புள்ளி பெறுவதாலும் ரியூஷன் வகுப்பிற்கு அனுப்புமாறு அதிபர் ஆலோசனை வேறு தெரிவித்தார்.

நடந்த விடயங்களையும் அது தொடர்பாக அதிபரின் கருத்தையும் பார்க்கும் போது சிந்துவின் கல்வி சிதறிப் போய் விடுமென றொனால்ட் கவலைப்பட்டார். சிந்து புத்திசாலிப் பெண் என்பதால் அவ்வாறு நடக்கும் போது அவள் வெட்கத்துக்குள்ளாகுவாள். தான் துணையற்ற வயதாளியென்பதால் தான் அதிபர் அவ்வாறு கதைத்திருக்கக் கூடுமென றொனால்ட் நினைத்தான். குறைந்த பட்சம் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையும் வரையிலாவது அங்கு படிக்க ஒழுங்கு செய்து தருமாறு வேண்டினார்.

பாடசாலைகளை நிர்வாகம் செய்யும் அதிபர்களின் அகங்காரத்தை வெளிப்படுத்துகிறது சிந்துவின் கதை. பாடசாலையைத் தங்கள் சொந்தச் சொத்தாக அவர்கள் நினைத்திருக்கின்றனர். நீதிபதியின் ஆலோசனை, மாவட்ட கல்விப் பணிப்பாளரின் வேண்டுகோள் இப்படி எல்லாவற்றையும் இரு பாடசாலை அதிபர்களும் தூக்கியெறிந்து விட்டார்கள். இரண்டு மாதங்களாக சிந்துவின் கல்வி பெறும் உரிமை அற்றுப் போய்விட்டது. கல்வித் திணைக்களத்தின் ஆலோசனையைப் புறக்கணித்தமைக்காக, இரண்டு அதிபர்களும் ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அதிபர்களும் ஆசிரியர்களும் திணைக்களத் தின் கட்டளைகளை அலட்சியம் செய்து வருவது இதன் மூலம் தெளிவா கிறது. கல்வி நிர்வாக நடவடிக்கைகளில் காணப்படும் பலவீனமும் பின்னூட்டல் சரியாக மேற் கொள்ளப்படாமையும் காரணமாகப் பாதிப்புக்குளாக நேர்வது சிந்து போன்ற அப்பாவிகள் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. புத்தரின் ஒளியும் பொலிஸின் ஒளியும்

2006.08.02ம் திகதி இலங்கையின் பல பிரதேசங்களில் புத்தர் சிலைகளிலிருந்து ஒளி பரவுவதாக ஒரு செய்தி பரவியது. ஊர் பௌத்த விகாரையிலிருந்தும் இவ்வாறு ஒளிபரவும் செய்தியைக் கேள்வியுற்ற பதினைந்து வயதான தமிந்த காலையிலேயே சைக்கிளில் சென்றான். எதிர்ப்பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்த சைக்கிளில் தமிந்தவின் சைக்கிள் முட்டியது. அந்த சைக்கிளில் வந்தவர் உதவிப் பொலிஸ் பரிட்சகர் பியரத்ன ஆவார்.

தமிந்த சைக்கிளால் கீழே விழுந்தான். பியரத்ன அவனுக்குக் கையாலும் காலாலும் உதைந்து சத்தமிட்டுத் திட்டினான். தன்னுடைய சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வீட்டுக்குச் செல்லுமாறு பணித்துவிட்டு, தமிந்தவின் சைக்கிளில் ஏறி பியரத்ன தனது வீட்டுக்குச் சென்றான். வழி நெடுகிலும் தூசணம் பாடிக் கொண்டு வந்த பியரத்ன, ஊர்ச் சந்தியில் வைத்து மீண்டும் தமிந்தவுக்கு அடித்தான். தனது வீட்டில் வைத்து, அவனது பெயர், ஊர், முதலான விபரங்களைப் பதிந்து கொண்டு, தனது சைக்கிளைத் திருத்தித் தரும் வரையில் தமிந்தவுக்கு சைக்கிளைத் தருவதில்லையென்று வீட்டிலிருந்து விரட்டி விட்டான்.

நடுங்கியபடி வீட்டுக்கு வந்த தமிந்தவுக்கு காய்ச்சலெடுத்தது. பல தடவை வாந்தியெடுத்தான். அவனது தலையிலும் மறைவான பகுதியிலும் காயம் காணப்பட்டது.

அடுத்தநாள் பியரத்னவின் வீட்டுக்குச் சென்ற தமிந்தவின் பெற்றோர், அவ்வாறு மோசமாகத் தாக்கியது ஏனென்று கேட்டனர். அப்போது அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் சத்தமிட்டுத் தூசண வார்த்தைப் பிரயோகித்தார். தமின்தவின் பெற்றோர் பொலிஸ் சென்று முறைப்பாடு செய்யத் தீர்மானித்தனர். முறைப்பாட்டைப் பதிவு செய்யும் போது, அருகே நின்ற பியரத்ன இடையிடையே குழப்பிக் கொண்டிருந்தார். இறுதியில் முறைப்பாட்டில் என்ன இடம்பெற்றுள்ளதென்பதைச் சொல்லாமலேயே பெற்றாரின் கையொப்பம் பெறப்பட்டது. பொலிஸாரிடம் பெற்றுக் கொண்ட கடிதத்துடன் தமின்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். சட்ட வைத்திய அதிகாரி நிகழ்ச்சி சம்பந்தமான விபரங்களைப் பெற்றுக் கொண்டு தமின்தவைப் பரிசோதித்தார். தலையிலும் மறைவான பகுதியிலும் காயமேற்பட்டுள்ளதாக அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தமின்தவின் பெற்றோர் பொலீஸில் செய்த முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நீதவான் நீதிமன்றத்தில் உதவிப் பொலிஸ் பரீட்சகர் பியரத்னவுக்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதற்குப் பழி தீர்க்குமுகமாக, பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சோடித்து தமின்தவுக்கும் அவனது குடும்பத்தவர்களுக்கெதிராக இரண்டு வழக்குகளை முன் வைத்தார். 64994 ம் இலக்க வழக்கில் தமின்த, தந்தை, தாய் ஆகியோர் தனது வீட்டுக்கு வந்து பலமான அச்சுறுத்தல் விடுத்ததாகப் பதியப்பட்டிருந்தது. அவ்வழக்கு தொடர்பான அறிக்கையில் இருசாராரையும் சமாதான சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. சமாதான சபையின் தலைவரால் அனுப்பபட்ட அறிக்கையில் இரு சாராரும் சமாதானப்பட விரும்பவில்லையென்றே தெரிவிக்கப்பட்டிருந்தது.

அது முற்றுமுழுதாகப் பொய்யென தமின்தவின் தாய் சொல்கிறார். சமாதான சபைக்கு வருமாறு எந்த அறிவித்தலும் அவர்களுக்கு விடுக்கப்படவில்லையாம். இரு சாராரும் சமாதானத்திற்கிணங்காமல் அதனை நிராகரித்தார்களென சபைத் தலைவர் அறிக்கையிட்டிருப்பது பாரதூரமான பிரச்சினையாகும். நீதிமன்றச் செயற்பாட்டைப் பிழையான வழியில் செலுத்தவே இவ்வாறு சொல்லப்பட்டுள்ளதென தமின்தவின் தாய் சொன்னார். கவனமற்ற முறையில் சைக்கிளைச் செலுத்துதல், மணியொலியும் வெளிச்சமும் இல்லாமை என்பன 65923ம் இலக்க வழக்கில் தமின்தவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களாகும்.

இவ்விரு வழக்குகளையும் தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் மற்றும் ஏனைய அதிகாரிகள் அறிந்த நிலையில், தனது மகனைப் பழி வாங்குவதற்கும், தொல்லை கொடுப்பதற்கும் நோக்கமாகக் கொண்டே ஏற்பாடு செய்துள்ளதாக தமின்தவின் தாய் மேலும் தெரிவித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிப் பொலிஸ் பரிசோதகருக்கெதிரான வழக்கை விசாரிக்கும் போதே, ஏனைய இரு வழக்குகளையும் குறிப்பிட்டு மூன்று வழக்கையும் சமாதானத்திற்குக் கொண்டு வந்தனர். பொலீஸ் மற்றும் நீதிமன்ற நடைமுறைகளை நன்கறிந்த உதவிப் பொலீஸ் பரிசோதர் அவற்றைப் பிழையான முறையில் தனக்குச் சாதகமாகப் பாவித்துக் கொண்டார்.

**பொலிஸ் உத்தியோக பூர்வ உறுதியுரையில் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதும் இலங்கைப் பொலீஸார் மக்களின் உரிமைகளை மீறுவதையே செய்கின்றனர். அதிகமான பொலீஸ் முறைகேடுகளின் போது அவரவர்களின் தப்புதலுக்காக, முறைப்பாடுகளைப் பதிவு செய்யாமல் நிராகரித்தல், முறைப் பாட்டை அரைகுறையாகப் பதிதல், பாதிக்கப்பட்டவர்களைப் பயமுட்டல் போன்ற நடவடிக்கைகளால் சுற்றவாளிகள் பக்கம் உண்மை நிலை நாட்டப்படுவதைத் தடுக்க வழி பண்ணுகின்றனர்.**

**சமூகத்திலே வசதி வாய்ப்பற்ற அப்பாவிகளான சுற்றவாளிக ளுக்கு உண்மை கிட்டுவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. இப்படியும் ஒரு பாடசாலை

பாடசாலைத் தவணையின் இறுதி நாள் அன்று. விடுமுறையை எதிர்நோக்குவதால் பாடசாலையில் குழப்படியான சூழ்நிலை காணப் பட்டது. ஏனைய நாட்களைப் போல் நேரசூசிப்படி வேலை நடைபெற வில்லை. அது ஒரு விளையாட்டுத்தனமான நாள்தான். மாணவர்கள் குழுக் குழுவாகச் சேர்ந்து கதைத்தபடி, கடைசி மணியொலியை எதிர்த்த படி சுற்றிச் சுற்றி வந்தனர். எவ்வாறாயினும் அன்றைய நாள் பதினைந்து வயதான துடிப்பான மாணவனொருவனுக்கு துரதிர்ஷ்டவசமான நாளா கியது.

குப்பைக் கூடையின் மூடி ஆசிரியரின் மேசையருகே இருப்பதைக் கண்ட நஸீம், விளையாட்டு வாக்கில் அதற்குக் காலால் உதைத்தான். அதே நொடியில் வகுப்பில் நின்ற நஸ்ரினா அம்மூடியைக் குனிந்து எடுக்க முனைந்தாள். அப்போது மூடி அவளது கையில்பட்டது. வெட்கத்திற்கா ளான நஸ்ரினா, தனக்கு நஸீம் காலால் உதைத்ததாக அதிபரிடம் முறை யிட்டாள். நஸீமை அழைத்த அதிபர் மீண்டும் பாடசாலை தொடங்கும் நாளில் காரியாலயத்திற்கு வருகை தருமாறு கட்டளையிட்டார்.

அதிபர் சொன்னபடி நஸீம் காரியாலயத்திற்குச் சென்றான். நஸ்ரினா வையும் அழைத்து வருமாறு அதிபர் நஸீமிடம் சொன்னார். இடையில் பிரதி அதிபர் பாரூக் நஸீமை அழைத்தார். அதிபர் அறைக்கு அருகி லேயே அவரது காரியாலயம் காணப்பட்டது. அவனது பெயரை விசாரி த்து உறுதிப்படுத்திக் கொண்ட பிரதி அதிபர் பாரூக், அவனது வலக் காதைப் பிடித்திழுத்து கழுத்துக்கொரு அடி கொடுத்துத் தாக்குதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தார். சிறிய பெரிய அடி உதைகள் தொடர்ச்சியாக நடாத்திய பிரதியதிபர் உயர்ந்ததொனியில் திட்டித் தீர்த்தார். ஆசிரியர் சேவைக்கு வருமுன் பாரூக் பொலீஸில் வேலை செய்ததையும், அவர் நஸ்ரினாவின் உறவினரென்பதையும் பாடசாலையில் பலரும் அறிவர். நஸீமை முட்டுக்காலில் நிற்குமாறு கோரி, மீண்டும் பின்கழுத்துக்கடித்து, காதுகளிரண்டையும் கசக்கினார். மூன்று பாடவேளை தொடர்ச்சியாக முட்டுக்காலில் நின்ற நஸீமுக்கு முகம், தலை, முதுகென்று அவ்வப்போது அடிகள் விழுந்தன. அதிபர் இதனைக் கண்டபோதும் அமைதியாக இருந்துவிட்டார். அபுஸாலி ஆசிரியரும் கண்களைத் திருப்பிக் கொண்டார்.

மூன்றாவது பாடவேளையின் போது அலுவலகத்திலிருந்து வெளியே வந்த அதிபருக்கு, தொடர்ந்தும் நஸீமுக்கு அடிவிழுவது தெரிந்தது. அடிப்பதை நிறுத்துமாறு வேண்டி அதிபர் முன்னிலையிலும் நஸீமைத் தாக்கிய பாரூக், அதிபரோடு கதைக்க வேண்டுமென்று வெளியே சென்றார். மீண்டும் தனது அலுவலகத்திற்கு வந்த பிரதி அதிபர் பாரூக், பையனின் காதுகளை இருகைகளாலும் நெரித்து "நஸ்ரினாவுக்கு என்ன செய்தாய்?" என்று கேள்வி கேட்டார். அடிதடிகளால் அவஸ்தைக்குள்ளாகி யிருந்த அவனால் கதைக்கக் கூட முடியவில்லை. பாரூக் மீண்டும் அவனது கன்னங்களுக்கு அறையத் தொடங்கினார். அப்போது அங்கே வந்த அதிபர் பாரூக்கை அப்புறமாகுமாறு கூறி, சிறுவனை எழச் சொன்னார்.

சிறுவன் மிகுந்த சோர்வுடன் எழுந்திருக்கையில், அங்கு வந்திருந்த இன்னொரு ஆசிரியரும் அவனது காதைத் திரகிக் கன்னத்திலும் கொடுக் கத் தவறவில்லை. மீண்டும் வந்த பாரூக் ஸேர், நஸீமை அதிபரிடம் போகுமாறு உத்தரவிட்டார். அப்போது அதிபர், நஸ்ரினாவுக்கு காலால் உதைத்தபடி கடிதம் எழுதி, வகுப்பாசிரியையிடமும் கையெழுத்து வேண்டி வருமாறு கூறினார். கதைப்பதற்கும் கஷ்டமான நிலையில் அதிபர் கூறிய பிரகாரம் கடிதம் எழுதிக் கொண்டு வகுப்பாசிரியை பாதிமா டீச்சரிடம் சென்றான். அவனது வீங்கிப் போயிருந்த முகத்தைக் கண் ணுற்று பாத்திமா பயந்து போனார். முதலில் விரும்பாவிட்டாலும் கூட பின்னர் கடிதத்தில் கையொப்பமிட்டு அதிபரிடம் அனுப்பினார்.

மீண்டும் வகுப்புக்கு வந்த நஸீமுக்கு மயக்கம் வருவது போல் தெரிந்தது. வீட்டுக்குச் செல்ல அதிபருக்குக் கடிதம் தருமாறு அவன் வகுப்புத் தலைவரை வேண்டினான். வீடு சென்று இவற்றைச் சொன்னால் பிரச்சினை அதிமாகுமென்று, அவனை முதற் சிகிச்சை அறைக்கு அனுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினார். ஆசிரியர் ஒருவர் நஸீர் கழுத்திற்கு பாம் தேய்த்து, காயங்களுக்கு மருந்திட்டார்.

இருந்தும் அவனால் பாடசாலையிருக்க முடியவில்லை. தலை, உடலெல்லாம் வேதனையால் வெதும்பியது. காதுகளும் கழுத்தும் நிலை கொள்ளவில்லை. மயக்க சுபாவமும் ஆரம்பித்தது. மீண்டும் அதிபரிடம் சென்று தன்னை வீட்டுக்கனுப்புமாறு வேண்டினான். அப்பொழுது அவனுக் கொரு கதிரை கொடுத்து பாடசாலை விடும் வரை அமர்ந்திருக்குமாறு அதிபர் வேண்டினார். சோர்வு மிகுதியால் தூங்கிப் போன சிறுவனை பாடசாலை விடும் போது அதிபர் தட்டியெழுப்பினார். நஸீம் வீடு சென்ற போது பெற்றார் அவனைப் பார்த்துப் பயந்து போனார்கள். அவனது தாய் வாய்விட்டு அழத் தொடங்கினாள். பின்னர் நஸீமின் தகப்பன் வந்தார். விஷயத்தை விளங்கிக் கொண்ட அவர் உடனடியாகவே அதிபரைச் சந்திக்கச் சென்றார். விழுந்ததனால் பிள்ளைக்கு காயமேற்பட்டதாகவும், டாக்டர் ஒருவருக்குக் காண்பிப்பது நல்லதென்றும், விடயத்தைப் பெரிதுபடுத்துவது நல்லதல்லவென்றும் அதிபர் தெரிவித்தார்.

இருந்தும் நஸீமின் தகப்பனால் நடந்திருக்கும் அநியாயத்தைப் பொறுக்க முடியவில்லை. அவர் உடனடியாக பொலீஸுக்குச் சென்று முறைப்பாடு செய்துவிட்டு மகனை வைத்தியசாலையில் அனுமதித்தார். ஆழமான காயங்களென்பதால் பிள்ளையை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றியதோடு அங்கு நான்கு நாட்கள் தங்கிச் சிகிச்சை பெறவேண்டி நேர்ந்தது.

**துன்புறுத்தலிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டு மென்று எவ்வளவுதான் சட்டதிட்டங்களிலிருந்த போதிலும், உடல் ரீதியான தண்ட னைகள் இன்னும் நிலவுகிறதென்பதற்கு இந்த பயம் மிகுந்த சம்பவம் நல்ல எடுத்துக்காட்டு. 2005 கல்வி அமைச்சின் சுற்று நிருபம், அரசியல் யாப்பு, சிறுவர் உரிமைச் சாசனம், தண்டனைச் சட்டக் கோவை என்பவை சிறுவர் துஷ்பிரயோகம் நடப்பதை தடுக்கின்றன. அவ்வாறு நிகழுமாயின் அதற்கான தண்டனை விபரமும் அவற்றில் காணப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. ஆசிரியப் போர்வையின் செல்வாக்கு

க.பொ.த. உயர்தரக் கல்விக்காக லகிரு ஊரிலுள்ள பிரிவேனாவில் சேர்ந்தான். மிகவும் உற்சாகத்தோடு படித்த அவன் அதிக காலம் செல்வதற்கிடையில் மாணவர், ஆசிரியர் மத்தியில் பிரபலமான நபராக மாறினான். முதலாம் வருடத்திலேயே அவன் மாணவர் தலைவனாகவும் தெரிவு செய்யப்பட்டான்.

வகுப்பு வாரியாகச் சென்று அவ்வாண்டுச் சுற்றுலாவில் கலந்து கொள்ள விருப்பமான மாணவர்களின் பெயர்ப் பட்டியலைத் தயாரிக்கும் பொறுப்பு அவனுக்கே கிட்டியது. அனுமதி பெற்றுக் கொண்டு அரவிந்த ஸேரின் வகுப்புக்குள் நுழைந்த லகிருவுக்கு அவர் ஏனோ அடிக்கத் தொடங்கினார். அவனது கழுத்துக்குப் பொறுப்பான அடியொன்று விழுந் தது. அதிர்ச்சிக்கும் வெட்கத்துக்கும் ஆளான லகிரு தனக்கு அடித்தது ஏனென்று அரவித்த ஸேரிடம் கேட்டான். அப்பொழுது மீண்டும் அடித்த தோடு நில்லாமல் கெட்ட வார்த்தைகளும் பேசினார். அவன் வகுப்புக்குள் புகும் போது ஆசிரியரோடு அவ்வகுப்பு மாணவர் ஒருவர் பேசிக் கொண்டி ருந்தான். "என்ன காரணத்திற்காக எனக்கடித்தீர்கள்?" என்று லகிரு மீண்டும் ஒருமுறை ஆசிரியரிடம் கேட்டான்.

அவனது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவன் நேரே பிரிவேனா அதிபதியான சுவாமி அவர்களிடம் சென்றான். விடயத்தை விபரித்து தனக்கு வீட்டுக்குப் போக வேண்டுமென்று கேட்டபோதும், சுவாமி அதற்கு அனுமதி வழங்கவில்லை. உடனே மீண்டும் அரவிந்த ஸேரிடம் சென்ற லகிரு, இவ்விடயம் சம்பந்தமாகக் கதைப்பதற்கு அப்பாவை அழைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வருவதாகத் தெரிவித்தான். "உனது பெண்டாட்டியோடு வந்தாலும் பரவாயில்லை. நான் பயப்படப் போவதில்லை. எனக்கு சட்டம் தெரியும்" என்றார். லகிரு வீட்டுக்குச் சென்று நடந்த கதையைப் பெற்றாரிடம் தெரிவித்தான். அவனது கழுத்து தகர்ந்து காயம் பட்டிருந்தது. மாலையாகும் போது வாந்தியெடுத்தான். அவனது உடல்நிலை பாதகமாக மாறியது.

கோபமடைந்த லகிருவின் தகப்பன் பொலீஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்துவிட்டு மகனை வைத்தியசாலையில் சேர்த்தார். அன்று இரவு லகிருவை எஸ்க்ரே அறைக்கு கொண்டு செல்கையில், அரவிந்த ஸேரைச் சூழ இன்னும் பல ஆசரியர்களும் அங்கு காணப்பட்டனர். ஓர் ஆசிரியர் வந்து என்ன பிரச்சினையென்று கேட்டதோடு, இன்னொரு ஆசிரியர் எக்ஸ்ரே அறைக்கு வந்தார். அடுத்தநாளும் பிரிவெனா ஆசிரியர் இருவர் வைத்தியசாலைக்கு வந்தனர். அவர்கள் அன்றிரவு வீட்டுக்கு வந்து தலையை எக்ஸ்ரே பிடிப்பது நல்லதல்லவென்று தெரிவித்தனர். வைத்தியசாலையிலிருந்து வந்த அடுத்தநாள் ஓர் ஆசிரியரும் அவரது மனைவியும் லகிருவைப் பார்க்க வீட்டுக்கு வந்தனர்.

பொலீஸ் முறைப்பாடு விசாரிக்கப்பட்டது. அரவிந்த ஸேர் பிரிவெனாதிபதியோடு வந்திருந்தார். இருசாராரும் சமாதானமாகிக் கொண்டனர். அடுத்த நாள் லகிரு பாடசாலை சென்றான். தனது அலுவலகத்திற்கு லகிருவை அழைத்த பிரிவெனாதிபதி, முன்னைய பாடசாலைகளிலிருந்து பெற்ற பாடசாலை விடுகைப் பத்திரத்தைக் காணவில்லை என்றார். சகல ஆவணங்களையும் உறுதியாகவே கையளித்தமை அவனுக்கு நன்றாக ஞாபகமிருந்தது. தன்னிடம் அவை பொறுப்பளிக்கப்பட வில்லையென்று சொன்ன சுவாமி, முன்னைய பாடசாலைக்குச் சென்று அவற்றைப் பெற்றுவருமாறு கூறினார். இரு பாடசாலைகளுக்கும் லகிரு சென்றான். அங்கிருந்து விலகும் போது அவை கையளிக்கப்பட்டதாக அதிபர்மார் தெரிவித்தனர். காரியாலயத்தில் எலித் தொல்லை காணப்படுவதால் அவை அந்த ஆவணங்களை அழித்திருக்கலாம் என்று சுவாமியார் கூறினார். மீண்டும் பாசாலைக்கு வந்து அதுபற்றி ஞாபகமூட்டுமாறும் வேண்டினார்.

அடுத்தநாள் காரியாலயம் செல்லும் போது, அரவிந்த ஸேரும் அங்கேயிருந்தார். அத்தாட்சிப் பத்திரம் கிடைத்ததா என்று அவர் கிண்டலாகக் கேட்டார். அதற்கிடையில் லகிருவின் முன்னேற்ற அறிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்றைத் தயாரிக்குமாறு இன்னொரு ஆசிரியருக்கு சுவாமி சொன்னார். அதனைப் பரீட்சித்துப் பார்த்த பிரிவென அதிபர், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகுதியில்லையென்று தெரிவித்தார். அறிக்கையை லகிருவிடம் கொடுத்த சுவாமி மீண்டும் பிரிவெனாவுக்கு வரவேண்டாமென்று உத்தரவிட்டார்.

தான் அரவிந்த ஸேரைப் பற்றி முறைப்பாடு செய்ததால் அதற்குப் பழி தீர்க்குமாகச் செய்த சதியே இது என்பது லகிருவிற்கு விளங்கியது. ஆசிரியருக்குப் பக்கச்சார்பாகச் செயற்பட்டு, தன்னைப் பிரிவெனாவிலிருந்து வெளியேற்ற பிரிவெனா அதிபதியான சுவாமி அவர்கள் காரணம் தேடிக் கொண்டிருந்தார். காணாமல் போன விடுகைப் பத்திரத்திற்கும் அரவிந்த ஸேருக்கும் ஏதோவொரு தொடர்புண்டு. சுவாமியைத் தவிர்த்தால் அலுவலக அலுமாரிகளைத் திறக்கும் அனுமதி அரவிந்த ஸேருக்கு மட்டுமே உண்டு. தனக்குத் தகுதியில்லையென்று சொல்வது தனக்குச் செய்யும் பெரும் அநியாயமென்று லகிரு சொல்கிறான். மீண்டும் அறிக்கையைக் காட்டி இன்னொரு முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டை விசாரித்த பொலீஸ் பொறுப்பதிகாரி, முறையான விடுகைப் பத்திரமொன்றை வழங்குமாறு பிரிவெனாதிபதியிடம் வேண்டிக் கொண்டார். விசாரணையின் முடிவில், முன்பு கொடுத்த முன்னேற்ற அறிக்கையைத் தருமாறு சுவாமியார் லகிருவைக் கேட்டுக் கொண்டதோடு, முன்னைய இரு பாடசாலைகளாலும் வழங்கிய விடுகைப் பத்திரம் காணாமல் போயுள்ளதாக சத்தியக் கடதாசியொன்றெழுதி கையொப்பமிட்டுத் தருமாறு கேட்டுக் கொண்டார்.

குறித்த தினத்தில் பொலீஸுக்குச் சென்ற போது, விடுகைப் பத்திரம் அங்கே அனுப்பப்பட்டிருக்கவில்லை. லகிரு மூன்றாம் முறையாகப் பொலிஸ் பொறுப்பதிகாரியைச் சந்திக்கச் சென்ற போது, பிரிவெனாதிபதியைத் தன்னை வந்து காணுமாறு கோரும் கடிதமொன்றை அவரிடம் கொடுக்குமாறு லகிருவிடம் கையளித்தார். ஆனால் சுவாமியார் பிரிவெனாவில் இல்லாததால் அதனை லகிருவால் கையளிக்க வாய்க்கவில்லை.

**லகிரு அடுத்த வருடம் உயர்தரப் பரீட்சைக்கு அமரவேண்டும். இந்த நிகழ்வு அவனது கல்விக்குப் பாதகமாக அமைந்ததோடு, கல்வியை பெறுவதற்கான உரிமையை மீறுவதுமாகும். இந்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வினூடாக தொழில்சார் நண்பர்களும் அதிகாரிகளும் தவறு செய்பவர்களை பாதுகாப்பதையே காணலாம். அதிகமான பாடசாலைகளில் இத்தகைய நிலைமை காணப்படுகிறது. ஆசிரியர் ஒருவர் பிழை செய்யும் போது ஏனைய ஆசிரியர் மட்டுமன்றி அதிபரும் அவர் பக்கம் சார்கின்றார். எல்லோரும் சேர்ந்து பாதிக்கப்பட்டவனை நிர்ப்பந்தத்திற்கும் அச்சுறுத்த லுக்கும் உள்ளாக்குகின்றனர். பெரும்பாலும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் சட்டவிரோத சமூகவிரோத நடவடிக்கைகளுக்குள்ளாகி பின்னடைய நேர்கிறது. எவ்வாறாயினும் உரிமைக்காகவும் உண்மைக்காகவும் போராடிய சந்தர்ப்பங்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. கண்களைக் குருடாக்கிய டாக்டர்

துமிந்த தேங்காய் பறிப்பவன். அவன் உயரமான மரங்களில் தேங்காய் பறிக்க இருபத்தைந்து ரூபாவும், கட்டையான மரங்களுக்கு இருபது ரூபாவும் எடுப்பான். உயர்ந்த மரங்களுக்கு ஏறுவோர் மிகமிகக் குறைவு. பயமின்றியும் வேகமாகவும் துமிந்தவால் ஏறமுடியும் காய் முற்றியதா இல்லையா என்பதை விரல்களால் தட்டுதவதன் மூலம் அவன் அறிந்து கொள்வான்.

1998ல் நடைபெற்றதொரு துரதிர்ஷ்டமான சம்பவத்தின் காரணமாக துமிந்தவின் கண் தெரியாமல் போய்விட்டது. கண்ணிலேற்பட்ட வலியும் அலர்சியும் பொறுக்க முடியாமல் அவன் சிகிச்சை பெறுவதற்காக கிராமத்து தனியார் டிஸ்பென்ஸரிக்குச் சென்றான். மெல்சிரிபுரயில் அமைந்திருந்த தனது மருத்துமனையில் நின்ற அரசாங்க வைத்தியர், துமிந்தவின் கண்களைப் பரிசோதித்துவிட்டு பாமஸியில் வேண்டுமாறு மருந்தெழுதிக் கொடுத்தார். மருந்தை வாங்கிக் கொண்டு மீண்டும் டிஸ்பென்ஸரிக்குச் சென்ற போது இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை கண்களில் மருந்துத் துளிவிடுமாறு அந்த டாக்டர் தெரிவித்தார்.

அடுத்த நாள் காலையில் எழுந்த துமிந்தவுக்கு கண்கள் தெரிய வில்லை. அவனது கண்கள் மஞ்சள் வலையால் மூடப்பட்டிருப்பது போல் அவன் உணர்ந்தான். சுடுநீரினால் கண்களைக் கழுவிய போதும் மாற்றம் தெரியவில்லை. வீட்டார் அவனை குருநாகல் பெரியாஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர். கண்களைப் பரிசோதித்த டாக்டர் ஆபத்தான நிலையேற்படும் வரையில் ஏன் தாமதத்தீர்கள் என்று கேட்டார். கண்ணுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்ட மருந்ததைப் பார்த்து விட்டு அதனைக் குப்பைக் கூடைக்குள் போட்டார். துமின்த ஏழுநாட்கள் அங்கிருந்தான். நோய் நல்ல நிலைக்கு மாறாததோடு கண்களிலும் தலையிலும் பொறுக்க முடியாத வலியும் ஏற்பட்டிருந்தது, இப்பொழுது அவன் முற்று முழுதாகவே ஒரு குருடன்.

சரியான சிகிச்சை வழங்கப்படவில்லையென்று கருதிய வீட்டார் அவனை அங்கிருந்து கண்டிப் பெரியாஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர். இரு கண்களையும் பரிசோதித்த டாக்டர், கண்களைப் பாது காக்க இனி எதுவுமில்லை என்றார். பின்னர் இடது கண்ணுக்கு இணைப் புச் சிகிச்சை நான்கு முறை மேற் கொண்டும் வெற்றியளிக்கவில்லை. வீட்டுக்குப் போய் சிலநாட் கழிந்து மீண்டும் வருமாறு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டதேனெனில் வலது கண் தொடர்பானதொரு சிகிச்சை மேற்கொள்வதற்காகும். அந்த முயற்சியும் முற்று முழுதாகவே தோல் வியைத் தழுவியது. மெல்லிய நிழற் தோற்றமே தெரிந்தது. அருகே இருக்கும் பொருளின் மங்கிய உருவத்தைக் காண முடிந்தது. இந்த நிலையில் இதைத்தான் எங்களால் செய்ய முடிந்ததென வைத்தியர்கள் கூறினர்.

துமின்த அதிருப்தியான நிலையில் வீட்டுக்கு வந்தான். முப்பதாம் வயதில் அவன் இந்நிலைக்குத் தள்ளப்பட்டான். வைத்திய சிகிச்சைக் கான செலவை அயலவர்களும் ஊரவர்களும் உவந்தளித்தனர். இந்நிகழ்வால் கோபமடைந்த கிராமத்தவர்கள் பிழையான மருந்து கொடுத்த டாக்டரைப் பற்றிப் பொலீஸில் முறைப்பாடு செய்யுமாறு தூண்டினர்.

கொகரல்ல பொலீஸில் முறைப்பாடு பதிவாகியது. விசாரணைத் தினம் அறிவிக்கப்பட்டது. பல தடவை விசாரணைத் தினம் அறிவிக்கப்பட்டும் டாக்டர் வரவில்லை. கடைசித் தினம் வந்த டாக்டர், தன்னால் கொடுக் கப்பட்ட மருந்து விஷமாவதற்கு எந்தக் காரணமுமில்லை யென்றும் முடிந்தால் அதனை ஒப்புவிக்குமாறும் கேட்டுக் கொண்டார். டிஸ்பென்ஸரிக்கு வந்தால் உதவியாக பத்தாயிரம் ரூபா தரமுடியு மென்றும் டாக்டர் மேலும் தெரிவித்தார்.

டாக்டர் வெளியேறிச் சென்றபின் துமின்தவை நெருங்கிய ஸார்ஜன் பெரேரா, பத்தாயிரம் ரூபா பெற வேண்டாமென்றும் டாக்டருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறும் கேட்டுக் கொண்டார். "அப்போது பத்தாயிரத்துக்கு மேல் எடுக்கலாம் தம்பி" என்றவாறு ஸார்ஜன் பெரேரா துமின்தவின் முதுகில் தட்டினார். பின்னர் வைத்திய சிகிச்சை சம்பந்தமான எல்லாக் கடிதங்களையும், படிவங்களையும் பொலீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கையில் உட்படுத்த வேண்டுமென்றும், புகைப்படப் பிரதியெடுத்து விட்டு மீளத்தருவதாகவும் கூறி சகல மூலப் பிரதிகளையும் பெற்றுக் கொண்டார்.

ஆனால், அந்த மூல எழுத்துப் பத்திரங்கள் எதுவுமே துமின்தவுக்குக் கிடைக்கவில்லை. அதனைக் கேட்கும் போதெல்லாம், தான் குழப்பமான நிலையிலிருக்கும் போது அவற்றைப் பொறுப்பெடுத்ததாகவும், பின்னர் அது எங்கோ கைதவறிப் போய் விட்டதாகவுமே தெரிவித்தார். கிடைத்ததும் உடனடியாக தபால் மூலம் அனுப்புவதாகவும் மேலும் கூறினார். அந்த எழுத்துருக்களில் குருநாகல் வைத்தியசாலைச் சிகிச்சை விபரமும் ஒன்றாகும். பிழையான மருந்து காரணமாக கண்கள் பழுதடைந்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த மருந்துப் பெட்டியில் காணப்பட்ட விபரப் பட்டியலும் திரு பெரேராவால் எடுக்கப்பட்டிருந்தது. நிகழ்வு தொடர்பாகச் சாட்சியம் கூறும் எந்த ஆவணமும் துமின்தவிடம் காணப்படவில்லை. குறைந்த பட்சம் வைத்திய உதவிக்காக, நட்டஈடாக ஒரு செம்புக் காசு கூடக் கிட்டவுமில்லை.

இச்சோகம் நிகழும் போது துமின்த மூன்று பிள்ளைகளின் தந்தை. அவன் தம்புள்ள வீதியில் தயிர், பாணி, இனிப்புக்கள் விற்கும் சிறிய வியாபாரமொன்றை மேற்கொண்டிருந்தான். துரதிர்ஷ்டமான சம்பவத்தின் பிற்பாடு வாழ்க்கையைப் பற்றி மீண்டும் நினைத்துப் பார்க்க நேர்ந்தது. குடும்பத்தைப் பாதுகாக்க வழிதேட வேண்டும். தன்னால் நன்றாக மரமேற முடியுமென்று அவனுக்குத் தெரியும். உயர்ந்த மரங்களுக்கேற சிலர் பயப்படுவார்கள். ஆனால் துமின்தவால் அந்த மரங்களுக்கு ஏற முடியும்.

**ஏழை அப்பாவிகளின் அடிப்படை உரிமைகள் பகிரங்கமாகவே மீறப்படுவதை உறுதிப்படுத்தும் இன்னொரு நிகழ்வாக, துமின்தவின் சோகம் தரும் கதையைக் குறிப்பிட முடியும். இந்த உரிமைகள் மக்கள் வரிப் பணத்தால் சம்பளம் பெறும் அதிகாரிகளாலும் ஊழியர்களாலுமே மீறப்படுகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. அடி உதை வாங்கு, அமைதியாய் இரு

'ரன்னே' என்ற பெயரில் கிராமத்தில் பிரபலமாகியிருந்த ரன்பண்டா, புதிதாகக் கட்டிய தனது வீட்டில் தனியாக நின்றான். நள்ளிரவு கேட்ட சத்தத்தினால் அவன் கண் விழித்தான். கரோளிஸ் குழுவினர் பொல்லு தடிகளுடன் வீட்டுக்கு வருவதை அவதானித்தான். ரன்னேயிற்கு வெளியே வருமாறு கரோளிஸ் சத்தமிட்டதோடு, அடுத்தவர்கள் ஜன்னல்களுக்கூடாக உள்ளே புகுந்து வீட்டிலிருந்த சாமான்சட்டிகளை நாசமாக்க முனைந்தனர். ரன்னேயைப் பிடித்து அவர்கள் அடிக்கத் தொடங்கினர். எப்படியோ அவர்களிடமிருந்து தப்பியோடி அருகேயிருந்த வைக்கோல் குவியலின் பின அவர்கள் செல்லும் வரை மறைந்திருந்தான். இது 2007.09.08 ல் நடைபெற்றது.

அதிகாலை மூன்று மணியளவில் ஒளிந்திருந்து மெல்ல வெளிப்பட்ட ரன்னே, இவ்விடயத்தை முறைப்பாடு செய்வதற்காகப் பொலீஸ்'க்குச் சென்றான். அங்கு நின்ற பொலிஸ் அலுவலர் அந்நேரத்தில் முறைப்பாடு பதிவு செய்வது சிரமமானதால் காலையில் வருமாறு கொட்டாவி விட்டபடி சொன்னார். பழைய வீட்டுக்குச் சென்று அங்கு விடியும் வரை நின்ற ரன்னே, பின்னர் புதுவீட்டுக்கு என்ன நடந்துள்ளதென்று பார்க்கச் சென்றான். அப்போது கரோளிஸ் கையில் வாளொன்றை வைத்தபடி வீட்டின் முன்னால் நிற்பதைக் கண்டான். பின் பக்கமாக மெல்ல மெல்லச் சென்று கரோளிஸ் மீது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து கையிலிருந்த வாளை இடுங்கிச் செம்மையாக அடி கொடுத்தான் ரன்னே. பழிவாங்குவதாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னபடி பாய்ந்தோடினான் கரோளிஸ். பொலிஸ் நிலையம் சென்ற ரன்னே, பொலீஸ் பரீட்சகரிடம் நடந்ததைச் சொன்னான். புதிதாக வீடு கட்டிய இடம் தொடர்பான பிரச்சினையிருப்பதாகவும், தனது கும்பத்தி னருக்கும் கரோளிஸ் குடும்பத்தினருக்குமிடையே மோதல் நிலவி வருவதாகவும் அது தொடர்பாக முன்பும் முறைப்பாடு செய்துள்ளதாகவும் ரன்னே எடுத்துக் காட்டினான்.

விடயத்தை விசாரித்துப் பார்த்து முறைப்பாட்டைப் பதிவு செய்து கொள்ளுமாறு நிலையப் பரீட்சகர் பொலிஸ் அதிகாரியொருவருக்கு கட்டளையிட்டார். ஒரு மணி நேரத்தின் பின்பு வந்த வேறோர் அதிகாரி ரன்னேயை கூட்டில் போட்டார்.

அடுத்த நாள் காலையில் ஒன்பது மணிக்கெல்லாம் மூன்று பொலிஸ்காரர்கள் வந்து, ரன்னேயை வெளியே எடுக்க வேண்டுமென்ற னர். ஒருவன் அவனது சேட்டைப் பிடித்து இழுத்தான். அப்படி இழுக்கும் போது இரும்புக் கூட்டின் தடுத்த கம்பியில் அவனது தலை முட்டியது. அதையும் பொருட்படுத்தாதவர்களாக வெளியே ஒரு மடுவத்திற்கு அவனை இழுத்துச் சென்றனர். நிலத்தில் படுத்துக் கொள்ளுமாறு சொன்ன ஒரு பொலீஸ்காரன், அவ்வாறு படுத்ததும் பொல்லால் தாக்கி னான். இன்னொரு பொலீஸ் ஹோர்ஸ் குழாயினால் அடித்தான். மிகவும் மிருகத்தனமாக தாக்குதல் நடைபெறும் போது இன்னும் சிலர் அதற்குச் சேர்ந்து கொண்டனர். இப்படித்தான் அடிக்க வேண்டுமென்று சொன்ன ஒருவன் சாப்பாத்துக்காலால் முதுகுக்கு உதைந்தான். தனக்கு இவ்வாறு அடிக்க வேண்டாமென்ற ரன்னேயின் வேண்டுகோள் எல்லோராலுமே நிராகரிக்கப்பட்டது. பின்னர் அவனது உடலின் மீது சிலர் ஏறி நடந்தனர். சப்பாத்து உதைகள் தொடர்ந்தன. "நேரே நின்று நடந்து போ" என்று ஆணையிட்ட பொலீஸ்காரர்கள் ரன்னேயை மீண்டும் கூட்டினில் இட்டனர்.

மாலை மூன்று மணியளவில் ரன்னேக்கு முறைப்பாடு செய்ய வாய்ப்புக் கிட்டியது. முறைப்பாட்டை எழுதிய பின் அதில் கையொப்ப மிடுமாறு அவனை வற்புறுத்தினர். அதன் பின்னர் பொலீஸாரால் உருவாக் கப்பட்ட குற்றச்சாட்டுக்காக ரன்னே நீதிமன்றம் சென்றான். தன்னைப் பொலீஸார் தாக்கியதாக ரன்னே நீதிபதியிடம் கூறிய போது, அவர்களை இனம் காண முடியுமாவென்று கேட்டார். அவனது பாதகமான உடற் சௌகரியத்தை விளங்கிக் கொண்ட நீதிபதி ரன்னேயை வைத்திய சாலையில் சேர்க்குமாறு கட்டளையிட்டார். பின்னர் அவன் பிணையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலையானான். பொலீஸ் அடிகளால் தொடர்ந்தும் கஷ்டமுறுவதால் ரன்னே மீண்டும் வைத்தியமனையில் சேர்க்கப்பட்டான். அதைத் தொடர்ந்து கடுமையான தகர்வைகளைச் சுகப்படுத்த ஆயுள்வேத சிகிச்சை செய்யத் தீர்மானித்தான்.

இந்தத் துன்புறுத்தல் சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் கமிஷன், பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அதிகார சபை போன்றவற்றுக்கு ரன்னேயின் மனைவி முறைப்பாடு செய்தாள். பொலிஸ் அதிகாரி விசாரணை செய்த பின் வீட்டுக்கேற்பட்ட நட்டம் தொடர்பாக முறைப்பாடு செய்யுமாறு வேண்டினார். அதே நேரம் பொலீஸ் தாக்குதல் பற்றிக் குறிப்பிட வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார். பொலீஸ் அதிகாரி அவர்களின் மேற்படி அறிவுறுத்தல் தொடர்பாக குறிப்பிட்டு, ரன்னே மனித உரிமைகள் கமிஷனுக்கும், தேசிய பொலிஸ் கமிஷனுக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் எழுத்து மூலம் அறிவித்தான்.

நாற்பத்தைந்து வருடமான ரன்னே ஒரு கூலிக்காரன். மூன்று பிள்ளைகளின் தந்தை. அவன் பொலீஸ் தாக்குதலால் கடும் நோயாளி யாக மாறியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. அநீதிக்கெதிராய் எழுந்த குடும்பம்

தமது மகனின் உரிமையை நிலை நாட்டுவதற்காக முன்னெழுந்த குடும்பமொன்றின் கதை இது. பாடசாலைக்குள் ஏற்பட்ட பிரச்சினையொன்று, பாடசாலை மட்டத்திலேயே முடித்துக் கொள்ளாமல் வெகு தூரம் சென்றமை இந்த அறிக்கை மூலம் தெளிவாகிறது. அது அதிபரின் திறமையீனத்தையே காட்டுகிறது. பயமூட்டல், அச்சுறுத்தலுடன் பொலிஸ் பெரியவர்கள், சமாதான சபை முக்கியஸ்தர்கள், மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளின் அழுத்தங்களுக்கு முகம் கொடுத்தபடி, உண்மையை நிலை நாட்டுவதற்காக இக் குடும்பத்தினர் போராடினர்.

பிள்ளைகளுக்கிடையே ஏற்பட்ட மோதலை பாடசாலையில் எல்லோரும் பார்த்திருந்தனர். சஞ்ஜீவவின் தலைமையிலான தரம்- 13 மாணவர் குழுவொன்று, தரம் 11 சிராலுக்கு அடித்தனர். வயதில் குறைவானவனாயினும் அவனும் பதிலடி கொடுத்தான். இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அதிபர் நந்தனி தரம்- 13 மாணவர்களுக்கு சார்பாக நடந்து கொண்டமை தெளிவாகிறது.

அதிபர் பாராபட்சமாக நடந்து கொண்டமைக்கு எதிர்ப்புக் காட்டிய சிராலுக்கு அதிபர் அடித்தார். தொடர்ச்சியான அடி காரணமாக உதடு, காதுகளிலிருந்து இரத்தம் வழியத் தொடங்கியது. மாணவர் குழுவொன்று சிராலுக்கு அடித்துக் காயப்படுத்தி விட்டு பாடசாலையை விட்டும் ஓடிவிட்டதாக அதிபர் சிராலின் அம்மாவிடம் கூறினார். அதற்கு மாறாக அதிபர் அடித்ததால் தான் இவ்வாறு ஏற்பட்டதென்று அதிபரின் பொய்யை அந்த இடத்திலேயே சிரால் சுட்டிக் காட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்ததை விசாரிக்க இரு பொலீஸ் அதிகாரிகள் பாடசாலைக்கு வருகை தந்தபோது, ஆசிரியர் குழுவில் பலரின் உதவியோடு, சகலரது முன்னிலையிலும் சிராலைக் கேலிக்குள்ளாக்கினார் அதிபர். தானொரு அப்பாவி என்பதை உணர்ந்த சிரால் அழத் தொடங்கினான். "இந்த மோசமான நாட்களில் கவனமாக இருக்கவும்" என்று சிராலுக்கு எச்சரிக்கை விடுத்துச் சென்றனர் பொலீஸ்காரர்கள். அன்று மாலை சிராலும் அவனது தாயும் முறைப்பாடு செய்வதற்காக பொலீஸ் நிலையம் சென்றனர். அன்று பாடசாலைக்கு வந்த பொலீஸ் அலுவலர்களின் தலையீட்டால் முறைப்பாட்டைப் பதிவு செய்ய முடியவில்லை. அடுத்த நாள் மீண்டும் சென்ற தாயும் மகனும் வெற்றிகரமாக முறைப்பாட்டைப் பதிந்தனர்.

சிராலின் தாய் நடந்த விடயம் பற்றி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கும் பெண்கள் மற்றும் சிறுவர் செயலணிக்கும் எழுத்து மூலம் அறிவித்தனர். அடுத்த நாள் பாடசாலை சென்ற சிரால் அதிபரால் விரட்டப்பட்டான்.

அதிபரின் தாக்குதல் காரணமாக சிராலுக்கு அடிக்கடி காது வலியும் தலையிடியும் ஏற்பட்டது. சிராலை வைத்தியசாலையில் அனுமதித்த தாயாருக்கு, "இது சின்ன விஷயம்" என்றே சட்ட வைத்திய அதிகாரி கூறினார்.

வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட முறைப்பாட்டுக் கமைய குறித்த பிள்ளைகளின் பெற்றார் பாடசாலைக்கு அழைக்கப்பட்டனர். சாதாரண தரப் பரீட்சை நெருங்குவதால் சிராலைப் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அதிபரிடம் வேண்டிக் கொண்டார். பொலீஸில் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டை வாபாஸ் வாங்கினால் மாத்திரமே பாடசாலையில் சேர்த்துக் கொள்ள முடியுமென்று அதிபர் அகங்காரத்தோடு சொன்னார்.

பொலீஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய விசாரணை நடைபெறும் போது, வெளியே எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றும் இடம்பெற்றது. சிரால் உள்ளிட்ட மூன்று மாணவர்களை வெளியேற்ற வேண்டுமென்றும், அதிபர்- ஆசிரியர் எவரையும் இடமாற்றம் செய்யக் கூடாதென்றும் எழுதப்பட்ட அட்டைகளை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றார்கள் தாங்கியபடி ஊர்வலத்தில் சென்றனர். அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முதல் நாள் பாடசாலையில் நடைபெற்ற பெற்றார் ஆசிரியர் கலந்துரையாடலின் போது அதிபரால் ஒழுங்கு செய்யப்பட்டதென்பது தெட்டத் தெளிவானது. இந்த வேளையில் பிரதிப் பொலிஸ் அதிகாரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிராலின் பெற்றாரைக் கடுமையாகப் பேசி அதிபருக்கெதிரான முறைப்பாட்டை வாபஸ் வாங்குமாறு அச்சுறுத்தினார்.

சிராலின் சகோதரர் இருவருக்கும் பொய்க் குற்றச்சாட்டுப் போட முடியுமென்றும், சிராலின் பெற்றாரின் கருவாட்டு வியாபாரத்தை சீர்குலைக்க முடியுமென்றும் நிலையப் பொறுப்பதிகாரி எச்சரிக்கை விடுத்தார்.

இரண்டாம் தடவையாக விசாரணை நடைபெறும் போது முறைப் பாட்டை அகற்றிக் கொள்ள வேண்டுமென்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, அதிபர்- ஆசிரியர் குழு, சிராலின் பெற்றாரை அச்சுறுத் தினர். சிராலின் சகோதரர்களுக்கெதிராகக் குற்றப் பத்திரிகை தயாரிப்ப தாகவும் நிலையப் பொறுப்பதிகாரி மீண்டுமொரு தடவை அபாய அறிவிப் புச் செய்தார். இங்கு பெண்கள் மற்றும் சிறுவர் செயலணிக்கும் முறையிட் டுள்ளதாகக் குறிப்பிட்ட போது, உடனடியாக தொலைபேசி மூலம் பொலீ ஸில் சமாதானத்திற்கு உடன்பட்டுள்ளதாகத் தெரிவிக்குமாறு பொறுப் பதிகாரி சிராலின் தந்தையை அழுத்தினார். தான் சரியான முறையில் நடவடிக்கை எடுப்பதாக செயலணியின் விடயப் பொறுப்பதிகாரி தெரிவித்த போதும், பின்னர் அவரது நிலைப்பாடு மாறிவிட்டது. அந்த விடயத்தை பொலீஸார் வசம் ஒப்படைத்துள்ளதாக பின்னர் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் சமாதான சபைக்கு வருமாறு சிராலின் தந்கைக்கு அறிவிப்புக் கிடைத்தது. பொலீஸார் சமாதான சபை நிகழ்வை வேறுபக்கமாகத் திருப்பியிருந்தனர். சபைத் தலைவர் சிராலின் தகப் பனைப் பயமூட்டி சமாதானமாக முடித்துக் கொள்ளுமாறு வேண்டினார். அவர் சத்தமிட்டபடி வெளிப்படையாகவே எச்சரித்தார்.

மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த முறைப்பாட்டை அந்நிறுவனத்தைச் சேர்ந்த சமன்தி விசாரித்தார். அவரும் அதிபருக்கு ஆதரவான பாங்கை வெளிப்படுத்தியதோடு, ஏற்றுக் கொள்ளத்தக்க செயலொழுங்கைப் புறந்தள்ளி சிராலைப் பலவீனப்படுத்தும் விதமான கேள்விகளை எழுப்பினார்.

**இதை நாங்கள் அறிக்கைப் படுத்தும் போது சிரால் நான்கு மாதக் கல்வியை இழந்திருந்தான். அவன் இவ்வாண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சுற்றவாளிகளை மென்மேலும் அநீதியானவகையில் நடாத்த பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருவாகிகள், கல்வி பணிப்பாளர்கள், சமாதான சபை முதல்வர்கள், எவ்வாறு கைகோர்த்துக் கொண்டு செயற்பட்டுகிறார்களென்பது தெளிவாகிறது. பாதிக்கப்பட்ட மாணவனுக்கு பாடசாலை செல்ல அனுமதிக்குமாறு கல்வி அலுவலகம் விடுத்த பணிப்பை அதிபர்கள் நடைமுறைப்படுத்துவது மிகவும் அபூர்வம். தர்ம விழுமியங்களைக் கணக்கில் கொள்ளாது அகந்தையோடு செயற்படும் அதிபர் ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையோ சட்ட முன்னெடுப்புக்களோ ஆடைகோடைக்குத்தான் நடைபெறுகின்றது. ஆனால், தாங்கள் கல்வி பெறும் உரிமையை இழந்து, எதிர்காலத்தை இருள்மயமாக்கிக் கொண்டு தொடர் தொல்லைகளுக்காளாக வேண்டிய நிலை, பாதிக்கப்படும் அப்பாவிகளுக்கே ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. அவரது பெயர் 'தர்மகீர்த்தி'

பதினான்கு வயதான வினேஷ் அறுபது வயதான தனது பாட்டனுடன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் ஒன்பது மணியளவில் பேரன் படிக்கும் பாடசாலை அதிபரிடமிருந்து அவருக்கொரு தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. வினேஷ் சம்பந்தப்பட்ட சிறிய பிரச்சினையொன்றுள்ளதால் பாடசாலை வருமாறு அவ்வழைப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைக்குச் சென்ற ஹென்றி தனது பேரனும் இன்னொரு பையனும் கைகளை உயர்த்தியபடி முட்டுக்காலில் நிற்பதைக் கண்டார். பேரன் மூக்கால் இரத்தம் வழிவதையும் அவர் கண்ணுற்றார்.

வினேஷுக்கு எதற்காக அடித்தீர்களென்று அதிபரிடம் கேட்டபோது, அம்மணி "அவரை நன்றாக நாங்கள் கவனித்துள்ளோம்" என்று கிண்டலாகச் சொன்னார். வினேஷும் லசித்தும் சேர்ந்து இன்னொரு பையனின் காற்சட்டைப் சிப்பை அவிழ்த்துள்ளார்கள். என்று அவர் விபரம் சொன்னார். சிப்பை லசித் அவிழ்க்கும் போது கையில் தடியுடன் வினேஷ் அருகிலிருந்தான். அதனால் அவனைப் பாடசாலையிலிருந்து விலக்க வேண்டுமென்று இறுதியாகக் கூறி நின்றார். ஹென்றி அதற்கு உடன்படவில்லை. தர்மகீர்த்தி என்ற ஆசிரியர் வினேஷின் தலை, காது, முதுகென்று பேதம் பாராமல் அடி உதை கொடுத்ததை அதிபர் அம்மணி தெரிவிக்கவில்லை.

அடுத்த நாள் பாடசாலைக்குச் சென்ற வினேஷை வகுப்புக்குச் செல்லவிடாமல் வீட்டுக்குத் திருப்பியனுப்பிவிட்டார் அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹென்றி இது விடயமாகப் பொலீஸில் முறைப்பாடு செய்தார். பெண்கள் மற்றும் சிறுவர் செயலணிக்கும் தெரிவித்தார். உடனடியாக சிறுவனை வைத்தியசாலையில் அனுமதித்தனர். சிறுவனைப் பரிசோதித்த சட்ட வைத்திய அதிகாரி, "இதெல்லாம் சின்ன விஷயம்" என்று தட்டிக் கழித்து, சிறுவனின் உயரம் நிறைகளைப் பார்த்துவிட்டு வீடு செல்லுமாறு கூறினார். அவனுக்கு எந்தச் சிகிச்சையும் அங்கு கொடுக்கப்படவில்லை.

ஹென்றி வலயக் கல்வி அலுவலகத்திற்கு எழுத்து மூலமாக முறைப்பாடு செய்தார். பாடசாலைக்கு வந்த கல்விப் பணிப்பாளர் அம்மாணவனுக்குத் தொடர்ந்து பாடசாலை செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார். அதிபர் அந்த இடத்திலேயே அதனை மறுதலித்தார்.

சில நாட்களின் பின்னர் அதிபரிடமிருந்து ஹென்றிக்கு கடிதமொன்று கிடைத்தது. பிள்ளைக்கு வேறொரு பாடசாலை பெறுவது தொடர்பாக பாடசாலைக்கு வருமாறு கேட்கப்பட்டிருந்தது. அன்றே அக்கடிதத்தை எடுத்துக் கொண்டு வலயப் பணிப்பாளரிடம் சென்ற போது, இன்னொரு பாடசாலைக்குப் பிரவேசிப்பதற்கான விதப்புரையுடன் அக்கடிதம் கொடுக்கப்பட்டது.

ஐந்து மாதத்தின் பின்னர் வினேஷ்க்கு வேறொரு பாடசாலை கிடைத்தது. பாடசாலைக்குச் சென்ற இரண்டாம் நாள், அவனுக்கு அடித்த தர்மகீர்த்தி ஆசிரியரும் சில மாணவர்களின் பெற்றாரும் புதுப் பாடசாலை அதிபரையும் ஆசிரியர்களையும் சந்திக்க வந்திருந்தனர். தன்னைப் பற்றிச் சொல்வதற்காகத்தான் அவர்கள் வந்துள்ளார்களென்பது வினேஷ்க்கு விளங்கியது.

வகுப்பறையை விட்டும் வெளியே போகக் கூடாதென புது அதிபர் அவனை எச்சரித்தார். ஒருநாள் இடைவேளியின் போது பசி காரணமாக சிற்றூண்டிச் சாலைக்குச் சென்று சிற்றுண்டி வாங்கி வருவதை அதிபர் கண்டார். வினேஷை தனது அலுவலகத்திற்கு அழைத்து முட்டுக்காலில் வைத்துவிட்டு, தன்னை உடன் வந்து சந்திக்குமாறு அவனது பாட்டனுக்குத் தகவல் அனுப்பினார்.

அடுத்தநாள் ஹென்றியும் வினேஷும் பாடசாலைக்குச் செல்லும் போது, அங்கிருந்து தர்மகீர்த்தி ஆசிரியர் வெளியேறிச் செல்வதைக் கண்டனர். அவர் நல்ல விடயமாக வந்திக்கமாட்டாரென்று இருவருக்கும் புரிந்து விட்டது. இவர்களைப் பயமூட்டுவதற்காக வந்துள்ளாரென்பதில் சந்தேகமில்லை. புதுப் பாடசாலையில் கல்வி கற்க முடியாததொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலையை உருவாக்குவதற்காகத்தான் வந்துள்ளாரென்று ஹென்றி உணர்ந்தார். அதுபற்றி அவர் அதிபரிடம் தெரிவித்தபோது, பிரச்சினை யொன்றுமில்லை பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பவுமென்றே அதிபர் சொன்னார். இருந்தும் வினேஷ் பாடசாலை செல்லப் பயந்து பின்வாங்கினான்.

**தங்களது கடமையையும் பொறுப்பையும் மறந்து, பழிவாங்கு வதற்குக் கூட முனைகின்ற அதிபர்களும் ஆசிரியர்களும் இருக்கின்றார்களென்பதை இந்நிகழ்வு எடுத்துக் காட்டுகிறது. பதினான்கே வயதான வினேஷின் குழப்படித்தனத்தால் அவனது கல்வி இல்லாமல் போய்விட்டது. அந்நாட்களில் மிகவும் குறைவாகக் காணப்பட்ட பொருத்தப்பாடற்ற ஆசிரியர்கள், இன்று நிறையவே காணப்படுகின்றனர். இப்படியான சூழலில் ஆசிரியர் கள் முன் மாதிரியானவர்களென்று மாணவர்க்குச் சொல்ல முடி யுமா? இப்படியான செயற்பாட்டு நிலவுகை எமது மாணவர் களுக்குப் பாதுகாப்பானதா? பொறுப்புணர்வு மிக்க பிரஜைகளாக அவர்கள் உருவாவதற்கு இச்சூழல் வழி வகுக்குமா? அல்லது தாக்குதல் நடாத்தவும் கொலை செய்யவும் கப்பம் வாங்கவும் துன்பம் விளைவிக்கவும் முனையும் துஷ்டர்களை தோற்றுவிக்க இந்நிலைப்பாடு வழி செய்யுமா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. பொலீஸ் நிலையத்தில் ஹிட்லர்

ஜமால்தீனும் சிராஸூம் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர். இடைநடுவில் 119- பொலிஸார் அவர்களை நிறுத்திச் சோதனையிட்டனர். சிராஸின் பணப் பையில் தங்கமாலையொன்று காணப்பட்டது. மேலதிக சோதனைக்காக இருவரையும் பிரதேச பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். கள்ளச் சாமான் வைத்திருந்தமை காரணமாக அவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

உதவிக் பொலீஸ் பரிசோதகர் பெரேரா இருவரையும் வெவ்வேறாக விசாரித்தார்.

2007. 10. 14 ம் திகதி மாலையில் தன்னிடம் வாய்மொழி எடுத்துக் கொண்டு பொலீஸ் கூட்டில் போட்டதாக ஜமாலதீன் தெரிவித்தான். அன்று இரவு ஒன்பது மணிக்குப் போல் பொலிஸ் நிலைய அதிபதி அநுரகுமார வின் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அங்கு உடைகளைக் கழற்றும்படி கட்டளையிட, அவன் பெனியன், டீசேர்ட் போன்றவற்றைக் கழற்றினான். ஜமால்தீனின் தலையைக் கீழ்நோக்கிப் பதித்து நிலையப் பிரதானி ஒன்றரை அடி நீளத்தடியால் அவரது முதுகுக்கு அடித்தான். பயங்கரத் தாக்குதல் காரணமாக ஜமால்தீன் இரண்டு மூன்று தடவை கீழே விழுந்தான். விழும்போதெல்லாம் தூக்கிப் பிடித்து மீண்டும் மீண்டும் உதை கொடுத்தார். எத்தனை உதை விழுந்ததென்று அவனுக்குத் தெரியவில்லை. ஜமால்தீனை மீண்டும் கூட்டுக்கு இழுத்துச் சென்ற புதிய பொலீஸ்காரன், உடையை அணிந்து கொள்ளுமாறு கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நள்ளிரவு மற்றொரு அதிகாரி ஜமால்தீனைக் கூட்டிலிருந்து வெளியெடுத்தார். அவனுக்கு கை விலங்கிட்டு தொடர்படியால் கீழே அழைத்துச் சென்றனர். அந்த இடம் குளியலறையை போல் பளபளத்தது. நிலையப் பிரதானி அனுர குமாரவுடன் மேலும் ஐந்து பொலீஸார் அங்கு நின்றனர். கைவிலங்கை அகற்றி அருகிலிருந்த வாங்கில் மேலே பார்த்தபடி சாய்ந்து கொள்ளுமாறு அனுரகுமார சொன்னார். பின்னர் அவனது உடல் வாங்குடன் சேர்த்துக் கட்டப்பட்டது. இருகால்களுக்கும் விலங்கு போடப்பட்டது. அருகேயொரு தண்ணீர் பைப்பிற்கு ஹோஸ் குழாய் இணைக்கப்பட்டிருந்தது. வேகமான நீர்வீச்சு அவனது முகத்தில் பீச்சப்பட்டது. அவன் மூச்சு வாங்க முடியாமல் துடிதுடித்தான். விட்டு விட்டு நீர்த்தாக்குதல் நடைபெற்றது. மூச்சு வாங்கிக் கொள்ள கஷ்டப்பட்டு ஜமால்தீன் மயக்கமுற்றான். அந்த வேதனை மிகுந்த கொடுமைக்கு முடிவிருக்கவில்லை. அதன் பிறகு அனுரகுமார வேறொரு உபாயத்தை மேற்கொண்டார். முகம் மூடியிருந்த பெனியன் அகற்றப்பட்டு அவனது வாய்க்கு நீர் பீச்சப்பட்டது. இன்னொரு அதிகாரி ஜமால்தீனின் வாயை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்க மீண்டும் குழாய் திறக்கப்பட்டது. அவனால் வேதனை தாங்க முடியவில்லை. வாயினாலும் மூக்கினாலும் இரத்தம் சொட்டத் தொடங்கியது. அவன் மீண்டும் மயக்கமுற்றான். அனுர குமாரவின் குரூரம் அத்தோடு நிற்கவில்லை. பெற்றோல் நிறைந்த சொபிங் பேக்கொன்று அவனது தலையைச் சுற்றிக் கட்டப்பட்டது. முகத்திலேற்பட்ட அலர்சியால் மீண்டும் மயக்கமுற்றான். மயக்கம் தெளிந்த போது கைகால் அடியுதையோடு பிரம்படியும் கிடைத்தது. அதன் பின்னர் கட்டவிழ்த்து விட்ட பொலீஸ்காரன் உடுப்புக் களை அணிந்து கொள்ளுமாறு கேட்டனர். பிறகு பின்பக்கமாகக் கைவிலங்கிட்டு பொலீஸ் நிலையப் பின்பக்கமாகக் கூட்டிச் சென்றனர்.

ஜீப் வண்டியில் ஏற்றப்பட்ட ஜமால்தீன் பாழடைந்த இடமொன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டான். முட்டுக்காலில் நிற்குமாறு ஆணை பிறந்தது. ஏதோ அவனது கையிலே கொடுக்கப்பட்டது. அது ஒரு ஆயுதமென்றும் அதனையெடுத்துக் கொண்டு ஓடுமாறும் உத்தரவிட்டனர். "ஓட முடியவில்லையே" என்ற போது துப்பாக்கிப் பிடியால் தலையிலடித்து ஓடக் கட்டாயப்படுத்தினர். அவன் அசையாது நின்றான். பின்னர் ஒரு பாலத்தடிக்கு இட்டுச் சென்றனர். தண்ணீருக்குள் பாயுமாறு கேட்கப் பட்டான். அதையும் ஆட்சேபித்த போது மீளவும் கூட்டிப் போய்ப் பொலீஸ் கூட்டில் போட்டனர். இதெல்லாம் இரவு எத்தனை மணிக்கு நடந்த தென்பதோ எவ்வளவு நேரம் நடந்ததென்பதோ ஜமால்தீனுக்கு சரியாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் காலையிலும் குளியலறைக்கருகே அழைத்துச் செல்லப்பட்டான். முதல் நாள் போலவே வாங்கில் இருத்திக் கட்டுப் போட்டு, முகம் மூடி தண்ணீர் பீச்சல் நடை பெற்றது. மூச்செடுக்க முடியா மல் வேதனைப்பட்டான். அதன் பிறகு தலையைச் சுற்றி பெற்றோல் பையும் கட்டப்பட்டது. பல தடவை மயக்கமுற்றான். ஞாபகம் வந்ததும் கட்டவிழ்த்து விலங்கிட்டனர். மலவாயிலிலும் மறைவுறுப்பிலும் ஏற்பட்ட காயங்களுக்கு சித்தாலேப தடவினர். மீண்டும் ஹோஸ் மூலம் நீரடிக்கப்பட்டது. அவனது உடல் பற்றியெரிவது போலிருந்தது. சகிக்க முடியாத வேதனையால் அவதிப்பட்டான். பின்னர் கைவிலங்கு அகற்றப்பட்டது. உடைகளை அணிந்து கொள்ள அனுமதி வாய்த்தது. உடையை அணிய முயலும் போது காலுதை விழுந்தது. இந்தத் துன்புறுத்தல் எவ்வளவு நேரம் நடந்ததென்று அவனால் சொல்ல முடியவில்லை. ஆறுபேர் சித்திரவதைகளை மேற் கொண்டதாக ஜமால்தீன் கூறினான்.

பின்னர் அவனைக் குற்றவியல் பிரிவுக்கு கொண்டு போய் கீழே அமர வைத்தது, இருகால்களையும் மேசைக் காலுடன் சேர்த்து விலங்கிட்டுள்ளனர். அவ்வப்போது வரும் அனுர குமார காலால் உதைத்ததாகவும், பெற்றோல் போத்தலிலிருந்து முகத்துக்கு தெளிப்பதாகவும் ஜமால்தீன் கூறினான். அவனுடைய விரலடையாளம் எடுத்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டான். பொலீஸ் சித்திரவதையால் ஏற்பட்ட காயங்களுக்குப் பரிகாரம் செய்ய வைத்தியசாலையில் தங்க நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. லஞ்சப் பேயின் சீற்றம்

ராணுவத்தின் லான்ஸ் கோப்ரல் திலுக்கசில்வா ஒரு வார கால லீவு பெற்றுக் கொண்டு ஊருக்கு வந்தான்.

தனது மோட்டார் சைக்கிளில் சில திருத்த வேலைகள் செய்ய வேண்டிய அவசியமிருந்ததால் ஒரு நாள் காலை தனது சைக்கிளில் கராஜுக்குப் போய்க் கொண்டிருந்தான். இடையில் தனது நண்பர் நாமலின் வீட்டுக்குச் சென்றான். நீண்ட நாட்களின் பின் நண்பனைக் காணக் கிடைத்தமை நாமலுக்கு பெரு மகிழ்ச்சி அளித்தது. இருவரும் ஒன்றாக பியர் குடித்துவிட்டு கராஜ் பக்கமாகச் சென்றனர்.

இடையில் பொலீஸ்காரர் ஜவரினால் அவர்களது சைக்கிள் நிறுத்தப்பட்டது. திலகசிரி, போவிட ஆகிய பொலிஸ் அலுவலர்களும் அதில் அடங்குவர். தலைக் கவசம் இன்றிப் பயணிப்பது தொடர்பாகக் கேள்வி எழுப்பினர். மிக அருகிலுள்ள கராஜுக்கு செல்வதால் தலைக் கவசமோ, லைசன்ஸோ கொண்டு வரவில்லை என்று திலுக் சொன்னான். அப்போது பொலீஸ்காரர்கள் தூசண வார்த்தைகளால் அவனைத் திட்டினர். அப்போது திலுக் தானும் பாதுகாப்புப் படையில் வேலை செய்கின்றவன் என்றான். அப்படி மோசமான வார்த்தைகளைப் பாவிக்க வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டான். அதன் பின்னர் நாமலை ஒரு பக்கமாக அழைத்த பொலீஸார் ஏதேதோ குசுகுசுத்தனர். பொலீஸார் லஞ்சம் கேட்பதாக நாமல் திலுக்கிடம் சொன்ன போது அவன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்போது சாதாரண உடையிலிருந்த ஒருவர் வந்து பொலீஸ்காரருக்கு ஏதாவது கொடுக்குமாறு கேட்டுக் கொண்டான். திலுக் அதனை மறுத்தான். பொலீஸ்காரர்கள் அவனைக் காலால் உதைத்தனர். நிலத்தில் உருட்டியபடி அடிக்கத் தொடங்கினர். தானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு படைவீரர் என்ற போது, "அதை நீ அங்கே வைத்துக் கொள். இங்கே எங்களுடைய ஆட்சி" என்றவாறு பொலீஸ்காரர்கள் தொடர்ந்து தமது கைவரிசையைக் காட்டினர். பொலீஸார் குடிபோதையில் இருந்ததாக தினுக் சொல்கிறான். இந்த அடி உதைகளை அயலவர்களும் பார்த்துக் கொண்டிருந்தனர். நாமல் அப்பாவியாகப் பார்த்துக் கொண்டிருந்த போது பொலீஸ்காரர் தினுக்கை லொறியொன்றினுள் தள்ளினர். லொறியினுள் ளும் மனிதத் தன்மையற்ற தாக்குதல் நடந்தது. லொறி சிறிது தூரம் சென்ற பின் தினுக்கை ஜீப் வண்டியில் மாற்றி அவனைப் பொலீஸுக்குக் கொண்டு சென்று கூட்டினுள் தள்ளினர். அப்போது இரவு பதினொரு மணியிருக்கும்.

மதுபானம் அருந்தியுள்ளாரா என்று பார்க்கத் தினுக் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டான். திரும்பி வரும்போது அவன் தாக்குதலுக்கு ஆளானான். இரவு பன்னிரண்டு மணியளவில் கூட்டிலிருந்து வெளியெடுக்கப்பட்ட தினுக்கிற்கு அடிஉதைக்குப் பஞ்சமிருக்கவில்லை. முன்பக்கமாக வளைந்து நிற்குமாறு அவனது முதுகுக்கும் கழுத்துக்கும் அடித்ததோடு, திலகசிரி அவனது பின்பக்கத்திற்கு காலால் உதைத்தான். அவர்களோடு அடுத்தவர்களும் சேர்ந்து கொண்டனர். பின்னர் மீண்டும் கூட்டினுள் போட்டனர். தாங்க முடியாத வேதனையால் அவன் துவண்டான். அவனுக்கு உண்ணவோ பருகவோ எதுவும் வழங்கப்படவில்லை. தனது பணத்திற்கு தேநீர் பெற்றுக் கொள்ள முயற்சித்த போது அதுவும் மறுக்கப்பட்டது. கைது செய்யப்பட்டுள்ள விடயத்தை வீட்டுக்கறிவிக்கவும் இடமளிக்கப்படவில்லை.

அடுத்த நாள் காலை எட்டு மணிக்கு கூட்டுக்கு வெளியே வாங்கில் அமர்ந்திருக்க அனுமதியளிக்கப்பட்டது. தினுக் கைது செய்யப்பட்டுள்ள நிலையைப் பொறுப்பதிகாரி வீட்டுக்கு அறிவித்தார். பொலீஸ் உத்தியோகத்தர் போவிட வாய்மொழி எடுத்தார். அதை வாசித்துக் காட்டாமலேயே கையொப்பம் வாங்கிக் கொண்டார். காலை பதினொரு மணியளவில் தினுக் நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டான்.ஹெல்மட் இன்றி மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் சென்றமை அவனுக்கெதிரான குற்றச்சாட்டுக்களாகும். பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டான். வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் சென்ற தினுக், தனது பொலீஸார் தாக்கியமை பற்றித் தெரிவித்தான். இரண்டு நாட்களின் பின் சட்ட வைத்திய அதிகாரி அவனை வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தினார்.

தலைக் கவசமின்றி தான் மோட்டார் சைக்கிளில் சென்றது தவறென்பதை தினுக் ஏற்றுக் கொள்கிறான். ஆனால் அவன் லஞ்சம் கொடுக்க விரும்பவில்லை. தான் லஞ்சம் கொடுக்காததால் தான் பொலீஸார் தன்னை மிருகத்தனமாகத் தாக்கினார்களென்று தினுக் தெரிவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. எங்களிடம் மட்டுமே ரியூஷன் பெறுங்கள்

ருவிலா மீண்டும் தூக்கத்தில் அழத் தொடங்கிய போது அவளது தாய் அரவணைத்து அமைதிப் படுத்தினாள். பாடசாலையில் நடைபெற்ற பிரச்சினையை நினைத்தே அவள் அவ்வாறு அழுதாள். அமரந்தி உடுகம்பொல அவர்களே பாடசாலை அதிபர். அவர் ஒருநாள் தரம் ஒன்பது மாணவிகளைச் சந்தித்து அடுத்த நாள் தாய்மார் அனைவரும் பாடசாலைக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அப்படி வராதவர்களை மாணவர் தலைவர்களை வீட்டுக்கனுப்பி இழுத்துக் கொண்டு வருவதாக ஒரு வித மோசமான தொனியில் மேலும் தெரிவித்தார்.

அடுத்த நாள் நூலக மண்டபத்திற்கு தாய்மார் வந்திருந்தனர். அதிபர், ஆசிரியைகளும் கூட்டத்திற்கு வந்தனர். மாணவியரின் பெயர் சொல்லப்படும் போது அவர்களது அம்மா எழுந்து நிற்க வேண்டுமென்றும், ஆசிரியைகளால் மாணவர் முன்னேற்ற அறிக்கை வாசிக்கப்படுமென்றும் தெரிவித்தனர். ருவிலாவின் சந்தர்ப்பம் வந்தபோது வகுப்பாசிரியையான ரமணி அவர்கள் ருவிலாவின் கையைப் பிடித்தபடி மண்டபத்திற்கு முன்னால் வந்தார்.

"ருவிலாவின் அம்மா வந்திருக்கிறாரா?"- என்று ரீச்சர் கேட்ட போது ருவிலாவின் அம்மா எழுந்து நின்றார்.

"தரங்காவின் கணித ரியூசன் வகுப்புக்கு உங்கள் மகள் சென்றாளா?" இது ரமணி ரீச்சரின் அடுத்த கேள்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆம்" என்றாள் ருவிலாவின் அம்மா.

"ஒரு பையனின் கையைப் பிடித்துக் கொண்டுதான் ருவிலா கணக்குச் செய்வதாகச் சொல்கிறார்களே.... இது உண்மையா?"

மண்டபத்தில் குழுமியிருந்தவர்கள் வாய் விட்டுச் சிரித்தனர். ருவிலா வெட்கத்தால் தலை குனிந்தாள்.

"அந்தப் பையனின் பெயர் ரஞ்சுவா?" இது விவியன் ரீச்சரின் குறுக்கு விசாரணை.

பார்வையாளர்கள் மீண்டும் சிரித்தனர். ருவிலா தலையை இன்னும் உயர்த்தவில்லை.

"பாடசாலையில் படிப்பிக்கும் பிரேமா ரீச்சரின் ரியூசன் வகுப்புக்குப் போகாமல், அவரை விட எவ்வளவோ இளைய தரங்காவின் ரியூசன் வகுப்புக்குப் போனதேன்? பிரேமா மிஸ்ஸைவிட தரங்கா மிஸ்ஸால் நன்றாகப் படிப்பிக்க முடியுமா?"-

வயலட் மிஸ் இப்படிக் கேட்டபோது ருவிலாவாலோ அவளது அம்மாவாலோ எந்தப் பதிலும் சொல்லிக் கொள்ள முடியவில்லை.

"பாருங்கோ ஒன்றும் தெரியாத பாப்பா போல் நிற்கிறதை?"- மீண்டும் விவியன் ரீச்சர்.

அவமதிப்புக்கு ஆளான அப்பாவி ருவிலா நிலத்தில் பதித்த கண்களை மேலே உயர்த்தவில்லை.

இந்தக் கூட்டத்தின் பின்னர் ருவிலாவின் தாய் தரங்கா ரீச்சரைத் தேடிச் சென்றாள். "இதெல்லாம் அர்த்தமற்ற பேச்சு" என்று அவர் சொன்னார்.

பிள்ளைகள் தன்னைப் பார்த்து கேலி செய்து சிரிப்பதாகக் கூறி, அதனால் மனவேதனைக்கும் அதிர்வுக்கும் உள்ளான ருவிலா பாடசாலைக்குப் போவதை நிறுத்தினாள். தாயும் எதிர்பார்ப்பு சூன்யமாகப் போன துயரத்தில் ஆழ்ந்தாள். ருவிலா வீட்டுக்கு ஒரேயொரு பிள்ளை. மிகுந்த கெட்டிக்காரி, தரம் ஒன்றிலிருந்தே வகுப்பில் முதலாம் பிள்ளையாகவே வந்தாள். இதையிட்டு அவளது தாய்க்கும் பெருமை.

ருவிலா வகுப்பாசிரியையான ரமணி ரீச்சரைத் தேடிச் சென்றாள். இது பற்றி தனக்கு எதுவுமே தெரியாது. அதிபர் சொன்னதையே செய்தேன் என்றார். அடுத்த நாள் அவளது தாய் அதிபரைச் சந்திக்கச் சென்ற போது அவர் இருக்கவில்லை. பின்னர் பிரதி அதிபரைச் சந்தித்தாள். அவர் ரமணி, விவியன் ஆகிய ஆசிரியைகளை அழைத்தார். தங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை இருப்பதாகவும் இதனை அதிபரோடு கதைத்துக் கொள்ளுமாறும் தெரிவித்தனர்.

பிள்ளையின் விடயமாக விவியன் ரீச்சருடன் கதைக்க முனைந்த போது, "பிள்ளைகளை ஒழுங்காக வளர்த்துக் கொள்வது பெற்றாரின் வேலை. ரீச்சர்மார் தவறு இருந்தால் சுட்டிக் காட்டுவார்கள். ஏதாவது நடந்த பிறகு ரீச்சர்மாரை திருத்த வரவேண்டாம்" என்று கடுந்தொனியில் கூறினார். பின்னர் வகுப்பாசிரியையான ரமணி மிஸ்ஸை சந்திக்கச் சென்றபோது "இந்தக் கதைகளை என்னோடு சொல்ல வர வேண்டாம்" என்று ருவிலாவின் அம்மாவை விரட்டிவிட்டார்.

இது தொடர்பாக ருவிலாவின் அம்மா பொலீஸில் புகார் செய்தாள். பாடசாலைக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ரமணி ரீச்சர் அழுவதாகவும் அதிபர் இல்லாததால் எந்த வாக்கு மூலத்தையும் பெற முடியவில்லையென்றும் தெரிவித்தார்.

அடுத்த நாள் நடைபெற்ற பொலீஸ் விசாரணைக்கு அதிபர், ரமணி, விவியன் மற்றும் ஆசிரியைகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களான பெற்றார்கள் சிலரும் வந்திருந்தனர்.

ருவிலா தொடர்பாக ரமணி மிஸ்ஸால் சொல்லப்பட்ட விடயத்தால் பிரச்சினையேற்பட்டுள்ளதாகவும், அவளின் கல்வியை வேறு பாடசாலையில் தொடரக் கூடிய விதமாக விடுகைப் பத்திரம் கொடுக்குமாறும், நிகழ்வை விசாரித்த பொலீஸ் அதிகாரி தெரிவித்தார். அவள் இன்னொரு பாடசாலைக்குச் சென்றாலும் இதையேதான் செய்வாள். அது எனக்கு வெட்கம். எனவே அவ்வாறான விடுகைப் பத்திரம் தர முடியாதென அகங்காரமான முறையில் அதிபர் சத்தமிட்டார்.

பிள்ளை சிறந்த கல்வி பெறுபேறுகளை ஈட்டியுள்ளதாகவும், புத்தி சாதுர்யமானவளென்பதாலும் அவளது கல்வியைச் சீர்குலைத்து அவளது எதிர்காலத்தோடு விளையாட வேண்டாமென்று அதிகாரி எச்சரித்த போதும் அதிபர் அம்மணி வளைந்து கொடுக்காமல் அதே நிலைப்பாட்டிலிருந்தார்.

இவ்விடயத்தைப் பொலீஸில் முறைப்பாடு செய்ததன் மூலம் பாடசாலையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக ஏனைய பெற்றோர்கள் ருவிலாவின் அம்மாவைக் குற்றம் சாட்டினர். பொலிஸில் முறைப்பாடு செய்வதால் பாடசாலையின் நற்பெயர் கெடுவதில்லையென பொலீஸ் அதிகாரி தெளிவுபடுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் மற்றும் சிறுவர் செயலணி அதிகாரிகளை அழைத்து விடயம் தொடர்பாக விளக்கமளிப்பதாக தனக்கு ஒருநாளை ஒதுக்கித் தருமாறு அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

அடுத்தநாள் பாடசாலையில் மாணவர்களுக்கு கற்பிக்கப்படவில்லை. காலைக் கூட்டத்தின் போது அதிபர் உரையாற்றும் போது ருவிலாவுக்கு இன்னொரு பாடசாலையில் போய் சேர முடியாத விதமான விடுகைப் பத்திரமே நான் கொடுப்பேன் என்றார். கடுமையான பழிவாங்கும் குணமே அவரது பேச்சின் மூலம் வெளிப்பட்டது. பொலீஸில் முறைப்பாடு செய்ததன் மூலம் ருவிலாவால் பாடசாலையின் நற்பெயர் அசிங்கப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அன்று முதல் ரமணி மிஸ் ருவிலாவின் வகுப்புக்குக் கற்பிப்பதை தவிர்த்துக் கொண்டார். அவளது எதிர்காலம் இருளடைந்துள்ளது. உறுதியற்றதாகிவிட்டது. வகுப்பில் முதலாம் பிள்ளையாய் வரும் வாய்ப்பு இனித் தனக்குக் கிட்டாதென்று எங்களோடு தெரிவிக்கும் போது அவளது முகத்தில் கவலை தோய்ந்திருந்தது.

**இந்தச் சம்பவம் பாடசாலை ஆசிரியரின் ரியூசன் வகுப்புக்குப் போகாமல் வெளி வகுப்பொன்றுக்குச் சென்றதால் பாதிப்புக் குள்ளான ஒரு பிள்ளையின் சோகத்தைச் சொல்கிறது. பாடசாலை ஆசிரியர்களின் வகுப்புக்குச் செல்லாத பிள்ளைகளுக்கு வகுப்பில் குறைந்த புள்ளியிடுவது தொடர்பான சம்பவங்கள நிறையவே பதிவாகியிருக்கின்றன. இங்கு அதிபர், ஆசிரியர்களின் பழி வாங்கும் குரூர குணமே வெளிப்படுகின்றது. ஆசிரியர்கள் இப்படியா? என்று நினைப்பதே பெரும் சோகம். இவர்களால் ஆசிரியர் தொழிலுக்கே அவமானம். இவர்களுக்கு படி உயர்வும் பதவி உயர்வும் வழங்குவதே துர்ப்பாக்கியமானது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. முதியோர் இல்லத்திலிருந்து நடுத்தெருவுக்கு

தனது பழைய ஊன்றுகோலுக்கு பாரம் கொடுத்தபடி எட்வட் சமரக் கொடி காரியாலயப் பக்கமாக வந்தார். வாசற்படியில் நின்ற அவர் மிகுந்த எதிர்பார்ப்போடு உள்ளே பார்த்தார். வயதுக்கேற்ப அவரது கண்கள் சாம்பல் பூத்ததுபோல் காணப்பட்டன. சுருக்கம் விழுந்த முகம் களைப்பை வெளிக்காட்டியது. அழகான தலைமுடி. மிகச் சுத்தமான உடை.

எழுபது வயது மதிக்கத்தக்கவர். வயதை மறந்து போய் விட்டதாகவே அவர் தெரிவித்தார். கொழும்புத் துறைமுகத்தில் வேலை செய்திருக்கிறார். அந்தக் காலத்தை நினைவூட்டும் போது மிகவும் மகிழ்ந்தார். ஒத்தாசையான குடும்பமொன்றுடன் தனிப்பட்ட வாழ்க்கையே அவர் வாழ்ந்தார். அவ்வீட்டுப் பிள்ளைகள் வளர்ந்து வரும் போது முதியவர் ஒருவருக்கான இடவசதி போதாமல் வந்தது. முடிவெடுப்பது கஷ்டமான போதிலும், அவர் முதியோர் இல்லமொன்றில் இடவசதி கேட்டு சமூக சேவைத் திணைக்களத்திற்கு விண்ணப்பமொன்று அனுப்பி வைத்தார்.

பல வருடங்களாக வழி பார்த்துக் காத்திருந்து 2000-ல் 'பஹன' முதியோர் இல்லத்தில் பிரவேசம் கிடைத்தது. அவருக்கு கட்டிலும் உடை மற்றும் சாமான்களை வைத்துக் கொள்ள ராக்கையும் ஒதுக்கப்பட்டிருந்தன. வாழ்வின் இறுதிக் காலத்தை நிம்மதியாக அங்கு கழிக்க அவர் எதிர்பார்த்தார்.

அந்த முதியோர் இல்லத்தை பௌத்த பிக்கு ஒருவர் நிர்வகித்தார். அங்கு இன்னும் பத்து முதியோர் அளவில் வாழந்து வந்தனர். சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைத் திணைக்களத்தின் சிபார்சுக்கமைய அங்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரேயொருவர் தான் மாத்திரமே என்று எட்வட் சொன்னார்.

சில நாட்களில் அவர்களுக்கு சாப்பிட எதுவும் கொடுக்கப்பட வில்லையென எட்வட் திக்தித் தடுக்கிச் சொன்னார். அவ்வாறு சொல்லும் போது கண்கள் கலங்கின. மனிதாபிமானமற்ற இந்த நடவடிக்கையைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்த எட்வட் இதனைச் சுவாமியிடம் விசாரித்துப் பார்க்கத் தீர்மானித்தார்.

எட்வட் கடும் பேச்சுக்கு ஆளானதோடு நிறுவனத்துக்கு தொல்லையாக மாற வேண்டாமென்று எச்சரிக்கப்பட்டார். எட்வட் இதையிட்டுப் பொலீஸில் முறைப்பாடு செய்தார். குறிப்பிட்ட நாள், நேரத்தில் விசாரணைக்கு வரு மாறு பொலீஸார் அறிவித்திருந்தனர். அன்று சுவாமியார் வரவில்லை யாதலால் விசாரணை மறுநாளைக்கு பிற்போடப்பட்டது. அடுத்த நாள் எட்வட் பொலீஸுக்குச் சென்ற போது அவருக்கெதிராக முறைப்பா டொன்று போடப்பட்டுள்ளதாக அறிந்து கொண்டார். பௌத்த பிக்குவும், ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியான முதியோர் இல்ல செயலாளரும், முகாமையாளரும் பொலீஸ் நிலையத்திற்கு வந்திருந்தனர்.

நீண்ட நேரமாகத் தன்னை வெளியே வைத்திருந்ததோடு, அவர்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியோடு கலந்துரையாடிக் கொண்டிருந்ததாக எட்வட் குறிப்பிட்டார். பொறுப்பதிகாரி முன்னிலைக்கு அழைக்கப்பட்ட எட்வட்டுடன் எந்தவொரு வார்த்தையும் பேசாமல் அவரைப் பொலீஸ் கூட்டினுள்ளே தள்ளினர்.

அடுத்தநாள் இரண்டு மணிவரை எட்வட்டிற்கு பொலீஸ் கூட்டில் இருக்க வேண்டி நேர்ந்தது. கூட்டிலிருந்து வெளியே வந்தபோது பிணை அவசியமில்லையென்று பொறுப்பதிகாரி கூறினார். ஒரேயொரு நிபந்தனையாக இனிமேல் முதியோர் இல்லப் பக்கம் கூடப் போகக் கூடாதென்றும் தெரிவித்தார். தனக்கு வேறு போக்கிடம் இல்லையென்றும், சமூக சேவைத் திணைக்களத்தின் சிபார்சின் பேரிலேயே, தான் முதியோர் இல்லத்திற்குச் சென்றதாகவும் எட்வட் சொன்னபோது, ஜனாதிபதி சிபார்சு செய்தாலும் முதியோர் இல்லப் பக்கம் போகக் கூடாதென்று பொறுப்பதிகாரி எச்சரித்துள்ளார். அப்பாவி எட்வட் தனக்குப் போக வேறிடம் இல்லாததால் பொலீஸ் கூட்டிலேயே இருந்து நீதிமன்றம் செல்வதை விட தனக்கு வேறு வழியில்லை என்றார். அப்பொழுது நிலையப் பொறுப்பதிகாரி பத்திரமொன்றில் எட்வட்டின் கையெழுத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிக் கொண்டார். அதில் என்ன எழுதப்பட்டுள்ளதென்று வாசிக்க இடமளிக்கவில்லை. வாசித்துக் காட்டவுமில்லை. பின்னர் கடும் வார்த்தைகளால் தூசித்து எட்வட்டை விரட்டிவிட்டார்.

பொலிஸ் பொறுப்பதிகாரியின் அச்சுறுத்தல் காரணமாக முதியோர் இல்லம் போகமுடியவில்லை. அதே போனறு இல்ல நிர்வாகிகளின் தொல்லைகளுக்கும் முகம் கொடுக்க நேரலாம். அதனால் அனாதை எட்வட் அன்றைய இரவை பஸ் நிலையத்திலேயே கழிக்க நேர்ந்தது.

பொலீஸ் அப்பாவிகளுக்குத் தொல்லை கொடுப்பது இப்படித்தான். எட்வட்டின் முறைப்பாடு விசாரிக்கப்படவில்லை. அவனிடம் எதுவுமே கேட்காமல் கூட்டுக்குள் போடப்பட்டார். அவருக்கெதிராக எந்தக் குற்றச்சாட்டும் கூட இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. கலைந்து போன நடிகைக் கனவு

அனீஷா தனது ஏழு வயது மகனுடனும் தாயுடனும் கொழும்புக்கண்மையில் வாழ்ந்து வந்தாள். சுதந்திரமாக வாழ்ந்த அவளது ஒரே கனவு ஒரு சிறந்த நடிகையாக வரவேண்டுமென்பதுதான்.

சிறுவயதிலிருந்தே அவளொரு நடிகையாக வரத்தான் ஆசைப்பட்டாள். நாட்டியம், சங்கீதம் என்பன கற்ற அவள் தனதுருவத்தை அழகுபடுத்திக் கொள்வதில் அக்கறையெடுத்தாள். பாடசாலையில் திறமையான மாணவியாகவும் அழகியாகவும் காணப்பட்டாள்.

இருந்தாலும், அனீஷா வாழ்க்கை அழகானதாக அமையவில்லை. இளம் வயதிலேயே தனது காதலனைத் திருமணம் செய்து கொண்டாள். அவர் ஓர் பொலிஸ் உத்தியோகத்தர். விவாக வாழ்வு நெடுநாள் நீடிக்கவில்லை. அவன் எவ்வித பொருளாதாரப் பங்களிப்பும் செய்யாமல் கைவிட்டுச் சென்றான். அவள் நட்டஈடு கோரி வழக்கு வைத்தாள். அவன் அவளது கடுமையான எதிரியாக மாறினான்.

அவளது வாழ்வில் மேலும் சிக்கலானதொரு நிகழ்வு நடந்தது. கட்டுடலும் கருணையும் மிகுந்த இன்னொரு பொலீஸ் அதிகாரி, அவளைப் பற்றி வெளியாகியிருந்த கட்டுரையையும் படத்தையும் பார்த்ததாகக் கூறியபடி தேடி வந்திருந்தான். அவன் தெளிவாகவே அவளை எடைபோட்டான். அனீஷாவின் கனவை நனவாக்க அவசியமான சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிகளையும் செய்வதாகச் சொன்னான். அவளுக்காக அவன் தாராளமாகச் செலவு செய்தான். அவளது தேவைகளை நிறைவு செய்ய உதவினான். அதிக காலம் செல்வதற்கிடையில் அவன் மீதான நம்பிக்கை உறுதியானதால், அனீஷா அவனோடு சந்தோஷமாகக் காலம் கடத்தினாள்.

அனீஷா எதிர்பாராத நிகழ்வு நடந்தது. ஒருநாள் அவன் அவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தான். முதல் திருமணத்தில் ஏற்பட்ட தாக்கம் காரணமாக இன்னொரு திருமணம் செய்து கொள்வதில்லையென்ற முடிவில் அவளிருந்தாள். அதனால் பின்வாங்கிய பொலிஸ் அலுவலர், அவளது முன்னாள் கணவனோடு, அவளுக்குத் தொல்லை கொடுத்து அவளது வாழ்வை சீர்குலைக்கும் எண்ணத்தோடு ஒன்று சேர்ந்தான்.

அதற்கு சில நாட்களின் பின்பு அனீஷா தனது நண்பியான மேனகாவோடு ஒரு பயணம் சென்று வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். ஆறுபேர் கொண்ட பொலீஸ் குழுவொன்று அவர்களை இடைமறித்து மேனகாவைக் கைது செய்தனர். வீட்டுக்கும் வந்து தேடுதல் நடத்தினர். அன்று சமையல்காரப் பெண்ணின் மகனும் வீட்டிலிருந்தான். அவனையும் கைது செய்தனர். சிறிது நேரத்தில் மீண்டும் வந்து அனீஷாவுக்கு முச்சக்கர வண்டியில் பொலீஸுக்கு வருமாறும், வருகை தந்தால் தான் மேனகாவை விடுவிக்க முடியுமெனவும் தெரிவித்தனர். அனீஷா பொலீஸுக்குச் செல்லும் போது ஒரு பொலீஸ்காரி மேனகாவிடம் வாய்மொழி எடுப்பது தெரிந்தது. அனீஷா பொலிஸ் பொறுப்பதிகாரியின் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டாள்.

பொறுப்பதிகாரி கடுமையாகவும் மோசமான முறையிலும் அனீஷா தனது வீட்டில் விபச்சார விடுதி நடத்திக் செல்வதாகக் குற்றம் சுமத்தினார். நடுங்கியபடி அவள் அதனை ஆட்சேபித்தாள். அப்போது பலாத்காரமாக அவளது கையிலிருந்த கைப்பையை பறித்தெடுத்து, கைத்தொலைபேசி மற்றும் பொருட்களைப் பரிசோதித்தான் ஒரு பொலீஸ்காரன்.

அடுத்தநாள் மாலை வரையில் அனீஷாவுக்கும் மேனகாவுக்கும் பொலீஸ் வாங்கில் அமர்ந்திருக்குமாறு பொலிஸ் அதிகாரி கட்டளையிட்டார். அடுத்த நாள் அவளிடம் வாய்மொழி எடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழியில் அவள் சொன்னவையல்ல, பொலீஸாருக்குத் தேவையானவையே பதிவாகின. அதை வாசிக்க அவளுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. இருந்தும் பலாத்காரமாக அவளிடம் கையெழுத்தும் வாங்கப்பட்டது. நீதிபதியின் முன் ஆஜர் செய்யப்பட்டபோது, அனிஷாவும் மேனகாவும் சேர்ந்து விபச்சார விடுதி நடத்துவதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. குற்றச்சாட்டை ஆட்சேபித்த போது வைத்திய அறிக்கை கிடைக்கும் வரையில் இருவரும் ரிமாண்ட் செய்யப்பட்டனர். வைத்திய அறிக்கை கிடைத்ததும் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வுக்கு முன்பும் பொலீஸார்ள இருதடவை அனிஷாவுக்குத் தொல்லை கொடுத்தனர். அவளது பெயருக்கு மாசு ஏற்படுத்தும் விதமாக அவளோடு முன்னர் சம்பந்தப்பட்டிருந்த இரு பொலீஸ் அதிகாரிகளும் சேர்ந்து செய்யும் வேலை இதுவென அவள் அறிவாள். அனிஷாவுக்கு பொய்க் குற்றச்சாட்டின் பெயரில் மூன்று வழக்குகள் போடப்பட்டிருந்தன. பல பொலீஸ்காரர்கள் பொய்க் குற்றச்சாட்டுடன் மேலும் வழக்கு வைப்பதாக அச்சுறுத்தல் விடுத்தனர். போதைத் தூளோடு சம்பந்தப்படுத்தி வழக்கு வைப்பதாகவும் ஓர் பொலீஸ்காரன் கூறியிருந்தான்.

இப்படியான பொய்க் குற்றச்சாட்டுக்களால் தனக்கும் தனது குடும்பத்திற்கும் கடும் அபகீர்த்தியேற்பட்டிருப்பதாகவும், அதனால் தனது தொழில் வாய்ப்புக்களும் அற்றுப் போவதாகக் கூறும் அனிஷா, தனது மகனின் வாழ்க்கை பற்றியும் கடும் பயத்திற்கு ஆளாகியுள்ளாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. 'தமிழன்' என்ற அவலம்

பவானி ஜேசுதாஸ்ஃம் முத்தையா சிவகுமாரும் திருமணம் செய்து பம்பலப்பிட்டியில் கட்டப்பட்ட புது வீட்டில் தமது வாழ்க்கையை கடந்த டிசம்பரில் ஆரம்பித்தனர். இந்த இளம் தம்பதி தனியார் துறையில் உயர் பதவி வகித்தனர். பவானி நன்றாகச் சிங்களம் பேசக் கூடியவர். நிறையச் சிங்கள நண்பர்களோடு பழகிய போதும் இனரீதியான வேறுபாடே பயமாகவிருந்தது.

அன்று இரவு பதினொரு மணியளவில் வீட்டுக்கு முன்னால் முச்சக்கர வண்டியொன்று அங்குமிங்குமாகப் போவதை பவானி கண்டாள். சுற்றுச் சூழலில் பல களவுகள் நடந்ததால் அவளுக்கு சந்தேகமேற்பட்டது. அவள் மேல்மாடி யன்னலுக்கூடாகப் பார்த்தாள். வண்டி வீட்டுக்கருகே நிறுத்தப்பட்டிருந்ததோடு சாரதி அங்குமிங்குமாக யாரையோ தேடுவது தெரிந்தது.

"யாரையாவது தேடுகிறீர்களா?" என்று பவானி கேட்டாள்.

"நாங்கள் பொலீஸிலிருந்து வந்திருக்கிறோம். சுப்பிரமணியம் என்றொருவரைத் தேடுகிறோம்" என்றனர்.

"எந்தப் பொலீஸ்?" பவானி கேட்டாள்.

கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் "நீங்கள் சிங்களமா? தமிழா?" என்ற கேள்வி எழுப்பினான்.

"நாங்கள் தமிழ்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியா? உங்கள் அப்பாவின் பெயர் என்ன? முன்னர் எங்கே வாழ்ந்தீர்கள்?"

பவானி எல்லாக் கேள்விகளுக்கும் தயங்காமல் பதில் சொன்னாள்.

"வீட்டைச் சோதிக்க வேண்டும்" என்றனர்.

அதற்கு உடன்பட்ட பவானி முதலில் நாய்களைக் கூட்டுக்குள் இட்டாள். அதனால் முன் கேற்றைத் திறக்கச் சற்றுத் தாமதமாகியது.

பொலீஸார் இருவரும் கோபத்தோடு நிற்பது பவானிக்குத் தெரிந்தது. கேற்றைத் திறக்கத் தாமதித்ததற்காச் சத்தமிட்டனர். நாய்களைக் கண்டபோது, வீட்டில் மிருகங்களை வைத்திருப்பதையிட்டு குற்றம் சுமத்தினர்.

"எங்கள் செலவில் தான் நாய்கள் வளர்க்கிறோம். அதனால் யாருக்கும் தொல்லையில்லை" என்றாள் பவானி.

ஒரு அதிகாரி இருவரதும் அறிமுக அட்டைகளைக் கேட்டார். அதனைப் பார்த்துத் திருப்தியடையாத அவர்கள், பிறப்புச் சான்றிதழ்களையும் பார்க்க வேண்டுமென்றனர். சிவகுமாரின் பிறப்புச் சான்றிதழில் பிறந்த இடம் திருகோணமலை என்று காணப்பட்டதால் அவரிடம் கேள்விகளை அடுக்கிக் கொண்டு சென்றனர். இந்த மோசமான கேள்விகளைச் சகிக்க முடியாத பவானி, அவர்களின் பெயர்களைக் கேட்டாள். பொலீஸார் அவளுக்கு ஏசத் தொடங்கி அது வாய்த் தர்க்கமாக மாறியது. இருவரையும் பொலீஸுக்கு கொண்டு போவதாக எச்சரித்தனர்.

இதற்கிடையில் ஒரு பொலீஸ்காரன் நிலையப் பொறுப்பதிகாரியோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சந்தேகத்திற்கிடமான இருவர் இருப்பதாகவும், அவர்களை அழைத்து வர ஜீப்பை அனுப்புமாறு கேட்டுக் கொண்டனர்.

ஜீப் வண்டியில் வந்த பொலீஸாரும் வீட்டைச் சோதனையிட்டனர். அங்கு சந்கேத்திற்கிடமான எதுவும் காணப்படவில்லை. மூன்றாம் மாடிக்குச் சென்ற பொலீஸ் உத்தியோகத்தர் பதிரன, உதவிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பதிகாரி பண்டாரவை அழைத்து, அந்த மாடியிலிருந்து உயர் பாதுகாப்பு வலயத்திற்கு மோட்டார் தாக்குதல் நடத்த முடியுமா என்பது பற்றிக் கலந்துரையாடினார். அதன் பின்னர் அந்த இளம் சோடி பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

உதவிப் பொறுப்பதிகாரி இருவரதும் அறிமுக அட்டைகளை நிலையப் பொறுப்பதிகாரிக்குக் காட்டினார். பின்னர், இவர்களது வீடு உயர் பாதுகாப்பு வலயத்திற்கு தாக்குதல் தொடுக்கத்தக்க வகையில் அமைந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

பொறுப்பதிகாரி, பவானியிடம் "சிவகுமார் யார்?" என்று கேட்டார். "எனது கணவன்" என்று பவானி கூறினாள். அப்போது பண்டார குறுக்கிட்டு, "இல்லை அது பொய். இவர்கள் முறையற்ற உறவு வைத்துள்ளார்கள்" என்றார்.

பொலீஸ் உத்தியோகத்தர் பதிரன அவர்களை மோசடிப் பிரிவுக்கு இட்டுச் சென்று மென்மேலும் கேள்விக்குள்ளாக்கினார்.

"வீட்டு இலக்கம் பொய்யானது. வீட்டில் மூன்றுக்கு மேல் அறைகள் காணப்படுவதால் அதனை விபசார விடுதியாகப் பயன்படுத்தலாம். உயர் பாதுகாப்பு வலயத்தின் மீது பயங்கரவாதிகள் அண்மையில் தொடுத்த தாக்குதலுக்கு தகவல் வழங்கியமை. அவ்வாறு தாக்குதல் வழங்கக் கூடிய கோணத்தில் வீடு அமைக்கப்பட்டிருத்தல், எல்ரீரீயினருக்கு ஒத்துழைப்பு வழங்குதல், பிறர் உள்ளே புக முடியாதவகையில் நாய்கள் வளர்த்தல்..... பவானி போன்ற தமிழ்ப் பெண்களால் பொலீஸ் அதிகாரிகளுக்கு இரவில் கூடத் தூங்க முடியவில்லை"- இப்படியாக பலதரத்திலான குற்றச்சாட்டுக்களை பதிரன அடுக்கிக் சென்றார்.

ஒரு பெண் பொலீஸ் அதிகாரியே பவானியை விசாரித்தார். வீட்டின் பெறுமதி, தொழில் செய்யும் இடத்தின் முகவரி, பெற்றார்-குடும்பத்தவர் பற்றிய விபரம், பணக் கொடுக்கல்- வாங்கல், கல்வி கற்ற பாடசாலை, கணவனைச் சந்தித்த முறை...... இவ்வாறான விடயங்கள் அவரது கேள்விகளிலே இடம்பெற்றன.

சிவகுமாரிடமும் கேள்வி கேட்கப்பட்டது. சிவகுமாருக்கு நன்கு சிங்களம் தெரியாததால் வாக்கு மூலத்தைப் பதிவு செய்ய அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமெடுத்தது. அவரைப் பற்றி விபரங்களை பவானியிடம் திட்டித் தீர்த்தபடியே பதிரன கேட்டார். "இவர்கள் சொல்லும் எதையுமே நம்ப முடியாது. வழக்கு வைக்க வேண்டும்" என்றும் தெரிவித்தார்.

பொலீஸ் அதிகாரி பதிரன மோசமான, தகாதவிதமாகவே கதைத்ததாக பவானி தெரிவித்தாள். எழுத்துப் பிரதி ஒன்றில் கையொப்பமிட்டபின் வீட்டுக்குப் போகலாமென்று சொன்ன அவர், மறுநாள் வழக்குப் போடுவதாகவும் கூறினர். தான் இரகசிய பொலீஸ் உத்தியோகத்தரென்றும், இதற்கு முன்பும், தமிழர்களுக்கெதிராக இவ்வாறான வழக்குகள் முன்வைத்துள்ளதாகவும், ஐந்து வருடங்களுக்கு மேலாக இந்நிலையத்தில் வேலை செய்வதாகவும், தன்னால் முடியாதது எதுவுமில்லையென்றும் அவர் கூறியுள்ளார்.

"இந்நிகழ்வு தொடர்பாக பாதுகாப்புப் படைக்கு அறிவிப்பதாகக் கூறிய அவர், பவானி போன்ற பெண்களால் நாட்டுக்கே பெரிய தொல்லை என்றும், நீ தலை வீங்கிய அகங்காரம் பிடித்தவள், எங்களை மதிக்காத குணத்தால் தான் பொலீஸுக்குக் கொண்டு வந்தோம்." என்று மேலும் தெரிவித்தார்.

பொலீஸ் அதிகாரிகள் மோசமான வார்த்தைகள் பேசி மோசமாக நடாத்திய விதத்தை வேதனை மிகுந்த அனுபவமாகவே பவானியும் அவளது கணவனும் கருதுகின்றனர். இப்படியான அதிகாரிகள் அரச சேவைக்கே பொருத்தமானவர்களல்லர். தங்களைக் கைது செய்து, அடிப்படை உரிமைகளை மீறியதை இருவரும் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. திடீர் விபத்தும் வைத்திய சிகிச்சையும்

வருனி சாமான் வேண்டுவதற்காகக் கடைக்குச் சென்று கொண்டிருந்தாள். சட்ட விரோதமானபடி பிரயாணிகளை நிறைத்து வந்த வேனொன்று அவள் மீது மோதியது. அவள் தள்ளப்பட்டு நிலத்தில் விழுந்தாள். அவளது தலையும் கையொன்றும் கடுமையாகக் காயப்பட்டிருந்தது. அவள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். அஸித என்ற இளைஞனே வாகனத்தை ஓட்டி வந்தான்.

வருனியின் கணவனான ராஜா விபத்துப் பற்றி கேள்விப்பட்டு அது சம்பந்தமாக மேலும் அறிந்து கொள்வதற்காக பொலீஸ் வாகனப் போக்கு வரத்துப் பிரிவிற்குச் சென்றான். அஸிதவும் அவனது நண்பனொருவனும் பொலீஸ் அதிகாரிகளோடு கதைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

ராஜா பொலீஸ் அதிகாரியிடம் விபத்துப் பற்றி விசாரித்தபோது, அவர் மிகுந்த கடும்போக்கில் பதிலளித்ததுடன், விபத்தைக் காணாவிட்டால் முறைப்பாடு செய்யமுடியாதென்றார். அஸிதவை நெருங்கிய இன்னோர் பொலீஸ் அதிகாரி வருனியின் டிக்கட் வெட்டி வீட்டுக்கழைத்துச் செல்வது நல்லதென்றார்.

ராஜா வருனியின் கணவனென்பதை அறிந்திருக்கவில்லை.

"வருனியின் டிக்கட் ஏன் வெட்ட வேண்டும்?" என்று ராஜா கோபத்தோடு கேட்டான். அப்போது விபத்து நடைபெற்று நான்கு மணி நேரம் கூட ஆகவில்லை. வருனிக்கு தீவிர வைத்திய சிகிச்சை தேவைப்படும் நேரம்.

மனைவியைப் பார்க்க ராஜா வைத்தியசாலைக்குச் சென்ற போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாளி இன்னும் ரொலியிலேயே இருப்பதைக் கண்டான். இதுவரை எந்தச் சிகிச்சையும் நடைபெற்றிருக்கவில்லை. அவளால் பேச முடியவில்லை. அதிர்வுக்கு ஆளாகியிருந்தாள். தலையில் மூன்று காயங் கள் காணப்பட்டன. ராஜாவின் தாயும் வருனியோடிருந்தாள்.

அன்று மாலை மீண்டும் வைத்தியசாலைக்குச் சென்ற ராஜா இன்னுமே நோயாளிக்கு எந்தச் சிகிச்சையும் அளிக்கப்படவில்லை என்பதை அறிந்து கொண்டான். அவன் வோர்ட்டுக்குப் பொறுப்பான தாதியிடம் அதுபற்றிக் கேட்டான். அவள் பாய்ந்து விழுந்தாள்.

"என்னைத் திட்டிப் பிரயோசனமில்லை. மனைவிக்கு சிகிச்சை வேண்டும். மிகவும் மோசமான நிலையில் மனைவி இருக்கிறாள். பேசக் கூட முடியவில்லை. சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகும். எனது மனைவி நாட்டுக்கான போராட்டத்தில் உயிர்க் காணிக்கை செய்த ஒரு வீரனின் தாயென்ற வகையிலாவது அவளைக் கவனியுங்கள்"- என்று அவன் கெஞ்சி நின்றான்.

அப்பொழுது அந்த இதயமற்ற பெண் "வருனியின் அழுக்கடைந்த உடையைக் கொண்டு போய் உனது வீரப் புதல்வனுக்கு போர்த்திக் கொள்ளக் கொடு" என்றாள்.

அடுத்தநாள் ராஜா வைத்தியசாலைக்குச் சென்ற போது கூட, எந்தச் சிகிச்சையும் மேற் கொள்ளப்படாதது போக, உண்ணக் குடிக்கக் கூட எதுவுமே கொடுக்கப்படவில்லையென்பதை அறிந்து கொண்டான். மனைவியின் உயிர் பற்றிய பயம் அவனைத் தொற்றிக் கொண்டது.

நான்கு நாட்களுக்குப் பிறகே அவளுக்கு ஏதோ மருந்து செய்யப்பட்டது. அன்று மூன்று தடவை மருத்துவமனை சென்ற ராஜாவு க்கு, வழங்கப்பட்டுள்ள சிகிச்சை எந்தவகையிலும் போதுமானதல்ல என்பது விளங்கியது.

இரண்டு நாட்களின் பின்பு வைத்தியசாலை சென்றிருந்த ராஜாவைச் சந்திக்க அஸித வந்திருந்தான். வருனியின் டிக்கட் வெட்டப்பட்டுள்ள தாய் அவன் சொன்னான். நடந்து கொள்ள முடியாத, சிறுநீர் கழிக்க இயலாத அசாத்திய நிலையிலிருக்கும் நோயாளியை விடுவித்திருப்ப தையறிந்து ராஜா திடுக்கிட்டான். இதையிட்டு அவன் ஒரு தாதியிடம் விசாரித்த போது இதற்குப் பதில் சொல்லத்தான் கடமைப்பட்டிருக்க வில்லை என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிறகு ராஜா வோர்ட்டுக்கு பொறுப்பான டாக்டரின் அருகே சென்றான். ஒழுங்கு முறையில் நோயாளிகளை சோதித்துக் கொண்டு வந்த அவர் வருனியைப் பார்க்கவில்லை. வருனியின் டிக்கட் வெட்டப்பட்டுள்ளதா என்று டாக்டரிடம் கேட்டபோது, நோயாளியின் எக்ஸ்ரே பிரதியையும், டிக்கட் பைலயும் பார்த்து விட்டு, தெளிவற்ற விதமாக ஏதோ முணுமுணுத்துக் கொண்டு அடுத்த நோயாளியிடம் சென்றார். இதற்கிடையில் நோயாளியை வீட்டுக்கழைத்துச் சென்று, இரண்டொரு நாளின் பின்பு மீண்டும் அனுமதிக்குமாறு டாக்டர் கூறியதாக அஸித ராஜாவிடம் சொன்னான்.

எதிர்பார்ப்பு கலைந்து போன நிலையில் அன்று மாலை மூன்று மணியளவில் மனைவியை வீட்டுக்கழைத்துச் செல்ல எழுநூறு ரூபா கூலிக்கு வாகனமெடுத்துக் கொண்டு ராஜா வைத்திய சாலைக்குச் சென்றான். வோர்டுக்கு பொறுப்பான தாதி டிக்கட்டில் கையொப்பமிடுமாறு ராஜாவை வேண்டினாள். ராஜாவின் சந்தேகம் உறுதியாகியது. ஆம், டாக்டர் நோயாளியை வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கவில்லை யென்பதும் தெளிவாகியது.

"நோயாளியின் டிக்கட் வெட்டப்பட்டிருந்தால் என்னுடைய கையொப்பம் அவசியமில்லை" என்றான் ராஜா.

தாதி வைத்தியசாலைப் பொலீஸாரிடம் முறையிட்டாள். "அநீதி நடந்திருந்தால் நீங்கள் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கலாம். வைத்திய சாலையில் எந்தக் குழப்பமும் செய்ய வேண்டாம்" என்று பொலீஸார் ராஜாவுக்குத் தெரிவித்தனர்.

ராஜா பெரும் பிரச்சினைக்கு ஆளானான். மனைவியை வேறொரு வைத்தியசாலைக்கு எடுத்து சென்ற போது, முதலில் நின்ற வைத்தியசாலையிலேயே சிகிச்சை செய்யுமறு கூறினர். அங்குமிங்குமாக போக்குவரத்துக்கென்று நிறையச் செலவு செய்து விட்டான். என்ன செய்வது? தனியார் வைத்தியசாலைக்கு அழைத்தச் சென்றான். நோயாளியை பரிசோதித்த வைத்தியர்கள் நோயாளியின் நிலை மோசமாக உள்ளதால் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

இதற்கிடையில் அஸிதவின் வேன் பொலீஸாரால் விடுவிக்கப்பட்டுள் ளதாக ராஜா அறிந்தான். மோட்டார் போக்குவரத்துப் பரிசோதகர், வாகனத்தை சோதித்து விட்டு தனது விதப்புரையை தெரிவித்துள்ளதாக அறிந்து கொள்ள முடிந்தது. அது பற்றி ராஜா பொலீஸில் விசாரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சகர் சிபார்சு செய்துள்ளதாலும் நோயாளி வைத்தியசாலையிலிருந்து சென்றுள்ளதாலும் வாகனம் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

மோட்டார் வாகனப் பரிசோதகர் அஸிதவின் நண்பன் ஒருவனின் மாமா என்பதும், அஸிதவின் நெருங்கிய உறவினர் ஒருவர் வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றுவதாகவும் ராஜாவுக்கு தகவல் கிட்டியது. வருனிக்கு சிகிச்சையளிக்கத் தாமதித்ததும் அரைகுறையாக சிகிச்சையளிக்கப்பட்டதும் அவரை விரைவாக வைத்தியசாலையி லிருந்து வெளியேற்றுவதற்காகவே என்பது தெட்டத் தெளிவானது.

தான் 22ம் திகதி வைத்தியசாலைக்கு சென்றதாகவும் 25ம் திகதிவரை எந்தச் சிகிச்சையும் அளிக்கப்படவில்லையென வருனி வைத்தியசாலைப் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்தாள். தகுந்த சிகிச்சையை எதிர்பார்த்திருந்த வேளையில் பலாத்காரமாக தன்னை வெளியேற்றியதாகவும் வருனி மேலும் தெரிவித்தாள்.

பணத்துக்காகவும், உறவு முறைக்காகவும் பெறுமதியான உயிர்களோடு விளையாடலாமென்பதற்கு வருனியின் கதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

விபத்தின் பின் வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்ட வருனிக்கு எந்தச் சிகிச்சையும் ஒழுங்காக நடக்காத போதிலும், கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அவளுக்கு இரண்டு சத்திர சிகிச்சைகள் நடைபெற்றதாகத் தெரிய வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. குடியும் அடியும்

ரங்கபண்டாவுக்கு ஊரில் ஒரு சில்லறைக் கடை. அது வீட்டின் முன்பக்கத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ரங்பண்டாவின் மருமகன் முறையான சமன்தவும் அவ்வீட்டில் வாழ்ந்து வந்தான்.

கடையின் முன்னால் பலகை வாங்கொன்றிருந்தது. முன்னிரவில் இந்த வாங்கில் அமர்ந்தபடி கடைக்கு வருவோர் போவோருடன் பலதும் பத்தும் பேசிக் கொண்டிருப்பது சமன்தவின் பழக்கம்.

ஒருநாள் இரவு ஏழரை மணியளவில் வீட்டின் முன் முச்சக்கர வண்டியொன்று நிறுத்தப்படுவதை சமன் கண்டான். அதிலிருந்து இறங்கிய இருவர் அவன் முன்னே வந்து எதுவுமே கேளாமல் அவனை அடிக்கத் தொடங்கினர். பலதடவை முதுக்கு அடித்த அவர்கள் "ஓடு ஓடு" என்று சத்தமிட்டனர். நின்றால் இன்னும் அடி விழுமென்று நினைத்த சமன் ஓடிச் சென்று சிறிது நேரத்தில் மீண்டும் வந்தான். அப்போது ஊரின் இன்னுமிரு இளைஞர்களுக்கு அடிப்பது தெரிந்தது.

பதினெட்டு வயதான கமன்த தனது தாயோடு கடைக்குச் சென்று கொண்டிருந்தான். கமன்தவின் சகோதரி ரங்பண்டாவின் கடையில் வேலை செய்தாள். அவள் வீட்டுக்கு வரச் சுணங்கியதால் அது பற்றிப் பார்க்கவே கமன்தவும் தாயும் அப்பக்கமாக வந்தனர். கமன்த ரங்பண்டாவின் மற்றுமொரு மருமகன். அவர்கள் கடையருகே வரும் போது சமன்தவுக்கு அடித்த விதத்தைக் கண்ணுற்றனர். அடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த ஒருவனது கையில் தடியொன்றும் அடுத்தவனிடம் தோற்பட்டியொன்றும் காணப்பட்டது.

கமன்தவையும் தாயையும் கண்ட அவர்கள், "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டனர். "நாங்கள் கடைக்குப் போகிறோம்" என்று தாய் சொன்னாள். அதன் பின்னர் அவர்கள் தூசண வார்த்தைகள் பேசியதோடு நில்லாமல் கமன்தவுக்கு அடிக்க எத்தனித்தனர். இருந்தும் அவனது தாய் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

"இவ்விடத்தில் ஒன்றும் செய்ய முடியாது" என்ற ஒருவன் கமன்தவுக்கு கடையினுள்ளே செல்லும்படி கட்டளையிட்டான். அவன் கடைக்குப் போகும் போது, அவன் பின்னால் தாயைச் செல்ல விடாமல் அவர்கள் இடைமறித்தனர். கமன்தவின் பின்னால் சென்றவன் அவனது வயதைக் கேட்டான். அதற்கிடையில் அவனைத் தாக்க தொடங்கியவர்கள் "அம்மாவைப் பழிவாங்க முடியாததால் உன்னைப் பழி வாங்குகிறோம்" என்றனர். பின்னர் அம்மாவின் பக்கமாக அவனைத் தள்ளிவிட்டனர். தள்ளிய வேகம் காரணமாக அவனது கால் கல்லொன்றில் முட்டியது. இடக்கால் விரல் நகம் கழன்று இரத்தம் பெருகியது.

திரீவீலரில் வந்த இன்னொருவன அவ்விடத்துக்கு வந்தான். அவர்கள் கமன்தவை அந்த வண்டியில் போட்டுக் கொள்ள முயற்சித்தனர். தாய் அவனை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டதால் அவர்களின் நோக்கம் நிறைவேறவில்லை. அதனால் தாய்க்கும் மகனுக்கும் தூசண வார்த்தைகளால் பேசி "பொலீஸுக்கு ரிப்போட் எடுக்க வருவீங்கதானடா. அப்போது என்ன செய்ய வேண்டுமென்று எங்களுக்குத் தெரியும்"- என்று பயமுறுத்தினர்.

தாக்குதலுக்கு உள்ளான மூன்றாமவர் பிரசாத். அவனுக்கு வயது இருபத்திநான்கு. ஏதோ சாமான் வேண்ட கடைக்கு வந்தவன், சனம் சற்றுக் குறையும் வரை சற்று ஒதுங்கி நின்றான். சமன்தவுக்கு அடித்ததையும் விரட்டியதையும் அவன் கண்ணுற்றான். பிரசாத் ரங்பண்டாவிடம் நிகழ்ந்ததைச் சொன்னான். வெளியே வந்த ரங்பண்டா அப்பாவியாக நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அங்கு வந்த அந்தப் பொலீஸ்காரர்கள் "இங்கு என்ன செய்கிறாய்?" என்று பிரசாத்தைக் கேட்டனர். தான் கடைக்கு வந்ததாகக் கூறிய போது ஒருவன் அவனது கன்னத்தில் அறைந்தான். தொடர்ந்து கண்ணுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அடி விழுந்தது. கண் காயப்பட்டு கடும் வேதனையை பிரசாத் உணர்ந்தான்.

முச்சக்கர வண்டியில் வந்து ஊர் இளைஞர் மூவரைத் தாக்கியவர்கள் மது போதையில வந்த பொலீஸார் என்பதை எவரும் அறிவர். எதற்காக இவ்வாறு தாக்குகிறோமென்று அந்த இளைஞர்களிடம் எதுவும் கூறவில்லை.

இனம்தெரியாத பொலீஸ்காரர்களின் தாக்குதலால் மூன்று வாலிபர்களும் கடும் காயத்திற்குள்ளானார்கள். ஊரவர்கள் அவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். தங்களுக்கு பொலீஸ்காரர்கள் அடித்ததாக அவர்கள் டாக்டரிடம் கூறினர். மருத்துவமனைப் பொலீஸார் முறைப்பாட்டைப் பதிந்து கொண்டு, அவர்களை சட்டவைத்திய அதிகாரியின் பரிசீலனைக்கு உட்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32. ஊனமுற்றவனுக்குச் செய்த உதவி

கரையோரப் பகுதியான ஹிக்கடுவையைச் சேர்நத செம்ஸன் பிரனாந்து 'வெல்லேசனி' என்ற பெயரிலேயே பிரபல்யமாகியிருந்தான். எப்பொழுதும் கடற்கரையோரத்தில் காலம் கடத்தியதால் அவனுக்கு அந்தப் பெயர் வந்து வாய்த்தது. அவன் ஹிக்கடுவைப் பகுதி விடுதிகளில் தங்கும் இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலம் பெற்றிருந்தான். உல்லாசப் பயணிகளோடு கதைத்துச் சிரித்துப் பார்க்க வேண்டிய முக்கியமான கவர்ச்சியான இடங்களைப் பற்றி அறியக் கொடுப்பதே அவனது வேலையாகவிருந்தது.

பதின்மூன்று வருடத்திற்கு முன்பு அவன் ஊனமுற்றான. இப்பொழுது அவன் ஊன்றுகோலின் உதவியுடனேயே நடந்து திரிகிறான். ஆனால் அப்பிரதேசத்திலுள்ள சிறந்த உல்லாசப் பயண வழிகாட்டியாவதற்கு அந்த ஊனம் அவனுக்குத் தடையாக அமையவில்லை.

ஒரு மாலைப் பொழுதில் பின்லாந்தைச் சேர்ந்த இளம் உல்லாசப் பயணிகள் குழுவொன்று அவனுக்கு அறிமுகமாகியது. ஸனி அவர்களோடு அன்போடு கதைத்து பார்க்க வேண்டிய இடங்களை விபரித்தான். கண்டி சென்று தலதா மாளிகையைப் பார்ப்பதற்காக கெப் ரக வாகனமொன்றையும் ஏற்பாடு செய்து கொடுத்தான். நீளமுடி வளர்த்த அவனை நன்கு விளங்கிக் கொண்ட பின்லாந்தை சேர்ந்தவர்கள், அவர்களது சகபாடிப் பயணியொருவருக்கும் ஆலோசனை பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் நோக்கோடு அந்த கெஸ்ட் ஹவுஸின் மதுபானச்சாலைக்கு அவனை அழைத்தனர். பல பியர் சுற்றுக்களைக் கடந்த அவர்கள் உலோபத்தனமின்றி அவனுக்குப் பணம் கூடக் கொடுத்தனர். சற்று நேரத்தின் பின்பு, சுற்றுலா பொலீஸ் அதிகாரிகள் இருவர், மகிழ்ச்சிகரமான உல்லாசப் பயணிகள் குழுமீது கண் வைத்துக் கொண்டிருப்பதை ஸனீ கண்ணுற்றான். அவனை அழைத்த பொலீஸார் தங்களுக்கும் பியர் போத்தல் இரண்டும் சிகரட்டுகளும் தருமாறு கேட்டுக் கொண்டனர்.

இளைஞர் குழுவினரின் ஒன்றுகூடல் அதிகாலை ஒன்றரைவரை நீடித்தது. பின்லாந்தினர் சென்றபின் மதுபானச்சாலை மூடப்பட்டது. ஸனீ கடற்கரைப் பக்கமாகச் செல்ல நினைத்தான். அவன் சிகரட் புகைத்தபடி இருண்ட கடலில் வெண்ணிற அலைகள் நிலவொளியில் பிகாசிப்பதை பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவின் அமைதி அப்பக்கமாகப் பொலீஸ்காரர்கள் வந்தபோது சிதைந்து போனது. தனிமையில் இங்கிருந்து கொண்டு என்ன செய்கிறாய் என ஸனீயைக் கேட்டனர். தான் ஊனமுற்றவன் என்பதால் தனியே வீட்டுக்குப் போக முடியாது. எனவே முச்சக்கர வண்டியொன்று எடுத்து வருமாறு தம்பிக்கு தொலைபேசியில் சொல்லிவிட்டு அவன் வரும்வரை காத்திருப்பதாகத் தெரிவித்தான். உடனடியாக அவ்விடத்தைவிட்டு அகலுமாறு அவர்கள் கட்டளையிட்டனர். அவ்வளவு தூரம் தன்னால் நடந்து போக முடியாதென்று ஸனீ சொன்னபோது அது ஒரு வாதமாகப் பரிணமித்தது.

ஒரு பொலீஸ்காரன் ரி-56 ரக துப்பாக்கியால் அவனது தலைக்கு அடித்தான். அடுத்தவன் கைத்தடியால் இன்னொடு போடு போட்டான். ஊனமுற்ற ஸனீயால் எதுவுமே செய்து கொள்ள முடியவில்லை. மூவாயிரத்து எழுநூறு ரூபாவிருந்த அவனது பணப்பையையும் கெமரா ஃபோனையும் அவர்கள் பறித்துக் கொண்டனர். பொலீஸ் குறுந்தடியால் அடித்து அவனது ஊன்றுகோலையும் உடைத்துப் போட்டனர். அவனது தலையிலிருந்து இரத்தம் கொட்டியது. பொறுக்கமுடியாத வேதனையால் அவன் துன்புற்றான். அப்படியே கடற்கரையில் விழுந்து மயங்கிப் போனான்.

அதிகாலையிலேயே அவனுக்கு நினைவு மீண்டது. கெஸ்ட் ஹவுஸ் சேவகர்கள் அவனை இனம் கண்டு முகத்திற்கு தண்ணீர் தெளித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது தலை, முகமெல்லாம் இரத்தம் அப்பியிருந்ததோடு ஒரு கை வீங்கிப் போயிருந்தது. அப்போது விடிகாலை ஆறரை மணி. சூரியன் உதித்திருந்தது. ஸனீயால் எழும்புவது கஷ்டமாகவிருந்தது. சேவகர்களின் உதவியோடு அவன் தனது தம்பிக்கு தொலைபேசித் தகவல் கொடுத்தான்.

ஸனீயின் நிலைமையைப் பார்த்ததும் பொலீஸில் முறைப்பாடு செய்ய வேண்டுமென அவனது தாய் சொன்னாள். வைத்தியசாலைக்குச் சென்றபோது அவனை ஐந்தாம் வோர்டில் சேர்க்குமாறு சொன்னார். வோர்டுக்குச் சென்றதும் அவனது காயங்களுக்கு மருந்திட்ட சேவகன், விருப்பமென்றால் வீட்டுக்குப் போக முடியும் என்றான். ஸனீ வீட்டுக்குச் சென்றான்.

இரண்டு நாள் சென்றதும் நோய் நிலைமை மேலும் அதிகரித்ததால் மீண்டும் வைத்தியசாலை செல்ல நேர்ந்தது. அப்போது பதினோராம் வோர்டில் அனுமதித்தனர். தலையிலிருந்த வெடிப்புக்குப் பதினைந்து தையல் போடவேண்டுமென்பது டாக்டர்களின் முடிவாகவிருந்தது. ஐந்து நாட்களின் பின்பு அவன் வைத்தியசாலையிலிருந்து வெளியேறினான். ஸனீ வைத்தியசாலைப் பொலீஸில் முறைப்பாடு செய்தபோதும் அதை அவர்கள் பதிவு செய்யவில்லை. அவனிடமிருந்து கையொப்பமொன்று கூடப் பெறவில்லை.

**ஒரு மனிதனை அடித்து கடற்கரையில் விட்டுச் செல்வதற்கு பொலீஸாருக்கு உரிமையுண்டா? தவறு செய்திருந்தால், அதை எடுத்துக்காட்டி சட்டத்தின் முன் ஏன் கொண்டு செல்லவில்லை? வைத்தியசாலைச் சேவகன், காயங்களுக்கு மருந்திட்டபின் விரும்பினால் வீடு செல்லலாம் என்று ஏன் சொன்னான்? மீண்டும் வைத்தியசாலைக்கு வருகை தந்து பதினான்கு கட்டுப் போடுமளவுக்கு கடுமையாகக் காயப்பட்டிருக்கும் போதல்லவா அச்சேவகன் அப்படிச் சொன்னான்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33. புத்தாண்டு பூத்தது

அது மார்கழி- 31ம் நாள் இரவு. பிறக்கப் போகும் புதுவருடத்தை நல்ல முறையில் கொண்டாடுவதற்காக வசதி படைத்தவர்களால் கொழும்பு ஹோட்டல்கள் மெல்ல மெல்ல நிறைந்தன. புது வருடத்திற்கு வாழ்த்துத் தெரிவிக்க சிலர் பள்ளிவாசல், பன்சாலையென்றும் சென்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் வாழும் தமித் அன்றுதான் வேலை செய்யும் லொறியை கழுவிக் கொண்டிருந்தான். புதுவருடத்தின் முதல் நாளில் தான் சம்பாதிக்கும் லொறியை நல்ல முறையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று அவன் நினைத்தான். அவன் சாரதியாக வேலை செய்யும் அந்த லொறி அவனது மாமிக்குச் சொந்தமானது. அந்த லொறியில் மண் கொண்டு வருவான். தனக்கும் தனது குடும்பத்திற்கும் இந்த வருடத்தை விடப் புது வருடம் சிறப்பாக அமைய வேண்டுமென அவன் லொறியைப் பாதுகாத்தான். லொறி வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்தது.

இரவுச் சாப்பாட்டின் பின் அடுத்தநாள் பாற்சோறு தயாரிக்கும் முன்னேற்பாடுகளைச் செய்ய அவனது மனைவி சமையலறைக்குச் சென்றாள். வாசலில் போடப்பட்டிருந்த மெத்தையின் மீது குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. குடும்பத்தில் ஏனையவர்கள் தொலைக் காட்சியில் சங்கீத நிகழ்ச்சியொன்றை ரசித்துக் கொண்டிருந்தனர்.

நள்ளிரவு பன்னிரண்டு மணி. 2008 உதயமாகிவிட்டதை பட்டாசுகள் வெடித்து இரவின் அமைதியைப் பூச்சியமாக்கியது.

பொலீஸ் உத்தியோகத்தர்கள் சிலர் தனது லொறிப் பக்கமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதை தமித் அவதானித்தான். அவர்கள் சாதாரண உடையில் காணப்பட்டனர். சாரதி அனுமதிபத்திரம், காப்புறுதிப் பத்திரம், மண் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் என்பவற்றை பரீட்சிக்க வேண்டுமென்று அவர்கள் கூறினர். தமித் அவை அனைத்தையும் காண் பித்தான். வனசிங்ஹ என்ற பொலீஸ்காரன் லொறியில் ஏறி, தமக்கி டையே பகிர்ந்து கொள்வதற்காக ஐயாயிரம் ரூபா வேண்டுமென்றான். "நாளைக்கு புது வருடமல்லவா" என்றொரு நையாண்டியும் விட்டான்.

பண்ணையிலிருந்த சில நூறு ரூபா நோட்டுக்களைக் காட்டி, தன்னிடம் அந்தளவு பணமில்லையென்று தெரிவித்தான். அதனால் கோபமுற்ற பொலீஸ் உத்தியோகத்தர் அவனது காதில் அறைந்ததோடு, மண் அனுமதிப்பத்திரத்தைப் பறித்து அவனது பையில் போட்டுக் கொண்டான். ஐயாயிரம் ரூபா தராவிட்டால், அதனைத் தருவதில்லையென்றும் எச்சரித் தான். அப்போது அடுத்த பொலீஸ் அலுவலரும் அவனை அடிக்கத் தொடங்கினான். ஊர்காவல் வீரரான அனுர தனது ரி- 56 துப்பாக்கியால் பலதடவை தமித்தின் வயிற்றில் குத்தினான். அருகேயிருந்த இரும்புக் கதிரையொன்றைத் தூக்கிய வனசிங்ஹ அதனால் அடிக்கத் தொடங்கினான். தமித் சுயநினைவிழந்து நிலத்தில் விழும் வரை அவர்களது மிருகத்தனமான குரூர தாக்குதல் தொடர்ந்தது.

வெளியே கேட்ட குழப்ப நிலையால் வீட்டினுள்ளிருந்து ருவனும் சதுனும் வெளியே வந்தனர். ருவன் தமித்தின் மச்சான். சதுன் வீட்டில் தங்கியிருந்த ஒரு நண்பன். தமிந்த வைத் தாக்குவதை தடுப்பதற்கு அவர்கள் முயற்சித்த போது பொலீஸ்காரர்கள் அவர்களுக்கும் அடிக்கத் தொடங்கினர்.

நிறையப் பேர் அங்கு ஒன்று சேர்ந்தனர். உணர்விழந்து விழுந்து கிடக்கும் தமித்தை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முயற்சித்த போது பொலீஸார் அதற்கு இடம் கொடுக்கவில்லை. சம்பவத்தை கேள்வியுற்ற பொலிஸ் நிலைய அதிபர் அங்கு வந்தார். தமித்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல அப்போது முடிந்தது. காயம், கீறல், தகர்வெல்லாம் கடுமையாகக் காணப்பட்டன. அதனால் கிராமத்து வைத்தியசாலையில் அவனைப் பொறுப்பேற்கவில்லை. வேறொரு வைத்தியசாலையிலேயே அனுமதித்தனர்.

பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற ருவன் பலாத்காரமாகப் பறித்த மண் கொண்டு செல்லும் அனுமதிப் பத்திரத்தை எடுத்து வந்தான்.

பிரகாசம் மிகுந்த சௌபாக்கியமான புத்தாண்டை நாடி நின்ற தமித், புத் தாண்டின் ஆரம்ப நாட்களை வைத்தியசாலையிலேயே கழிக்க நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34. தலையைக் கருங்கல்லில் அடித்தல்

ஜோசப் சில்வெஸ்டர் நாற்பது வயதில் காலமானார். மூத்தமகன் ஜானகவுக்கு குடும்பத்தைத் தலையில் சுமக்க வேண்டிய நிலையேற்பட்டது. ஜோஸப் ஒரு பிரபலமான மேசன்பாஸ். அவன் பல கொந்தராத்துக்காரர்களுடனும் பாஸ்மாருடனும் வேலை செய்துள்ளதால் பதினெட்டு வயதான ஜானகவுக்கு தொழில் பெற்றுக் கொள்வது பிரச்சினையாக அமையவில்லை. மேசன் வேலைக்கு அவன் புதியவனான போதிலும், பெரிய வேலைகள் செய்யவும் நள்ளிரவு வரை வேலை செய்யக் கூடிய வல்லமை இருந்ததாலும் அவனைக் கைவேலைக் காரனாய் சேர்த்துக் கொள்ள கொந்தராத்துக்காரர்கள் பின்வாங்க வில்லை.

கடும் வேலைகளிலிருந்த நாளொன்றில், ஜானக வேலை முடிந்து சமரசிங்ஹ என்ற கொந்தராத்துக்காரனுடனும் இன்னும் பல தொழிலாளர்களோடு வீட்டுக்குச் சென்றான். அப்பொழுது அதிகாலை ஒன்றரை மணி. மொரட்டுவையில் நிர்மாணத்தலமொன்றில் கொங்கிரீட் போடுவதற்கான இரும்பு கட்டும் வேலையை முடித்துவிட்டு அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.

பொலீஸ்காரனொருவன் அவர்களை நிறுத்தி அறிமுக அட்டையை பரீட்சித்தான். அப்பொழுது ஜானகவை அவனால் இனம் கண்டு கொள்ள முடிந்தது. ஜானக அமரசேகர பாஸுடன் அந்தப் பொலீஸ்காரன் வீட்டில் கொங்ரீட் வேலை செய்துள்ளான். வேலை முடிந்திருந்தாலும் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில குறைபாடுகளிருந்தன. அவசியமான அடுத்த வேலைகளை முடித்துக் கொள்ள அமரசேகர பாஸைத் தேடிக் கொண்டிருந்தபோதுதான் ஜானகவை சந்தித்தான்.

"ஆ........ உன்னைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தேன். நாளை காலை ஒன்பது மணிக்கு பொலீஸுக் வா" என்றவாறு பொலீஸ்காரன் ஜானகவின் அறிமுக அட்டையைத் தனது பையுள் போட்டுக் கொண்டான்.

அடுத்தநாள் ஜானக தனது தாயோடும் மாமாவோடும் பொலீஸுக்குச் சென்றான். பொலீஸ்காரன் அவர்களை ஏசி விரட்டிவிட்டான். "அமரசேகர பாஸுடன் வா" என்றும் கூறினான். அமரசேகர இருக்குமிடம் தனக்குத் தெரியாதென்று ஜானக சொன்னான். ஆனாலும் அவனுக்கு அறிமுக அட்டை கிட்டவில்லை.

ஜானக உடனடியாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் சென்று நிகழ்வையிட்டு முறைப்பாடு செய்தான். மனித உரிமை ஆணைக்குழு, தேசிய பொலீஸ் கமிஷன், பொலிஸ் மா அதிபர் அலுவலகம் என்பவற்றுக்கு எழுத்து மூலமான முறைப்பாட்டைத் தபால் செய்தான். பொலீஸ் அலுவலர் தனது அறிமுக அட்டையைப் பறித்துக் கொண்டு தனக்குத் தொல்லை தருவதாகவும், தன்னைப் பழிவாங்க முயற்சிப்பதாகவும் அறிமுக அட்டை இல்லாததால் தான் இக்கட்டான நிலைக்கு ஆளாகியிருப்பதாகவும், அவன் தனது முறைப்பாடட்டில் குறிப்பிட்டுள்ளான். பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் செய்த முறைப்பாட்டிற்கமைய விசாரணைக்கு வருமாறு அங்கு அழைக்கப்பட்ட தோடு, அங்கு ஜானகவினதும் சம்பவத்தை நேரில் கண்ட சேவகர்கள் இருவரதும் வாய்மொழியும் பதிவு செய்யப்பட்டது.

அறிமுக அட்டை மீண்டும் கிடைக்கும் வரை ஜானக வழிபார்த்திருந் தான். பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு ஜானக மீண்டும் சம்பவத்தை விபரித்து, இதுவரை அறிமுக அட்டை கிடைக்காமையையும் குறிப்பிட்டு மனித உரிமை ஆணைக்குழு, தேசிய பொலீஸ் கமிஷன், பொலீஸ்மா அதிபர் அலுவலகம் என்பவற்றுக்கு எழுத்து மூல முறைப்பாட்டை முன்வைத்தான்.

இருபத்திநான்கு நாட்களின் பின்பு ஜானகவுக்கு பொலீஸ்நிலையத் திற்கு வருமாறு தகவல் கிடைத்தது. ஜானகவுக்குப் பதிலாக அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் சென்றாா். அவளுக்கு அறிமுக அட்டையைக் கொடுத்த பொலீஸ்காரன், முறைப்பாட்டை வாபாஸ் வாங்குமாறும் பொலீஸாரோடு முட்டுவது கருங்கல்லில் தலையை அடித்துக் கொள்வது போன்ற விடயமாகும் என்றும் தெரிவித்ததோடு, அவளுக்கு நெசவாலையொன்றில் தொழில் பெற்றுத்தர முடியும் என்றும் தெரிவித்தான்.

இது அதிகாரத்தைப் பிழையாகப் பயன்படுத்தித் தொல்லை கொடுத்தல் சம்பந்தமான இன்னொரு கதையாகும். சட்ட விரோதமான முறையில் டிசம்பர் ஏழாந் திகதி பறித்த அடையாள அட்டையை மீண்டும் இருபத்திநான்கு நாட்களின் பின்பே கொடுத்தனர். அந்நாட்களில் ஜானக வேலைக்குப் போகாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான். நடைமுறையிலுள்ள பாதுகாப்புச் சூழலில் ஒவ்வொருவரும் தம்வசம் அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும். பிரதான பாதையிலும் ஏனைய இடங்களிலும் பரீட்சிப்பு நிலையங்கள் உண்டு. அடையாள அட்டை இல்லாமை உடனடி சந்தேகத்துக்கு காரணமாவதோடு அநாவசிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவும் ஏதுவாகின்றது.


## ஜனசங்சதய

உங்களுக்கு உதவ நாம் எப்போதும் தயார் நிலையில் உள்ளோம்.

❋
❋
❋

**தொடர்பு:**

தொலைபேசி :-0382235191
பெக்ஸ் :-0382235191
ஈமெயில் :-manava@sltnet.lk.
முகவரி :-81/2, ஆதர் வி தியெஸ்
மாவத்தை
பாணந்துறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35. மாடுகளை விடுதலை செய்த 'புண்ணியம்' பொலீஸாருக்கு

கொல்லப்படவிருக்கும் மாடுகளை பணம் கொடுத்துக் காப்பாற்று வது மிகுந்த புண்ணியம் சேர்க்கும் விடயமாகக் கருதப்படுகிறது. அப்படிக் காப்பாற்றப்படும் மாடுகளை வளர்க்க விரும்புபவர்களுக்கு அவை இலவசமாக வழங்கப்படும். கிராமத்தவர்களுக்குக் கொடுப்பதற்காக அத்தகைய மாடுகளை பௌத்த விகாரைகளுக்கு பொறுப்பளிக்கின்ற சந்தர்ப்பங்களுமுண்டு.

எங்கள் கதைக்கு அடிப்படையாக அமைவது அவ்வாறு கிராமங்க ளுக்கு மாடுகளை பகிர்ந்தளிக்கின்ற ஒரு கொழும்பு விகாரையே. விகா ரையால் எடுக்கப்படும் மாடுகள் அனுமதிப்பத்திரத்தோடு கொண்டு செல்லப்படுவதில்லை. விகாரையின் கடிதத் தலைப்பில் விகாராதிபதி கையொப்பமிட்டுக் கொடுக்கும் கடிதமே அனுமதிப் பத்திரமாகப் பயன்படுத்தப்படுகிறது.

வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த கிராமிய விகாராதிபதி ஒருவர், பகிர்ந்தளிப்பதற்காக இருபத்தைந்து மாடுகளை கொழும்பு விகாரையொன்றிலிருந்து பெற்றுக் கொண்டார். கடந்த ஒரு வருடமாக அந்தப் புண்ணிய கருமத்திற்காக நிறையப் பங்களிப்புச் செய்ததாக கிராம விகாரைப் பெரியசுவாமி சொன்னார். இருபத்தைந்து மாடுகளில் பதினைந்தை தமது கிராமத்தில் பகிரும் பொறுப்பு ஜோஸப், பியதாஸ ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்தது.

கொழும்பு விகாரைச் சுவாமியிடமிருந்து பெற்ற கடிதத்தோடு மாடு களை லொறியொன்றில் கொண்டு சென்றனர். மாடுகளை வைத்திருக்க அவர்கள் இருவரிடமுமே வசதியிருக்கவில்லை. அதிகாலை இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியளவில் அவர்கள் காதரின் வீட்டைத் தட்டினர். அடுத்தநாள் பகிரப்படவுள்ளதால் அதுவரையில் சிலமணி நேரங்கள் காதரின் இடத்தில் கட்டி வைக்க அனுமதி கோரினர். விகாரை தேரரின் அனுசரணையோடு மாடுகள் அங்கு கட்டப்பட்டன.

அதிகாலை மூன்று மணியளவில் காதரின் வீட்டுக்கு லொறிச் சாரதியோடு, பொலீஸார் வந்திருந்தனர். மாடுகள் எவ்வாறு வந்தன என்பதை விபரித்த காதர், பியதாஸ, மற்றும் ஜோஸப் ஆகியோருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மாடுகள் பற்றி பொலீஸார் விசாரிப்பதாகத் தெரிவித்தான். இருவரும் சற்று நேரத்தில் அங்கே வந்தனர். லொறியைக் காதரின் வீட்டுக் கொண்டு வந்து அதில் மாடுகளை ஏற்றுமாறு பொலீஸார் கட்டளையிட்டனர். மாடுகளை ஏற்றியபின் பொலீஸார் ஜோஸப், பியதாஸ, காதர் ஆகியோரைக் கண்டித்தபடி அடிக்கத் தொடங்கினர். மாடுகளை இறைச்சிக்காகவே கொண்டு வந்ததாக பொலீஸார் குற்றம் சுமத்தினர். உடனடியாக மூவரையும் பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர். மாடுகளை பொலீஸ் பாதுகாப்பின் கீழ் கட்டி வைத்தனர்.

காதரின் கூற்றுப்படி அவனை விடுவிக்க ஐம்பதினாயிரம் இலஞ்சம் கோரியுள்ளனர். பொலீஸாரோடு கலந்து பேசி இருபத்தையாயிரத்திற்கு இணங்கி காதரை விடுவித்துள்ளனர். அடுத்த இருவருக்கும் பொலீஸ் கூட்டில் இருக்க நேர்ந்தது. நிகழ்வை அறிந்த விகாராதிபதி, என்ன நடந்துள்ளதென்று பார்ப்பதற்காக பொலீஸுக்குச் சென்றார். அவருக்கும் கூட்டுக்குள் நிற்கவேண்டி நேர்ந்தது. கூட்டுக்குள் நிற்கும் போதே ஐம்பதினாயிரம் லஞ்சம் கோரி அது நிராகரிக்கப்பட்டது. தான் கொடுக்காத வாய்மொழிக்கு கையெழுத்திடுமாறு கட்டளையிட்டதாக வும், அதில் என்ன பதிவாகியுள்ளதென தனக்குத் தெரியாதென்றும் தேரர் தெரிவித்தார். பியதாஸ, ஜோஸப் ஆகியோருக்கும் கூட தாம் சொல்லாத வாய் மொழியின் பேரில் கையெழுத்திட நேர்ந்தது. அன்று பகல் மூவரும் நீதிவான் முன்நிலையில் ஆஜர் செய்யப்பட்டு பதினொரு நாட்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டனர்.

**தாம் லஞ்சம் கொடுக்காததால் பொய்க் குற்றச் சாட்டு சோடித்து நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதாக அவர்கள் கூறுகிறார்கள்.**

**கைலஞ்சம், மோசடி என்பன இலங்கையில் ஆட்சி செய்கிறது. அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து பணம் பண்ணுவது தொடர்பான இன்னொரு கதையிது. இலங்கை லஞ்ச ஊழல் சட்டத் தின் கீழ் இது கடுமையான குற்றமாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36. சிறுமியை 'வல்லுறவு' செய்த பாடசாலை

பதினோராம் தரத்தில் கல்வி பயிலும் பதின்மூன்று வயதான விதீஷா, மாணவரான உதயங்கவை விரும்பினாள். அருகேயுள்ள கிராமத்தைச் சேர்ந்த உதயங்க பஸ்ஸில் பள்ளிக்கூடம் சென்றான். பஸ்ஸிலிருந்து இறங்கி விதீஷாவின் வீட்டு முன்னாலேயே பள்ளிக்கூடம் போக வேண்டும். விதீஷா எப்பொழுதுமே பஸ்ஸிலிருந்து இறங்கிவரும் மாணவ மாணவிகளோடு தான் பள்ளிக்கூடம் செல்வாள்.

ஒருநாள் அவன் ஏனைய பிள்ளைகளோடு சேர்ந்து பகிடிவிட்டபடி விதீஷாவின் அருகால் சென்றான். அவன் விளையாட்டுக்காக அவளது கொண்டைப் பின்னலை இழுத்தான். அன்று முதல் அவள் உதயங்கவைக் காண மிகுந்த ஆசைப்பட்டாள். பல சந்தர்ப்பங்களில் இடையில் பாழதடைந்த பகுதிகளில் அவனோடு இனிமையாகக் கதைத்தாள். ஒருநாள் இருவரும் பாழடைந்த பகுதியில் கதைத்துக் கொண்டிருப்பதை மாணவ, மாணவிகள் கண்டனர்.

அடுத்தநாள் விதீஷா ஆசிரியர் அறைக்கு அழைக்கப்பட்டாள். பல ஆசிரியர்கள் அங்கே நின்றனர். எல்லோரும் அவளைச் சுற்றிக் கொண்டு பயமூட்ட முயன்றனர். உதயங்கவுடனான தொடர்பு சம்பந்தமாகப் பல்வேறு கேள்விகளைக் கேட்டனர். உதயங்கவோடு காதல் தொடர்பு கொண்டுள்ளது சம்பந்தமாக அவள் மீது குற்றம் சுமத்தினர். அவள் நடுங்கத் தொடங்கினாள். எல்லோரும் ஒரே நேரத்தில் ஏதேதோ கேட்டனர். பெரும்பாலான கேள்விகள் என்னவென்றே அவளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கவில்லை. இதற்கு முன் அவள் என்றுமே அறியாத சில சொற்களை அவர்கள் கையாண்டனர்.

உதயங்கவினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்பட்டாளோ என்றும் அவளிடம் கேட்கப்பட்டுள்ளது. நாளெண்ணிப் பார்த்து விட்டு வயிற்றில் குழந்தையா? என்றும் கேட்டுள்ளனர். அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. உதயங்கவினால் உடலுறவுக்குட் படுத்தப்பட்டு இப்பொழுது பிள்ளை தரித்துள்ளதென்று சொல்ல வற்புறுத்துவது போல் அவளுக்குத் தெரிந்தது.

அவர்களுக்கு முக்கியமானவற்றைக் கேட்டுக் கொண்டபின், அவர்களிடையே ஒருவித மகிழ்ச்சிப் பாங்கு வெளிப்பட்டது. அவளைச் சூழ்ந்திருந்த குழப்பமான சூழல் மெல்லக் கலைந்து சென்றது.

“இனி என்ன செய்வதென்று தர்மரத்ன ஸேரிடம் கேட்போம்” பத்மா மற்றும் உதயங்கா ஆசிரியைகள் அறையிலிருந்து வெளியே சென்றனர்.

விதீஷாவின் மீதான தொல்லைகள் மீண்டும் அவர்கள் வந்தபின் ஆரம்பமாகியது. உதயங்கவோடு ஏற்பட்ட தொடர்பையும் நடைபெற்ற சம்பவத்தையும் எழுதித் தருமாறு அவர்கள் அவளை வற்புறுத்த ஆரம்பித்தனர். தான் வல்லுறவுக்கு ஆளாகி கர்ப்பம் தரித்துள்ளதாக எழுத வற்புறுத்தியமையால் அந்த பதின்மூன்று வயதுச் சிறுமி கலவரத்துக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளானாள்.

வற்புறுத்தி எழுதுவித்த பிரதியுடன் அவளை மனையியல் ஆசிரியை, மனையியல் அறைக்கு அழைத்துச் சென்றார். இன்னொரு சாரார் முன்னிலையில் தொல்லை மீண்டும் ஆரம்பித்தது. அதிபர், வகுப்பாசிரியை, இன்னும் இரு ஆசிரியர்கள், மேலுமொருவர் ஆகியோரோடு உதயங்கவும் அங்கு காணப்பட்டான். நாமினி மற்றும் நிகால் ஆசிரியர்கள் அசாதாரணமான கேள்விகளை எழுப்பி பிள்ளையைக் குழப்பத்தில் ஆழ்த்தினர். அவளை அவமதிப்பதே அந்தப் பெரியவர்களின் ஒரே நோக்கமாக வெளிப்பட்டது. கேட்கப்பட்ட கேள்விகளில் அதிகமானவை அவளுக்கு விளங்கவில்லை. பாடசாலை விட்ட பின்பும் பதினைந்து நிமிடமளவில் கேள்வி கேட்கப்பட்டது. அடுத்தநாள் பாடசாலைக்குத் தாயோடு வருமாறும் கூறினர்.

அடுத்தநாள் தனது தாயோடு அவள் பாடசாலைக்குச் சென்றாள். மனையியல் பாட அறைக்கு அவர்கள் அழைக்கப்பட்டனர். ஆசிரியர்கள் அங்கு நிறைந்திருந்தனர். விதீஷா உதயங்கவுடன் காதல் தொடர்பு வைத்திருந்ததாகவும், அவள் கெட்ட நடத்தைக்கு உட்படுத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பம் தரித்திருப்பதாகவும் தர்மரத்ன ஆசிரியர் விதீஷாவின் தாய்க்குத் தெரிவித்தார்.

"டாக்டருக்கு காட்டவும், சிறுவர் மற்றும் பெண்கள் செயலணிக்கு அறிவிக்கவும்" என்று அவர் ஆலோசனை வழங்கினார். "என்ன செய்தாலும் சொன்னாலும் பாடசாலையின் நல்ல பெயரை மாத்திரம் இல்லாமல் செய்ய வேண்டாம்" அதிபர் கூறினார்.

பின்னர் அதிபரும், தர்மரத்ன ஸேரும் ஒரே குரலில் "விதீஷாவைத் தொடர்ந்தும் இப்பாடசாலையில் வைத்திருக்க முடியாததால் வேறு பாடசாலையொன்று தேடிக் கொள்ளவும்"என்றனர். அதன் பின்னர் புத்தகமொன்றில் ஏதோ எழுதியிருந்ததன் கீழ் கையொப்பமிடுமாறு விதீஷாவின் அம்மாவைக் கேட்டனர். அது அவளுக்கு வாசித்துக் காட்டப்படவில்லை. அதில் என்ன உள்ளதென்று சொல்லவுமில்லை. ஆசிரியர் குழாமின் முன்னிலையில் குழம்பிப் போன அவள் அதில் கையொப்பமிட்டாள்.

சொல்லப்பட்ட ஆலோசனைக்கமைய அவள் சிறுவர் மற்றும் பெண்கள் செயலணியில் முறைப்பாடு செய்தாள். பெண் பொலீஸாரின் உதவியோடு சிறுமி பல வைத்தியப் பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாள். அழுது புலம்பிக் கொண்டிருந்த தாயையும் மகளையும் பார்த்து "பிள்ளை கெடுக்கபடவுமில்லை, கர்ப்பம் தரிக்கவுமில்லை" என்று டாக்டர் தெரிவித்தார்.

வருட இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அச்சிறுமி அடுத்தவாரம் பாடசாலைக்குச் சென்றாள். அது என்றும் மறக்க முடியாத தினம் என்று விதீஷா சொல்கிறாள். அவள் வகுப்பறைக்குள் நுழைவதைக் கண்ட அதிபர் அம்மணி, அந்த இடத்திற்கு வந்து அவளை அங்கிருந்து விரட்டியதோடு மீண்டும் ஒருநாளும் இந்தப் பாடசாலைப் பக்கம் வரக் கூடாதென்று சத்தமிட்டாள்.

அடுத்தநாள் விதீஷாவின் பெற்றோர் அதிபரைச் சந்தித்து தமது மகளுக்கு பாடசாலையில் கல்வியைத் தொடர வாய்ப்பு வழங்குமாறு கெஞ்சிக் கேட்டனர். அகங்காரம் பிடித்த அதிபர், பெற்றோரின் ஒப்புதலின்றியே, அச்சிறுமியின கல்வி கற்கும் உரிமையைப் பறித்து அவளது விடுகைப் பத்திரத்தைக் கையளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37. தவறு....?

சுபுன் வேலை முடிந்து மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தான். அப்போது இரவு ஒன்பது மணியிருக்கும். இடையில் ஒரு போத்தல் பியர் பருகிய அவன் கொத்துரொட்டி வாங்குவதற்காக ஹோட்டலொன்றுக்குச் சென்றான்.

அங்கு இரண்டு பொலீஸ் உத்தியோகத்தர்கள் கதைத்துக் கொண்டிருப்பதை சுபுன் கண்டான். அவர்களில் ஒருவன் மடவல என்பதை அவன் இனம் கண்டான். மடவல சுபுனுடன் கோபம் கொண்டிருந்தான். கொஞ்ச காலத்திற்கு முன்பு ஏற்பட்ட சம்பவம் காரணமாக அந்த இடைவெளி ஏற்பட்டிருந்தது. ஒரு பயணம் செல்வதற்காக மடவல, சுபுனிடம் சைக்கிளைக் கேட்டான். அந்த மோட்டார் சைக்கிளில் தான் வேலை செய்யும் நிறுவனத்திற்குச் சொந்தமானபடியால் இன்னொரு வருக்குக் கொடுப்பது முறையானதில்ல என்றான்.

“ஆ.... அப்படியா......? உனக்கும் எங்களைத் தேவைப்படும் நேரம் வரும்” என்று மடவல எச்சரித்தான். அன்று முதல் அவன் தனது நல்ல முகத்தைக் காட்டவேயில்லை. சுபுன் முடிந்த அளவு அவனைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்தான்.

ஹோட்டலில் சுபுனைக் கண்டு ஒரு பக்கமாக அழைத்த மடவல ஏதா வது மதுபானம் பருகிநீயா என்று சிநேகபூர்வமாகக் கேட்டான். பியர் போத்தல் மாத்திரம் பாவித்ததாக அவன் சொன்னபோது, “அது எங்களுக்குப் போதும்” என்று வெற்றித் தோரணையில் மடவல சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் களைப்போடு வீடு செல்வதாகவும், தன்னால் எந்தத் தவறும் நடக்கவில்லை என்றும் எந்தத் தொல்லையும் தர வேண்டாமென்றும் சுபுன் எவ்வளவோ வேண்டுதல் செய்தும் மடவல அதை ஏற்றுக் கொள்ளவில்லை. போதாக்குறைக்கு கன்னங்களுக்கு மாறிமாறி அறைந்தான். தான் எந்தத் தவறும் செய்யாததால் அடிக்க வேண்டா மென்று சுபுன் மன்றாடினான். “தவறு.....தவறு...” என்று சொன்னபடி மேலும் வேகமாக மடவல அவனது கன்னங்களைப் பதம் பார்த்தான்.

அடுத்த பொலீஸ்காரனும் அவ்விடத்திற்கு வந்தான். “உனது வாய் மோசம்” என்று அவன் தனது ரி-56 ஆயுதத்தால் சுபுனின் கைக்கும் தலைக்கும் அடித்தான். உடனே கைத் தொலைபேசி மூலம் “எங்களுக்கு அடித்த ஒருவன் இங்கே இருக்கிறான். ஜீப்பை அனுப்பவும்” என்று பொலீஸ் நிலையத்திற்கு வேறு அறிவித்தான்.

“ஏன் என்னை ஒரு திருடன் போல் நடத்துகிறீர்கள்?” என்ற சுபுனிடம் “நீ எங்களுக்குச் சட்டம் சொல்லித்தர முயற்சிக்கிறாயா?” என்று கிண்டலாகவும் இழிவாகவும் மடவல கேட்டான்.

ஜீப் வண்டியில் வந்த பொலீஸ் உத்தியோகத்தர்கள் அவனது தலையில் இரத்தம் கொட்டும் வரை அடித்தனர். அவன் அணிந்த ரீசேட் இரத்தத்தால் தோய்ந்தது. அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த சந்திரசேன என்ற பொலீஸ் உத்தியோகத்தன் சுபுன் நினைவிழுந்து நிலத்தில் சாயும் வரை தாக்கினான்.

சுபுனுக்கு நினைவு மீளும் போது அவன் மருத்துவமனையிலிருந்தான். அடித்தவர்களெல்லோரும் அவனைச் சுற்றி நின்றனர். குடிபோதையில் சைக்கிளோட்டி விழுந்ததாகவும் அவனிடம் போதைத்தூள் இருந்ததால் கைது செய்ததாகவும் மடவல, டாக்டரிடம் நிகழ்வை விபரித்தான். மடவல பொய் சொல்வதாகவும், பெரும் அநீதியொன்று நடந்ததாகவும், பொலீஸார் தன்னைத் தாக்கியதாகவும் சொல்லி சுபுன் சத்தமிட்டான்.

காயமடைந்த சுபுனை வைத்தியசாலைக்குக் கொண்டு வந்தது யாரென்று டாக்டர் கேட்டபோது, “அவ்வளவு காரியமில்லை. சைக்கிளால் விழுந்தது மாத்திரம் தான்” என்று மடவல மீண்டும் சொன்னபோது, “இது பொய். எனக்குப் பொலீஸார் அடித்தனர். எனக்குக் கடுமையான தலைவலி” என்று சுபுன் சத்தமிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் சுபுனை வெளியெடுத்து பொலீஸுக்குக் கொண்டு சென்று கூட்டில் போட மடவலயால் முடிந்தது. அடுத்த நாள் காலை சுபுன் கூட்டிலிருந்து வெளியெடுக்கப்பட்டு, "இவன் தான் பொலீஸுக்கு அடிக்க வந்தவன். குறைந்த பட்சம் இரண்டு வருடமாவது இவன் சிறையிலிருக்க வேணும்" என்று மடவல கத்தினான்.

மேசையருகே அவனை அழைத்துச் சென்று அவனது பெயர், வேலை செய்யும் இடத்து முகவரி என்பனவற்றைப் பெற்றான். கூடவே எழுதி வைத்திருந்த வாக்குமூலத்திற்கும் கையொப்பம் எடுத்தான். அது சுபுன் கொடுத்த வாக்கு மூலமல்ல. அங்கு வந்த இன்னொரு அதிகாரி, சுபுனின் சாரதி லைசனை கென்ஸல் செய்ய வேண்டுமென்றான். சுபுனின் தொழிலை இல்லாமல் செய்வதே அவனது நோக்கமாகத் தெரிந்தது. அந்தப் பயமுறுத்தலோடு சுபுன் மீண்டும் கூட்டுக்குள் போடப்பட்டான். அன்று உணவு, பானம் எதுவும் கொடுக்கப்படவில்லை.

கூட்டினருகே வந்த சந்திரஸேன தூள் பக்கற் ஒன்றைக் காட்டி, இதையொரு சாட்சியாக முன் வைத்து இரண்டு வருடம் சிறைக்கனுப்ப முடியுமென்று சுபுனிடம் தெரிவித்தான்.

உருவாக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களோடு நீதிவான் முன்னிலைக்கு கொண்டு செல்லப்பட்ட சுபுன் விளக்க மறியலில் அடைக்கப்பட்டான். போதைப் பொருள் வைத்திருப்பு, மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்தல் ஆகிய குற்றச்சாடடுக்கள் அவன்மீது எழுப்பப்பட்டிருந்தன. அடுத்தநாள் அவன் பிணையில் விடுதலை செய்யப்பட்டான்.

சிகிச்சைக்காக சுபுன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். காது, மூக்கு, தொண்டை தொடர்பான விசேட வைத்தியரிடம் செல்ல சிபார்சு செய்யப்பட்டது. பொலீஸாரின் அடி மற்றும் துன்புறுத்தல் காரணமாக தனக்கு தலைவலி, தலை சுற்றல், மயக்க நிலை காணப்படுவதாக சுபுன் தெரிவித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38. காணாமல் போன பென்சில்

**வா**ய்க்கால் அருகே அமைந்த தகரக் கொட்டகையில் கசுன், ஜனித் அவர்களது தாய் மல்காந்தி ஆகியோர் வாழ்ந்து வந்தனர். பிள்ளைகளின் தகப்பன் அவ்வப்போது வீட்டுக்கு வருவார். வரும்போது கொஞ்சம் பணம் கொடுப்பார். இந்தச் சின்னக் குடும்பம் பல குறைபாடுகளுக்கு மத்தியில் தான் வாழ்ந்தது. பல நாட்கள் பட்டினியில் கழிக்க நேர்வதுண்டு. மிகவும் அபூர்வமாகவே பால் தேநீர் கோப்பையொன்று தயாரித்துக் குடிக்க வாய்க்கிறது.

மல்காந்தி சிறுசிறு கூலிவேலைகள் செய்வாள். அவளது உழைப்பு பாணும் தேநீர் சாயமும் குடிக்கவே போதும். ஒரு றாத்தல் பாணைப் பகிர்ந்து சாப்பிட்டு தேநீர் பருகுவது அவர்களது பழக்கம். பிள்ளைகளின் பசிக்கு எந்தவகையிலும் போதாதென்பதை மல்காந்தி அறிவாள். இருந்தாலும் என்னதான் செய்ய?

ஜனித் பன்னிரண்டு வயதாகும் போது பாடசாலை செல்வதை நிறுத்திவிட்டான். பிளாஸ்டிக் பொருட்கள் விற்கும் தள்ளுவண்டிக்காரனின் உதவியாளனாக அவன் மாறிவிட்டான். பலகையால் செய்த பார வண்டியைத் தள்ளுவதே அவனது வேலையாகிவிட்டது. அதற்குப் பதிலாக இருவேளைச் சாப்பாடும் தேநீரும் அவனுக்குக் கிடைத்தது. பெரும்பாலும் பாதையோரமாக நிறுத்தும் வண்டியின் கீழேயே அவனது இரவு கழிந்தது. ஏழு வயதான கசுன் தூரப் பாடசாலையொன்றுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயோடு சென்றான். இடைநடுவில் பழைய கடதாசியில் சுற்றிய பணிஸொன்றை அவள் பேக்கினுள் போட்டு விடுவாள். நடந்து செல்லு கசுனுக்கு, அப்பாமார் செல்லும் சைக்கிளிலோ, மோட்டார் சைக்கிளிலோ செல்லும் நண்பர்களைக் காணக்கிடைக்கும். கால்வலி, கஷ்டம், பசியை மறக்க கசுன் மரங்களுக்கு கல்லடிப்பதுமுண்டு.

ஒருநாள் கசுனை அழைத்து வரச் சென்ற மல்காந்திக்கு அவனது வகுப்பாசிரியையைச் சந்திக்குமாறு அறிவித்தல் கிடைத்தது. வகுப்பறைக்குச் சென்ற அவள், கோபமுற்ற நிலையிலிருந்த ஆசிரியையைச் சந்தித்தாள். கசுன் இன்னொரு பிள்ளையின் பென்சிலைக் களவெடுத்துள்ளதாகச் சொன்னாள். கசுனின் பையைப் பரிசோதித்த அவளால் அவனுக்குச் சொந்தமற்ற எதனையும் காணமுடியவில்லை. பென்சில் எதுவுமில்லை என்றாள். கோபத்தில் ஏசிய ஆசிரியை அதிபரைப் போய்ச் சந்திக்குமாறு சொன்னாள்.

கதையைக் கேட்டுக் கொண்டிருந்த அதிபர், களவெடுப்பவர்களை இங்கு வைத்திருக்க முடியாதென்றார். வேறு பாடசாலையொன்று தேடிக் கொள்ளுமாறு சொன்ன அவர், எழுத்துரு ஒன்றில் கையொப்பமிடுமாறு மல்காந்தியை வற்புறுத்தினார். சுயவிருப்பத்தின் பேரில் பிள்ளையை விடுவித்துக் கொள்வதாக அந்தப் பிரதியில் எழுதப்பட்டிருந்தது. இதன் பிரதிபலன் என்னவென்பதைப் புரிந்து கொள்ளாமலே மல்காந்தி அதிலே கையொப்பமிட்டாள். அதன் பின்னர் அதிபர் விடுகைப் பத்திரத்தைக் கையளித்தார்.

அவளது பிள்ளைக்கு இன்னொரு பாடசாலை தேடிக் கொள்ள முடியவில்லை. ஆறு மாதமாக அவன் பாடசாலைக்குப் போகவில்லை. வலயக் கல்வி அலுவலகம், மாகாணக் கல்வித் திணைக்களம், பெண்கள் மற்றும் சிறுவர் செயலகம், மனித உரிமை ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபர் காரியாலயம் என்பவற்றுக்கு மல்காந்தி நிகழ்வைக் குறிப்பிட்டு எழுத்துமூலமாக முறைப்பாடு செய்தாள். எழுத வாசிக்கத் தெரியக்கூடிய அடிப்படைக் கல்வியைப் பிள்ளைக்குப் பெற்றுக் கொடுப்பதே அவளது தேவையாகவிருந்தது.

குறித்த நன்நடத்தை அதிகாரிக்கு எழுத்து மூலமாக முறைப்பாடு செய்த அவள், ஆலோசனை பெறுவதற்காக அந்த அதிகாரியை நேரில் சந்தித்தாள். தாயின் விருப்பின் பேரிலேயே மாணவனை விலக்கியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் சொல்வதாகக் குறிப்பிட்ட அவர், பிள்ளைக்கு வேறொரு பாடசாலை தேடித்தர தங்களால் முடியாதெனக் கூறினார். மல்காந்தி அதோடு நின்றுவிடவில்லை. தனக்கும் பிள்ளைக்கும் நடந்த அநீதிகளை மீண்டுமொரு தடவை நிர்வாகிகளுக்கு எழுத்து மூலமாக அறிவித்தாள்.

**பாடசாலை விடுகைப் பத்திரத்தைத் தாயிடம் கொடுத்து இன்னொரு பாடசாலை தேடிக் கொள்ளுமாறு அதிபர் சொன்னது சரியான நடைமுறையா? பென்சிலைக் களவெடுத்திருந்தாலும், அதிபர் ஒருவர் இவ்வாறான நடவடிக்கையெடுப்பது சரியானது தானா?**

**தீர்ப்பு உங்கள் பொறுப்பு**

# எமது தமிழ் வெளியீடுகள்:

1. பொலீஸாரும் சட்ட விதிகளும்
2. இம்சையற்ற சிறுவர் வாழ்வு
3. அமைதியின் குரல்
4. பாடசாலையிலிருந்து துஷ்பிரயோகம்... துர்நடத்தைகளை ஒழிப்போம்

ஜனசங்சதய

81:2 – ஆதர் வீ தியெஸ் மாவத்தை

பாணந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39. சட்டம் யாருக்கு?

நன்ஸிக்கு வயது அறுபத்தைந்து. பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்ட கணவன் கட்டிலோடு கிடந்தார். இளையமகள் ரமணி பிள்ளைகளுக்கு சாத்துமாத்து செய்து கொண்டிருந்தாள். இரவுக் காவல் வேலை முடிந்து வந்த மகன் சனத் குளித்துக் கொண்டிருந்தான்.

காலை எட்டு மணியிருக்கும். கணவனுக்கு மருந்தெண்ணெய் பூச மூத்தமகள் வரும்வரை நன்ஸி பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சனத் இருப்பது இங்குதானா?" என்று கேட்டபடி பொலீஸ்காரர் இருவர் வீட்டுக்குள் வந்து பாய்ந்தனர்.

மகன் வேலை விட்டு இப்பொழுதுதான் வந்து குளித்துக் கொண்டிருப்ப தாக நன்ஸி தெரிவித்தாள். அவளை ஒரு பக்கமாகத் தள்ளிக் கொண்டு சென்ற பொலிஸ்காரர்கள் குளியலறைக் கதவைப் புரட்டிக் கொண்டு உள்ளே புகுந்து நிர்வாணமாகக் குளித்துக் கொண்டிருந்த சனத்திற்கு இரக்கமற்ற விதமாக அடிக்கத் தொடங்கினர். தடியொன்றினால் தாக்கி அவன் கீழே விழுந்த போது காலால் உதைத்து உடலுக்கு மேல் ஏறி வதைக்கத் தொடங்கினர். அவனது மறைவுறுப்புக் காயப்பட்டதால் ஏற்பட்ட வேதனையைப் பொறுக்க முடியாமல், அடிக்க வேண்டாமென்றும் தன்னைக் காப்பாற்றும்படியும் சத்தமிட்டான்.

அதற்கு மேலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாத நன்ஸி பொலீஸாரின் தாக்குதலைத் தடுக்க முயற்சித்தாள். அவளுக்கும் அடி விழுந்தது. அவள் மயக்கமுற்று விழுந்தாள். தன் சகோதரனைக் காப்பாற்றுவதற்காக ஓடிவந்த ரமணி, அடித்துக் கொண்டிருந்த ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீஸ்காரனின் தடியைப் பிடித்திழுக்க முனைந்தாள். அவ்வேளையில் தப்பித்துக் கொண்டு சனத் அவ்விடத்தால் ஓடினான்.

சனத்தின் அக்கா வீட்டுக்கு வரும்போது அம்மா மயக்கமுற்று விழுந்திருப்பதைக் கண்டாள். எடுத்த முயற்சிகளால் மயக்கம் தெளியாததால் நோயாளியை முச்சக்கர வண்டி மூலம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் இடையில் காவல் நின்ற பொலீஸ்காரர்கள் நோயாளியைக் கொண்டு செல்லவிடாமல் தடுக்க முயற்சித்தனர். அன்றைய தினமே சிலமணி நேரம் கழித்துவந்த பொலீஸார், ரமணியையும் அவளது இளைய பிள்ளையையும் கைது செய்தனர்.

தனது மருமகனோடு மோட்டார் சைக்கிளில தப்பிச் சென்று கொண்டிருந்த சனத், ராணுவச் சோதனைச் சாவடியில் பொலீஸாரிடம் சிக்கினான். அவர்கள் இருவரையும் நிலத்தில் உருட்டியபடி எட்டுப் பொலீஸ்காரர்கள் மிகக்குரூரமான முறையில் கையாலும் காலாலும் தாக்கினர். "நாய்களுக்கு அடிப்பது போல் மனிதர்களுக்கு அடிக்கலாமா?" என்று ராணுவ வீரர்கள் எச்சரித்தனர்.

இருவரும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு சுயநினைவு போகும் வரை சனத் தாக்கப்பட்டான். கூட்டுக்குள் நின்ற ரமணியும் அவளது பிள்ளையும் மிகுந்த அதிர்ச்சியோடு இதனைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அடுத்தநாள் சனத் வைத்தியாசலைக்குக் கொண்டு செல்லப்பட்டான். குடும்பத்தவர்கள் பார்க்க வந்தபோது சனத் தாக்கப்பட்ட விதத்தை எடுத்துச் சொன்னான்.

தாயும் மருத்துவசாலையில் தான். குடும்பத்தவர்கள் அவளைப் பார்க்கச் செல்லும் போதெல்லாம் டிக்கட் வெட்டிக் கூட்டிச் செல்லுமாறு பொலீஸார் அச்சுறுத்தினர். நோயிலிருந்து மீள முன்பே அவளையும் கைது செய்து பொலீஸ் கூட்டில் போட்டதாகப் பின்னர் அறியமுடிந்தது.

சனத், தாய், ரமணி, சனத்தின் மருமகன் ஆகியோர் மீது குற்றப்பத் திரம் தாக்கல் செய்து அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். ஆயுதங்களை வைத்திருந்தமை, பொலீஸாரைத் தாக்கியமை, பொலீஸ் அதிகாரிகளின் கடமையைக் குழப்பியமை என்பன அவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்களாகும்.

மனித உரிமை ஆணைக்குழு, தேசிய பொலீஸ் கமிஷன், பொலீஸ்மா அதிபர் அலுவலகம் என்பவற்றுக்கு முறைப்பாடு முன்வைக்கப்பட்டது. அதன் பின்னர் பொலீஸாரின் பயமுறுத்தல், எச்சரிக்கை என்பன அதிகரித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தவர்கள் நீதிமன்றச் சூழலில் நின்றபோது அங்கு வந்த பொலீஸ்காரன் ஒருவன், மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் முறைப்பாடு செய்ததையிட்டு கடுமையாக ஏசி எச்சரித்தான்.

இன்னொரு நாள் நீதவான் நீதிமன்ற வளாகத்திற்கு வந்த பொலிஸ் நிலைய அதிபர் குடும்ப அங்கத்தவர்கள், சட்டத்தரணி, மேலும் நீதிமன்றத்துக்கு வந்திருந்தவர்கள் முன்னிலையில் பின்வரும் வகையில் பயமுறுத்தல் விடுத்தார்.

"ஆண்கள் இருவரும் விடுதலையானால் அவர்களைச் சுட்டுக் கொல்லுவோம்"

"அவர்கள் வீட்டுக்குத் தீ வைப்போம்"

"அல்லது ஊரைச் சேர்ந்த ஒருவனை அனுப்பி கத்தியால் குத்திக் கொலை செய்வோம். இதற்கு சாராயம் ஒரு போத்தலும், கூரான கத்தியும் தான் தேவை"

"இந்த நிகழ்வு நடக்கும்போது நான் லீவிலிருந்தேன். நான்கு நாட்களின் பின்னர் தான் வந்தேன். நாலுபேரையும் சுட்டுக் கொல்லுமாறு நான் எங்கள் ஆக்களுக்கு டெலி.:.போன் பண்ணிச் சொன்னேன்."

"நான் உங்கள் வீடுகளைத் தேடியறிந்து வைத்துள்ளேன்"

"எந்த இடத்திற்கும் போய் முறைப்பாடு செய்யுங்கள்"

**பொலீஸார் கடமையின் பெயரால் எந்தளவுக்குத் துன்புறுத்தலைப் பயன்படுத்துகிறார்கள்? பொலிஸ் அதிபர் உள்ளிட்ட அதிகாரிகள் எவ்வளவு பயமுறுத்தல் வார்த்தைகளைப் பாவிக்கிறார்கள்?**

**'குற்றச் செயல்களுக்கும் வன்முறைக்கும் பயமின்றி நம்பிக்கையோடு வாழக்கூடிய சாதாரணச் சூழலை நோக்கி' என்ற பொலீஸ் தரிசன பிரசுரத்தோடு, ஒப்பிட்டுப் பார்க்கும் போது பொலீஸாரின் சொல்லும் செயலும் எந்தளவுக்குப் பொருந்துகின்றது?**

**நாங்கள் தீர்ப்பை உங்களிடம் பொறுப்பளிக்கிறோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் மூலை முடுக்குகளில் நடைபெறும் ஆனால் எவரது கவனத்தையும் ஈர்க்காத, உண்மையான மனிதர்களின் உண்மைக் கதைகளை இந்நூல் வெளிப்படுத்துகிறது.

கலாசாரம், குணநலன், நீதி நேர்மை, மத பண்பாடு, சுருக்கமாகச் சொன்னால் எப்படிப்பட்டதொரு நாட்டில் நாம் வாழ்கிறோமென்பதை இந்நூல் சொல்லும் சம்பவங்கள் உணர்த்துகின்றன.


ஜனசங்சதய

81/2, ஆதர் விதியெல் மாவத்தை,
பாணந்துறை.
தொபே/பெக்ஸ்: 0382235191
ஈமெயில் : manava@sltnet.lk

ISBN: 978-955-1687-27-4

விலை-195/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org